R2
N41

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

Digitized by
EMORY UNIVERSITY

Original from
EMORY UNIVERSITY

M. Winslow.
Binder,
A. M. Jaffna.

2/-

Saml. F. Green
1850

CASE MEMORIAL LIBRARY
HARTFORD
SEMINARY FOUNDATION

Digitized by
EMORY UNIVERSITY
Original from
EMORY UNIVERSITY

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.3000000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

Pitts Theology Library
Emory University
Atlanta, Georgia 30322

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY

700 copies.
700 copies.

# நியாய இலக்கணம்.

## ELEMENTS OF LOGIC.

இந்நூல்

தமிழிலும் இங்கிலிசிலுமுள்ள

நியாய நெறிகளின் அரிய விதிகளை

ஒருசார் விளக்குகின்றது:

இதனை

மூலமும் உரையுமாகச் செய்தவர்

வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையில் உபாத்தியாயர்

வட்டுக்கோட்டை வேளாளன்,

முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை

ALIAS

WILLIAM NEVINS.

JAFFNA:

AMERICAN MISSION PRESS.

1850.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

1850
NEVI
R2
N41

# PREFACE.

The original design of this work is to initiate the Hindu mind in the principles of both the Aristotelian method of syllogistic reasoning and the Baconian system of induction.

There is generally felt, among the natives who know little or nothing of the English language, a want of the knowledge of the principles of sound Logic; also an inability to follow up a train of reasoning.

There is also felt, among foreigners who speak the English language and have much to do with the natives, and among the natives who have been educated in European sciences, a deficiency in expressing the principles and conducting the process of reasoning in Tamil.

It is hoped that this work will in some measure remedy these deficiencies and qualify Hindu mind to reason on sound principles.

WILLIAM NEVINS.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

# சபைவந்தனம்.

## எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அருங்கலதம்பெரும்பயனோர்ந்தறன்றேர்ந்துமறன்றீ
ர்ங்-தகிலமுதற்சுயம்பரமீதகத்தினன்புகூர்ந்து
இருங்கலசெம்பொருள்வளமீங் திருடுரந்துதெருடங்-
தெமையிகத்திலடிமைபுரந்திடுங்குரவர்பதங்கள்
பெருங்கலசோன் முறையுளத்துப் பெரிதிருத்திப்ப
ன்னூற்- பெருக்கலசெய்தமிழ்க்கடலங்கரைக்கவண
செய்பெரியோர்
தருங்கலகள்பணிவிலங்கமனம்வாக்குச்சிரத்தாற்-
றணியாதுதித்தவனிமிசைநூல்சொற்றிடுவாம்.

## பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகினிடைசாதிமணியொடுபோலிமணிபுரையும்
உலவுவைதர்ப்பநடையினெடுகவுடநடைசிவணும் உ
ரைவாச்சியத்தொடுவியங்கியமுறழ்ந்து மருவும்
இலகியசொயஞ்சமயமோடிதரசமயங்களிகல்செயு
ம் இலக்கணமுடன்இலக்கவணபயின்றெழுதும் எல்லி
னுடனல்லுலவும்இவையெங்கணும்வழக்கே
அலகினூல்அக்கரபதார்த்தங்கடுறைகண்டலங்கார
சந்தரசமே யவனத்துங்தெளிந்துணரும் அறிஞர்நூலோ
டுவேறியநூல்விரவினன்யமன்றே
விலகிச்சொலிக்குநவரத்னநிகர்வித்வசனர்மெய்மகி
ழ்வோடுந்தழவவேவெற்றுரையிநூலவாய்விட்டேனீ
வாயெச்சிறேனென்றுமெச்சுமுலகே.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

இவ்வாசிரியருள், மகாபுத்திவிற்பத்திமானாகிய உவெற்
றிலி என்னும் ஆசிரியரின் நூற்கருத்துக்களே முக்கிய
மாய் இந்நூற்கு ஆதாரமாம். ஆயினும், தமிழ்நூல்களி
லும் இங்கிலீசுநூல்களிலுமுள்ள செழும்பொருளவாய
கருத்துக்கள்இந்நூலுள் யாண்டுங்காணலாம்போலும்.
இந்நூல் அந்தாதித்தொடையான செய்யுளும் செய்யு
ட்குரையும்பெற்றுவரும் "ஒற்றுநிலையற்றிணையசை
மருவலும், பெற்றுவிளங்கனியருகலும்பிறவும், உற்று
மொழுகுங்கலித்துறை ஒருசார்" எனும்விதியை ஒரோ
விடத்துவிரவியுஞ் சிலசெய்யுள் இந்நூலுணிற்கும். "மு
தனற்சீரும் வெண்டளைபிழையாக் கடையொருசீரும்
விளங்காயாக" எனும்விதிக்குவிலக்கெனக்கருதிச் செ
ய்யுட்குவிரைவிலே குற்றங்கூறாது வழுவமைதிவிதிகளை
யுங்கருதிக்குணங்கூறுவார் கற்றடங்கியசுத்தவித்வசன
ரேயாம். குற்றந்தெரிப்பதே முற்றுங்கருமமாய்க்கொளி
ன் எவரும் யார்மேலுங்குற்றந்தெரிக்கலாம். மாந்தர் எ
வருஞ்சிற்றறிவினர்தாமே தெரித்தகுற்றங்களிலுங்குற்
றந்தெரிப்பாருண்டே. இந்நூலுள் சொல்லிலும் புணர்
ச்சியிலும் தொடையிலும் பொருளிலும் பொருட்புணர்
ச்சியிலும் பொருட்செழுமையிலும், ஆம் -சொல்வளம்
பொருள்வளம் இரண்டிலும் வழுக்களும்வரும்போலே;
வரலாமே; வரினும் "குற்றங்களைந்தும் குணம் அளை
ந்தும்வாசித்தல் கற்றறிந்தமாந்தர்கடன்". நூலைச்செ
ய்யுமிடத்து நூல்செய்தோரே அந்நூலுணர்த்தும்பொரு
ளை நன்குணர்ந்தவிற்பத்திமான்களென்று யாண்டும்
முடியாது. விற்படைக்கலத்தை நன்குசமைத்தும் வி
ல்லாச்சிரமமும் சங்கிராமலக்கணமும் வில்வித்தையு
ம் சற்றுமறியாதாருமுண்டே. அபிநயநயமாய் நடனம்ப
யிற்றும் ஆசான் அம்முறையே பிறர்க்கு வினோதமாய்த்
தான்நடிக்க ஏலாமையுமுண்டே. தம்மாலியன்ற ஒரு
பொருளைப் பிறர்க்கு உபயோகமாய் முடித்துத்தருவது
லோகோபகாரத்தைக்கருதுவோரெவர்க்கும் இயற்கை
யென்பரே. அங்ஙனங்கருதிமுடித்தவிடத்துப் பிழைப
டினும் வழுவலவெனத்தழுவுவரென்பரே. மைந்தர் வ
ழுக்கி இழுக்கிய இடத்துத் தந்தையர் இழிப்பதுவழக்கா.
சிற்றறிவினேன் பேதைமையால் இழைத்தநூல் குற்ற
மேகுற்றமாயினும் மேல் இனிப்புரிவதென்னோ!

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

சைவசித்தாந்தம் சைவம் பாசுபதம் மகாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம் வைதீகசைவம் காபாலம் லோகாயதம் சவுத்திராந்திகம் யோகசாரணம் ஆத்துமிகம் வைபாடிகம் நிகண்டவாதம் மாயாவாதம் பாற்கரியம் நிரீச்சுரசாங்கியம் பஞ்சராத்திரம் நையாயிகம் வைசேடிகம் வைஷ்ணவம் முதலவாய்ப் பரதகண்டத்துவழங்காநின்ற சமயகோட்பாடுகளையும் அச்சமயங்களிற்சிறந்த பதார்த்தலட்சணங்களையும் இயன்றளவேனும் மெய்மை பொய்மைதெளியும்படி, அனுமானப்பிரமாணத்தாலேயும் நிச்சயம்பண்ண வேண்டியதாதலானும், இச்சமயங்களுள் ஒன்றன் கோட்பாட்டை ஒன்றுநியாயத்தால் நிராகரிக்குமிடத்து அங்நிராகரணமெய்மைபொய்மையைத் தெளியவிளங்கவேண்டியதாதலானும்,—நியாயஇலக்கணநூலொன்று செய்வது தகாதன்றெனக்கண்டாம்.

தர்க்கம் சம்பிரதாயம்முதலிய கோடியமச்சங்கள் செறிந்திருக்குஞ் சமயநூல்களாகுங்கடலிலே போலிமுதலியதிரைகள் நிரந்தரம் புரண்டுருண்டெறிகின்றனவாதலின் நியாயஇலக்கணமெனும் நாவாயிலேறி யுத்தியெனும் மாலுமியின் வழிபட்டொழுகுவோர்மாத்திரமே உய்ந்துதப்புவார். யுத்திநெறியையிகந்து தத்தம்மனஞ்சென்றுழன்றபுத்தியின்பாற்படர்வோர்-இருட்பெருங்கடலுள் யாமத்தெறிமருத்திடைப்பட்டாங்கு பொருட்பெருங்கடலாம்வெள்ளம் புடைதோறுமலைப்ப வெய்த்து மருட்பெருங்கடலலநீங்கும் வண்ணமொன்றறியாது—இகபரயதார்த்தபிரயோசனங்களை இழந்துமயங்குவார். தம்மை விவேகாத்துமிகளாயுயர்த்தும் யுத்தியைப்பேணுவோரே தம்மைப்பேணுவோர். யுத்தியைப்பேணவிநும்பின், யுத்தியின் இலக்கணங்களைக்கற்றுணர்க. நியாயஇலக்கணம் யுத்தியிலக்கணங்களை உணர்த்தும்.

நூல்கள்கற்கப்புகுவோர் நூலினுணர்த்தப்படும்பொருள்களெவர்க்கும் வெளிப்படையான இயற்பொருள்களாயிருக்கவேண்டுமெனக்கருதுவது அபத்தமாம். தெளிந்த இயற்பொருள்களைக்கற்க வேண்டுவதில்லையே. தெளியாதபுதுப்பொருள்களேகற்கத்தகுந்தது. நூற்பொருளின் அருமைபோலேயே அதன் பெருமையும் இருக்கும். கற்க அரியநூலென்றுவிடாது இந்நூலுள் உழை

ப்பரேல் அவர் புந்தி எந்நூலுளும் நுளையவல்லதாம்.

இந்நூலுள் உணர்த்தஎடுத்துக்கொண்டபொருள்கள்
தனிமானதக்காட்சி, தொடர்மானதக்காட்சி, பொதுப்
பதம், சிறப்புப்பதம், அன்னுவயயூகம், வியதிரேகயூகம்,
சாமானியான்வயதாட்டாந்தம், சாமானியவியதிரேக
தாட்டாந்தம், விசேடான்வயதாட்டாந்தம், விசேடவி
யதிரேகதாட்டாந்தம், சுத்தசுயம்பிததாட்டாந்தம், வி
ரோததாட்டாந்தம், தாட்டாந்தஇடமாற்று, சுயம்பிதநை
யாயிதம், தத்துவசூத்திரம், நையாயிகவிதிகள், நியாயத்
துறை, மத்தியபதநிலை, தன்மைத்தாட்டாந்தம், சம்பா
விததாட்டாந்தம், சங்கேததாட்டாந்தம், சங்கேதநை
யாயிதம், வியோகதாட்டாந்தம் வியோகநையாயிதம்,
சங்கரசங்கேதம், நையாயிதத்தொகை, தொடையம்,
வேதனுமானம், சாத்தியாபாசம், சாதனுபாசம், ச
ம்பந்தாபாசம், முதலியனவாம். இந்நூற்கருத்துகளுஞ்
சொற்பிரயோகங்களும் இலைமறைகாய்போலே தமிழ்
நூல்களுள் ஆங்காங்குக்காணலாம். நூல்கள்பலவற்
றுள்ளும் மறைந்துகிடந்தபொருள்களையே இங்ஙனம்
ஒருங்குசமைத்து ஒருநூல்சமைத்தனம்.

தமிழ்நூல்களை முற்காலத்து அரசர்முதலியபெரியோ
ர் பரிபாலனஞ்செய்தும் அவ்வாறுகல்வியை விருத்தி
செய்தும் ஆகவேமாந்தரின் அஞ்ஞானத்தை ஒருவாறு
துரத்தியும் அதனுல் தர்மம் நீதிமுதலிய நன்னெறிகளை
எவர்க்கும் விளக்கியும் அவரை அந்நெறிகளில் நடத்
தி இன்பமேவிளைவித்தும்வந்தனர். தற்காலத்திலோ,
அவ்வகையானசற்காரியங்களிலே தலைப்படுவோர்சி
லர் அல்லது இலர். தமிழிலே சிற்சிலநூல்களைச் சில
ர்தம்மாலியன்றவாறுசமைத்து அந்நூல்களை லோகோ
பகாரமே முக்கியவிடயமாய்க்கருதிப் பகிரங்கஞ்செய்யு
ங்காலத்து அந்நூற்பிரதிகளைச்சொற்ப கிரயத்துக்குவா
ங்கி அதனுல் நூல்செய்தோரையும் நூல்கற்போரையு
ம்பிறரையும் உற்சாகப்படுத்துவோரே தற்காலத்து ஒ
ருவாறுதமிழைப்பிரபலஞ்செய்வோராம்.

முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

## TECHNICAL TERMS DEFINED IN ENGLISH.

அசை Expletive.
அடை Adjunct; Syncategorematic.
அபரம் Infima Species.
அபாவம் Negation.
அயற்சார்புச்சாட்சி Circumstantial evidence.
அர்த்தாபத்தி Illation; an obvious inference.
அனுபவம் Experience.
அனுபவானுமானம் Moral reasoning.
அனுமானம் Deduction, inference. 2 Reasoning. 3 Reason.
அனுமானுனுமானம் Double inference.
அனுமானித்தல் } To infer, to deduce.
அனுமித்தல் }
அனுமிதம் Deduction, conclusion.
அன்னுவயதாட்டாந்தம் Affirmative proposition.
அன்னுவயம் Affirmative. 2 Analysis.
ஆட்சேபம் Objection.
ஆதாரம் Principle, basis.
ஆபாசம் Fallacy.
ஆய்தல் To investigate and collect as facts.
இடமாற்று Conversion of proposition.
இந்திரியக்காட்சி Perception. 2 Sensation.
இந்திரியம் Sentient organ.
இலக்கணம் Principles of a science.
இனம் Species.
ஈதல் To distribute as a term.
உதாகரணம் Example.
உதாகரித்தல் To illustrate by examples.
உத்தரசாதனம் Minor premise.
உத்தரபதம் Minor term of the conclusion.
உபநயம் Reason as applied to the question.
எதிர்மறை Negative.
ஏது The reason i. e. minor premise if placed after its conclusion. 2 The antecedent of a conditional proposition.
ஏதுவாபாசம் Fallacy of the reason.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472 Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

கணிதானுமானம் Demonstrative reasoning.
கதார்த்தானுமானம் Reasoning on facts.
கமனம் Attention.
கரணம் Mental operation.
கருஷித்தல் To attract.
கலை Science.
காரணானுமானம் A priori reasoning.
காரியம் Effect. 2 The consequent of a conditional proposition.
காரியானுமானம் A posteriori reasoning.
குணவிரி Comprehension of a term.
கேவலவியதிரேகானுமானம் Pure categorical syllogism of a negative conclusion.
கேவலான்வயானுமானம் Pure categorical syllogism of an affirmative conclusion.
சகசம் Instinctive as the conviction of certain first truths.
சக்கிரகம் Arguing in circle.
சங்கரசங்கேதம் Dilemma.
சங்கேததாட்டாந்தம் Conditional proposition.
சங்கேதநையாயிதம் Conditional syllogism.
சந்து Copula.
சம்பந்தம் Relation, connection. 2 Consequentia.
சம்பாவிதநையாயிதம் Hypothetical syllogism.
சாதனம் Premises of a syllogism.
சாதி Genus.
சாதித்தல் To deduce, to conclude. 2 To apply.
சாத்தியம் Conclusion of a syllogism.
சாமானியதாட்டாந்தம் Universal proposition.
சார்பு Tendency of a body.
சித்தம் } சித்தாந்தம் } Proof, demonstration.
சிலேடை Ambiguous as a term.
சிறப்புப்பதம் Singular term.
சுயம்பிததாட்டாந்தம் Categorical proposition.
சுயம்பிதநையாயிதம் Categorical syllogism.
சுயம்பிதம் Categorical, absolute.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

சுவார்த்தானுமானம் Inferring, i. e. ascertainment of the truth to satisfy one's own mind.
ஞாபகம் Memory.
தண்டாபூபிகானுமானம் A fortiori reasoning.
தத்துவம் Axiom.
தத்துவசூத்திரம் Rule of axiom, dictum.
தாட்டாந்தரம் } Proposition.
தாட்டாந்தம் }
திட்டாந்தம் The principle, i. e. major premise if placed after its conclusion.
துல்லியம் Analogy.
துல்லியானுமானம Analogical reasoning.
துறை Mood of a syllogism.
தொடையம் Sorites.
நிகமனம் Question after it is proved.
நியாயம் Argument. 2 Reason. 3 Syllogism. 4 Reasoning.
நியாயித்தல் To argue; to reason.
நிருவிகற்பம் Uniform as a relation or sequence
நிலை Figure of a syllogism. [reduction.
நேர்முகம் Direct, ostensive as a reasoning or
நையாயிதத்தொகை Enthymeme.
நையாயிதம் Syllogism.
பக்கப்போலி } Fallacy of the question.
பட்சப்போலி }
பக்கம் } Question to be maintained.
பட்சம் }
பட்சாபாசம் Fallacy of the question.
பதம் Term.
பதார்த்தவிகற்பம் Categories.
பரம் Summum genus.
பராபரம் Subaltern.
பரார்த்தானுமானம் Proving, i. e. establishment of the truth to the satisfaction of others.
பரியாயப்பெயர் Technical name.
பிரஞ்ஞை Instinctive conviction.
பிரதிஞ்ஞை Question to be maintained.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

பிரதிஞ்ஞாவிபரீதம் Ignoratio elenchi.
பிரதிவாதி Opponent.
புணர்த்தல் To compare as two ideas.
புணர்ப்பு Association of ideas. 2 Conviction.
புலன் Sensation. 2 Sentient organ.
பூர்வசாதனம் Major premise.
பூர்வபதம் Major term of the conclusion.
பொதுப்பதம் Common term.
பொருள்விரி Extension of a term.
பொறி Sentient organ.
போலி Fallacy.
மத்தியபதம் Middle term. [reduction.
மறைமுகம் Negative; indirect as a reasoning or
மனோகரணம் Intellectual operation. [sition.
மாற்றுத்தாட்டாந்தம் The converse of a propo-
மானதக்காட்சி Simple apprehension; idea.
2 Perception i. e. an association, between an impression made upon either of the sentient organs and the object concerned in producing *it*.
மூலதாட்டாந்தம் Exposita.
யுத்தி Reason. 2 Reasoning.
யுத்தித்தல் To reason, to argue.
யூகம் Judgment.
வாதனை Recollection.
விசேடகம் The predicate of a proposition.
விசேடகித்தல் To predicate.
விசேடதாட்டாந்தம் Particular proposition.
விசேடியம் The subject of a proposition.
வித்தை Art.
வியதிரேகதாட்டாந்தம் Negative proposition.
வியதிரேகம் Negative.
வியோகதாட்டாந்தம் Disjunctive proposition.
வியோகநையாயிதம் Disjunctive syllogism.
விரோதம் Opposition of proposition.
வேதனம் Induction, i. e. the process of investigation and collection of facts.
வேதனானுமானம் Inductive reasoning.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

# நியாய இலக்கணம்.

# LOGIC.

## தற்சிறப்புப் பாயிரம்

பரமகடவுள் பதமலர் இறைஞ்சி
மொழிகுவன் நியாய இலக்கண முறையே.

க. உலகம்புகழநியாயஇலக்கணம்யுத்தியதன்
கலைவித்தையென்பநியாயநடையினுக்காதரமாய்
உலவமிலக்கணமேதெளியுங்கலைவித்தையென்ப
தலமின்றுபுந்தியனுமிக்கவேவிதியாய்ந்திடுமே.

இக் கலித்துறைச் செய்யுள், நியாய இலக்கணம் என்பது இன்னதென்றும், அதன் பாகுபாடு இத்துணை என்றும் இன்னவென்றும், உணர்த்துகின்றது.

இதன்பொருள். உலகம்புகழ நியாய இலக்கணம்யுத்தியதன் கலைவித்தையென்ப-(பலரும்) புகழுகின்ற நியாய இலக்கணம் என்பது யுத்தித்தலின் கலையும் யுத்தித்தலின் வித்தையுமாம் என்று (கல்விகேள்விகளால்) உயர்ந்தோர் சொல்வார்.

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd
Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY

டுத்துக்கொண்ட பொருள்களின் சார்புகளையே முக்கி
யமாய் விளக்கி, அவ்வப் பொருட்கேற்பச் சிற்பம் சங்கீ
தம் யாப்பு இலிகிதம் வைத்தியம் கணிதம் முதலிய பல
கலைத் துறைகளாய் விரியும். நியாய இலக்கணம் எனு
நூலானது நியாயிக்குங்காற் புந்தியில் நிகழும் யுத்தி ந
டையை அன்னுவயஞ் செய்துதரும்; தர்வே, "நியாயந
டையினுக் காதாரமாய் உலவும் இலக்கணமே தெளி
யும்"; அல்லாமலும், வழுவின்றி அனுமானஞ் செய்ய
விதிகளையுந் தரும். கச-ம். செய்யுளின் கீழே இவ்வு
ரைத் தொனிப்பு நன்குவிளங்கும்.

இந்நூலுள் நியாயஇலக்கணத்தைக் கலையாகவும்
வித்தையாகவும் உரைப்பாம். இவ்வாறேசங்கீதம் சிற்
பம் வைத்தியம் முதலிய சாத்திரங்களனைத்தும் கலையு
ம் வித்தையுமாய் உணர்த்தப்படும் என்றறிக.

உ. ஆயினியாயித்தலிற்றொடர்பாருமனோகரணம்
ஏயுஞ்சுமானதக்காட்சியும்யூகமும்யுத்தியுமாஞ்
சாயுஞ்சுமானதமிந்தியக்காட்சிதனைநிகர
மேயமனத்தின்விடயக்கருத்துதொடர்தனியே.

இ—யுள், நியாயித்தலில் அமைந்து கிடக்கி
ன்ற மனோகரணங்கள் இத்துணையென்றும்,
அவற்றுளொன்றாகிய மானதக்காட்சி என்பது
இன்னதென்றும்,-அதன்வகை இத்துணையெ
ன்றும், உணர்த்துகின்றது.

இ—ள். ஆயின்-ஆராய்ந்துரைக்கின்; நியாயி
த்தலிற்றொடர்பாரு மனோகரணம்--நியாயம்
பேசலோடொற்றுமை நயம் நிறைந்த மனத்
தொழில்களாவன; ஏயுஞ்சுமானதக்காட்சியும்
யூகமும் யுத்தியுமாம்-(இந்திரியக் காட்சியுட
னே ஒருவாறு) இயைந்த தெள்ளிய மானதக்
காட்சி, யூகம், யுத்தி எனும் மூன்றுமாம்.

சாயுஞ்சு மானத மிந்தியக்காட்சி தனை நிகர
மேயமனத்தின்விடயக் கருத்து-(மனோகரண

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

ம் மூன்றனுள் முதலில்) வரும் *மானதக்கா ட்சி என்பது பஞ்சேந்திரியங்களால் உறுங்கா ட்சியை ஒருவாறு நிகர்ப்ப, புந்தியிலே விடய த்தைப்பற்றியுள்ள கருத்தேயாம்.

தொடர்தனி-(மானதக்காட்சியானது) தொ டர்மானதம் தனிமானதம் என்றிருவகையா ம்.—என்றவாறு.

சு, என்பது நல்ல எனும் பொருடரும் ஆரிய உபசர்க்கம்.

நியாயித்தலிற் றொடர்பாரு மனோகரணம் மூன்று என நுதலவே, ஞாபகம் வாதனை புணர்ப்பு முதலிய கரண ங்களும் அமையும் என்கும்; ஆயினும் இங்ஙனம் எடுத் துரைத்த முக்கரணங்களுமே நியாயம் பேசலோடொ ற்றுமை நயம் நிறைந்தன என்பதை இந்நூலுள் யாண் டுங் கண்டுகொள்க.

சடப்பொருள்பால் விரவுஞ் சத்தம் பரிசம் ரூபம் ரச ம் கந்தம் என்பன நிரலே நமது சிரோத்திரம் தொக்கு சட்சு சிதுவை ஆக்கிராணம் எனும் பஞ்சப்பொறிகளா கிய இந்திரியங்களில் உறுத்துங்கால், நமது புந்தியிலே (புந்திபிறபொருளில் அழுந்தாதிருக்கின்) புலன் என்னும் ஒரு விகாரம் பிறக்க, அந்தப் புலன் காரணமாக அத னைப் பிறப்பித்த புறவிடயத்தைப் புந்தியானது அங்கே ரங்காண்டலே இந்திரியக்காட்சி†; இக்காட்சியானது த ன்னைப் பிறப்பித்த புறவிடயம் பொறியில் மருவாது நீங் கின பின்னரும் புந்தியிலே நிகழின், அதற்கு மானதக் காட்சி என்று பெயர்.

---

*"இந்திரிய ஞானமைம்புலஞ் சார்ந்துயிர்க்கண்மய ர்வற வந்தஞானம் மானதக்காண்டலாமே" என்று சி வஞானசித்தி அளவையிலே உரைத்திருக்கின்றது.

†இந்திரியமென்னும் பொறிகள் ஐந்தாகலின், இந்திரி யக்காட்சியும் ஐவகையாம்; அவை –சிரோத்திரேந்திரி யக்காட்சி தொக்கிந்திரியக்காட்சி சட்சிந்திரியக்காட்சி சிதுவேந்திரியக்காட்சி ஆக்கிராணேந்திரியக்காட்சி. சத் தாதி ஐந்தனையுங் கேட்டல் பரிசித்தல் காண்டல் சு வைத்தல் மணத்தல் மாத்திரத்தையே கருதுங்காற் "புலன்" எனப்படும்.

இங்ஙனம் விளக்கிய இந்திரியக்காட்சி மானதக்காட்சிகள் காரணமாய்ப் புந்தியிலே வேறுபல கரணங்கள்* பிறக்க, அவற்றின் றொழின்முயற்சியேதுவாய்ப் புந்தியிலே நிகழ்கின்ற (காலம் தூரம் சலனம் காரணம் காரியம் பொய்மை மெய்மை முதலியவைவையைப்பற்றிய) கருத்துகளும் பிறவும் மானதக்காட்சியேயாம்.

ஙூ. தனிமானதக்கருத்தேவிடயத்திறெருமைபன்மை யினின்மேவுகாட்சிதொடர்மானதந்தனிமானதங்கள் நனியேயிசைந்துவருகாட்சியூகமிருகருத்தை இனிதேபுணர்த்தொற்றுமை யுண்டிலையென்றியம்புவதே.

இ-யள், தனிமானதக்காட்சி இன்னதென்றும், தொடர்மானதக்காட்சி இன்னதென்றும், யூகம் இன்னதென்றும், உணர்த்துகின்றது.

இ-ள். தனி மானதக்கருத்தே விடயத்தின் ஒருமை பன்மையினின் மேவுகாட்சி-தனிமானதக்காட்சி என்பது விடயத்தின் ஒருமையையேனும் பன்மையையேனும பற்றி (புந்தியில்) நிகழுங் காட்சியாம்.

தொடர்மானதந் தனிமானதங்கணனியேயிசைந்து வருகாட்சி-தொடர்மானதக் காட்சி என்பது தனிமானதக்காட்சிகள் (ஒருவிடயம்போல்) மிக்கிசைந்து நிகழுங் காட்சியாம்.

யூகமிருகருத்தை யினிதேபுணர்த் தொற்றுமையுண்டிலையென்றியம்புவது--யூகம் என்பது மானதக் காட்சிகளுள் இரண்டினை நன்கி

*வேறுபலகரணங்கள் ஆவன கமனம் ஞாபகம் வாதனைமுதலியன; காலம் தூரம் சலனம்முதலான சொற்களாற் குறிக்கப்படும் பொருள்களைக் கருத்துப் பொருள் என்பர்.

தாகப் புந்தியிற் புணர்த்தி* (அவ்விரண்டனு
ள்) ஒன்றுடன் மற்றதற்கு உடம்பாடு உண்டு
அல்லது இன்றுஎனவிளம்புவதாம்; (ஆகவே,
ஒன்றுடனேன்றுறழ்கின்றதேன உடம்பாடா
யேனும், ஒன்றுடனேன்று பிறழ்கின்றதேன
எதிர்மறையாயேனும் விளம்புவதாம்.)எ--று.

ஒன்று என்பது எடுத்த தொடர்புக்கேற்பப் பொருள்
களுட் பிரித்துக் கருதுகின்ற தனிப்பொருளைக் குறிக்கும்
எண்ணும்; இவ்வாறு கருதிய தனிப் பொருளொன்றை
அங்ஙனங்கொண்ட தொடர்பு கருமமாயே பிரிக்கின்,
வருங்கூறுகள் பின்னங்களாம்; அன்றி, அத்தனிப்பொ
ருளை ஏற்றிய கூட்டத்தால் வரும் இரண்டு மூன்று முத
லியன பன்மையாம்.

உலகிலுள்ள சடப்பொருள்களுள்,-தனிப்பொருளே
னக் கற்பித்து ஒருவிடயம் என்பதும், தனிப் பொருட்கூ
ட்டமெனக் கற்பித்துப் பலவிடயம் என்பதும் மாந்தர
துபுந்தியின் இடுகுறிமாத்திரைப் பொருள்களேயன்றி சி
த்துப்பொருள்களுள் ஆன்மா ஒன்று பல என்பபோற்
சுத்தமயமான தனித்தனிப் பொருள்களல்ல;

என்னையோவெனின், சடப்பொருள்களுள் ஒன்று
என நாங் சற்பிக்கும் ஒரு விடயத்திலே ஒன்றற்கொன்
று பேதமான பல பூதியங்களின் பல அணுக்கடிரண்
டிருக்கின்றனவாதலின்; ஆகலான், —

"விடயத்தினொருமை பன்மையினின் மேவுகாட்சி"
எனச் செய்யுளுள் உரைத்தது மாந்தருள் வழங்கி வருகி
ன்ற ஒன்று பலஎன்னுங்கருத்தையே சார்ந்தென்றறிக

யானை மரம் சேனை சோலை யானைகள் சேனைகள்

---

*புணர்த்தல் என்பது ஒரு கருத்தை அல்லது பொரு
ளைப் பிரிதொன்றினுடனே இசைத்துப் புந்தியிலே க
ருதுதல்; உதாகரணமாய்,— 'பொய்'' என்பதைத் ''தீ
மை'' என்பதினுடன் இசைத்து இவற்றின் சம்பந்தந்
தெளியுங்கருமமாய்ப் புந்தியிலே கருதுவது; இப்படிப் பு
ணர்த்தி, "பொய்தீது" எனஒற்றுமை உண்டேன்றெனி
னும், ''பொய்தீதல்ல'' என ஒற்றுமை இன்றென்றெ
னினும், இயம்டவதே யூகம் எனுங் கரணம் என்றறிக.

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd
Digitized by EMORY UNIVERSITY　Original from EMORY UNIVERSITY

கருமம் காரணம் மனம் எனும் விடயங்களைப் பற்றிப் புந்தியிலுள்ள காட்சி தனிமானதக்காட்சி.

கரியயானை மரக்கொம்பு சேனாபதிகள் சோலையிளங்குயில் மனத்துணிபு எனுந் தொடைவிடயங்களைப்பற்றிப் புந்திபாலுறுங்காட்சி தொடர்மானதக்காட்சி.

யானைபெரிது, யானைபெரிதல்ல, சேனைகள்பொருதன, சேனாபதிவந்திலன், மனங்கனிந்தது,—இவ்வாறு புந்தியிலே தெளிதல் யூகம்.

ஒருவிடயத்தைப்பற்றி நமது புந்தியில் நிகழுங் காட்சியானது நமதுசுய *தந்திரத்துக்கேற்ப ஒன்றையெனினும் பலவற்றையெனினும் நுதலிநிற்கும்; உதாகரணமாய்.—(கசம் ரதம் துரகம் பதாதி எனுஞ்சதுரங்கங்களாற்றிரண்ட) சேனையாகிய விடயத்தை ஒன்றாகவுங்கருதலாம்,—இரதத்தையும் அதனைச்செலுத்தும் பாகனையுஞ் சாரதியென ஒன்றாகவுங் கருதலாம் —இரதத்தையும் பாகனையும் தனித்தனி ஒன்றாகவும் இரதத்தின் உருளை தட்டு பலகை கூம்பு முதலியவற்றைத் தனித்தனி ஒன்றாகவுங் கருதலாம்.

யூகம் இருவகை: இருகருத்தை இனிதே புணர்த்தேற்றுமையுண்டென்றியம்பின் அன்னுவய யூகமும், ஒற்றுமை இல்லையென்றியம்பின் வியதிரேக யூகமும், ஆம்.

†தொடர்மானதக்காட்சியானது தனிமானதக்காட்சிகள் புணர்ந்து வரினும், ஒற்றுமையுண்டில்லையெனப் பொருண்முற்றி நில்லாதென்றும், ஆகவே, தொடர்மானதக்காட்சிக்கும் ‡யூகத்துக்குமுள்ள விகற்பம் இன்னதென்றும், நன்குணர்ந்தறிக.

---

* தந்திரம் என்பது பிரியம் எனும் பொருட்டோனிப்பில் இங்ஙனம் வந்தது.

† தொடர்மானதக்காட்சியானது தனிமானதக்காட்சிபோல யூகத்தின் ஒரு அங்கமாய்க் கருத்தாப் பொருளிலெனினுங் கருமப்பொருளிலெனினும் வருமேயன்றி, யூகத்திற்போலக் கருத்தா கருமங்கள் புணர்ந்து உடம்பாடாய் அல்லது எதிர்மறையாய் வரப் பொருண்முற்றிநில்லாது.

‡ யூகம் எனுஞ் சொல்லின் சத்தார்த்தம் (இருபொருள்களை ஒன்றுடனென்று) "புணர்த்தல்" என்பதாம்.

ச இயம்புபயுத்தியிருயூகநின்றனுமிக்குநடை
பயந்ததிரிகரணங்கள்சொலானுரைக்கிற்பதமே
நயந்திடுதாட்டாந்தரமேநியாயநிரனலனே
தயங்கும்மறம்போய்பயிலப்படாதுஉதாகரணே

இ-யுள், யுத்திஇன்னதென்றும், முக்கரணங்கட்குஞ் சொற்குறிகள் இவையென்றும், அவற்றிற்கு உதாகரணங்கள் இவையென்றும், உணர்த்துகின்றது.

இ-ள். இயம்புபயுத்தி யிருயூகநின்றனுமிக்குநடை-யுத்தி என்பது இரண்டு யூகங்களால் அனுமானஞ் செய்யும் நடையென்பர்.

பயந்த திரிகரணங்கள் சோலானுரைக்கிற்பதமே நயந்திடு தாட்டாந்தரமே நியாய நிரனலனே தயங்கும்-(இங்ஙனம் உரைத்தமுறையே, புந்தியரன்து) தோற்றுவித்த மூன்று கரணங்களையுஞ் *சோற்களரல் விளம்பின, (அவை மூன்றும்) நிரனிறையே பதம் தாட்டாந்தம் நியாயம் எனவிளங்கும்.

மறம் போய் பயிலப்படாது உதாகரணே-(அவற்றிற்கு) உதாகரணங்கள்,-மறம், போய், பயிலப்படாது, (பதங்கள்); மறம் பயிலப்ப

* சொல் என்பது மாந்தரது புந்தியிலே யாதொன்றைப்பற்றி நிகழுங்கருத்தைப் பிறர்க்கு அவர் அறிவித்தற் கருவியாய் நிற்கும் ஒலியேயாம்; இச்சொல்லே செவிப்புலவொலியான்வருஞ் சொல் என்னப்படும், இச்செவிப்புலவொலியை விளக்குதற்கருவியாய்நிற்கும் அக்கரரூபங்கள் கட்புல வடிவம் எனப்படும். "தனிமொழி தொடர்மொழியெனவிருவகைத்தாய் இருதிணையைம்பாற்பொருளையுந் தன்னையும் மூவகையிடத்தும் வழக்கொடு செய்யுளின் வெளிப்படைகுறிப்பின் விரிப்பதுசொல்லே" என்பது இலக்கணவிளக்கவிதி.

மான் மனோகதி எனவருந் தொடர்பதமும், தெங்கு பனை
நிலம் எனவரும் இடுகுறிப்பதமும், மலையன் வலைஞன்
அறிஞன் எனவருங் காரணப்பதமும் சிப்பி சுவர்எனவ
ரும் ஏகார்த்தப்பதமும், நாகம் சாகம் பாகம் எனவரும்
வெகார்த்தப்பதமும், நீலம் தீமை நன்மை எனவருங் கு
ணப்பதமும், நீலி தீயன் நல்லார் எனவருங் குணிப்பத
மும், சாத்தன் பொன்னன் யானை எனவரும் முதற்பொ
ருட்பதமும், கூனன் முடவன் குருடன் எனவருஞ் சினை
ப்பொருட் பதமும் பிறவுங்கொள்க; இவையெல்லாம்
பொதுப்பதம் சிறப்புப்பதம் எனும் இரண்டனுள் அந்த
ர்ப்பவிக்கும் என்றறிக.

பொதுப்பதம் என்பது பலபொருள்கட்கும் ஒருநிகரா
யுள்ள சிலபண்புகாரணமாய் அப்பொருள்களைவற்றுக்
கும் பிரயோகிக்கப்படும் பதமாம்; உதாகரணமாய்—மர
ம் பறவை மயில் மலை மனுடன் புலவன்; கரிய பெரி
ய; நடந்தான் கரியன்; நடை. சிறப்புப்பதம் என்பது ஒ
ருபொருட்கே உரியதாய் நிற்கும் இயற்பதமாம்; உதாகர
ணமாய்,—இலங்கை காவிரி சென்னபட்டணம் அரு
ச்சுனன் இம்மரம் அச்சேனபதி இராமன் இலட்சுமண
ன் எனும்பெயர்களும் இவைபோலுஞ் சிலபெயர்களும்
பலர்க்கும் இட்டிருந்தும், ஒருநிகராயுள்ளசில பண்புகா
ரணமாயிட்டனவல்லாதபடியால், அவை சிறப்புப்பத
மேயன்றிப்பொதுப்பதமாகா.

பெயர்ச்சொல் என்பது ஒருபொருளைப்பற்றி நமதுபு
ந்தியிற்கொள்ளுங் காட்சியைக் குறிக்குஞ் சொல்லே
யாம். சொல்லிலக்கணத்துள் விளக்கிய சொற்களெ
ல்லாம் நியாயஇலக்கணத்துட் பதம் என்று கொள்ளப்
படுதலின்று; எழுவாய் *வேற்றுமையினிற்கும் பெயர்க
ளும் பெயர்க்குறிப்பயனிலைகளும் தெரிநிலைகுறிப்பா
ல்வரும் வினைமுற்றுகளும் ஒருசொற்பதங்களாகும்;

---

பொருட்பதம் என்பது அவையவியைக் குறிக்கும்பதம்.
சினைப்பொருட்பதம்என்பது அவையவத்தால்அவைய
வியைச் சுட்டும்பதம்.

* வேற்றுமை என்பது பெயர்களானவை தம்மொடு
புணரும் பிறசொற்களுக்குந் தமக்குமுள்ள பொருட்சம்
பந்தங்களை விளக்கும்படி எய்தும் வேறுபாடு.

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd
Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY

மற்றுஞ் சொற்களெல்லாம் பதத்திற்குறுப்பாய் வருமே யன்றித் தாமேதனித்துப் பதமாகா.

சிறப்புப் பதங்களானவை தமக்கேயன்றிப் பிறபொருட்கு உடம்பாட்டில் விசேடகமாகா*. பொதுப்பதங்களானவை ஒருநிகரான சிலபண்புகளையுடைய தனிப்பொருள்கடிரண்டுவரும் இனத்தையும், ஒருநிகரானசில பண்புகளையுடைய இனங்கடிரண்டுவருஞ் சாதியையும், அவ்வாறு சாதிகடிரண்டுவரும் வகையையும், அப்படி வகைகடிரண்டுவருந் தோகையையும் விளக்கி, அவ்வப்பகுப்பிலுள்ள எவற்றுக்கும் பிரயோகமாய்நிற்கும்; உதாரணமாய்—

| | | | |
|---|---|---|---|
| மயில் | இனம் | பலா | இனம் |
| பறவை | சாதி | மரம் | சாதி |
| மிருகம் | வகை | தாபரம் | வகை |
| சிருட்டி | தொகை | சிருட்டி | தொகை |

இனம் சாதி வகை தொகை என்பவைகள் எடுத்துரைக்கும் பண்புகளுக்கேற்பப் பலவிகற்பபகுப்புகளாயும் வரும்; அபரம் பராபரம் பரம் எனும் முப்பகுப்புகளாயும் முடியும்; உதாரணமாய்—மயில் என்பது அபரம்; சிருட்டி என்பது பரம், இடைநின்றபறவை மிருகம் என்பன பராபரம்

மேலையுரைத்த முறையே இனஞ் சாதிகள் பகுக்குமிடத்து அப்பகுப்புகளைக் குறிக்கின்ற பொதுப் பதங்களின் குணவிரியையும் பொருள்விரியையும் பார்க்கவும் வேண்டியது.

குணவிரி என்பது பொதுப்பதத்தாற் குறிக்கப்படுகி

---

* இவ்வூர் இலங்கை,—அந்த்யாறுகாவிரி,—இம்மனுஷன் அருச்சுனன்—என்னும் உதாரணங்களிற் போலச் சிறப்புப்பதங்கள் தமக்கே உடம்பாட்டில் விசேடகமாய் வருமன்றி, ஊர் இலங்கை,—மரம் காவிரி,—நூல் அருச்சுனன்—எனப் பிறபொருட்கு உடம்பாட்டில் விசேடகமாகா. உலகிலுள்ள பொருளனைத்தும் ஒன்றற்கொன்று பேதமாயிருந்தும், பலபொருள்களிலே ஒரு நிகரான சிலபண்புகளும் ஒருவாறுதோன்றுதலால், அப்பொருள்களைப் பொதுப்பதங்களாற்குறித்து மாந்தர் வழங்கி வருகின்றனர்.

ன்ற பொருளின் அல்லது பொருட்பகுப்பின் பண்புத்
தொகுதி; உதாகரணமாய்,—பொன் என்பதன் குணவி
ரியாவன,—மஞ்சணிறம், அதிகனம், உருகல், சடவஸ்
துமுதலியன; காந்தம் என்பதன் குணவிரியாவன,—இ
ரும்பைவலித்தல், வடதிசைநாட்டம், சடவஸ்துமுதலி
யன.

பொருள்விரி என்பது பொதுப்பதத்தாற் குறிக்கப்படு
கின்ற பிரமேயங்களின் எண்டொகுதி; உதாகரணமா
ய்,—பொன் என்பதன் பொருள்விரியாவன,—மதுரை
ப்பொன், சீனப்பொன், சீர்மைப்பொன்முதலியபொன்
அனைத்துமாம்.

பொதுப்பதத்தின் *குணவிரி ஏறப் பொருள்விரிஇற
ங்கியும், பொருள்விரிஏறக் குணவிரிஇறங்கியும்வரும்; உ
தாகரணமாய்,—மயில் பறவை மிருகம் என்பவற்றிலே,
மிருகத்துக்குள்ள குணவிரி பறவையிலும் பறவைக்கு
ள்ள குணவிரி மயிலிலுங் காணலாமாதலின், மயிலின்
குணவிரி பறவையின் குணவிரியினும் பறவையின்கு
ணவிரி மிருகத்தின் குணவிரியினும் அதிகப்பட்டும், ம
யிலின்பொருள்விரி பறவையின் பொருள்விர்யினும் ப
றவையின் பொருள்விரி மிருகத்தின் பொருள்விரியினு
ங்குறைந்தும், வருதல் காண்க.

சிறப்புப்பதமானது தன்னியல்புப்பிரமேயத்தைக்கு

---

* எப்பொருளையும் அதன் குணவிரியினாலேயே அறி
யலாம்; ஆகவே, ஒருபொருட்குரிய குணங்களை எவ்வ
ளவு நுட்பமாய் அறிகின்றனமோ, அவ்வளவு திட்பமா
ய் அதனைப் பிறபொருளில் விகற்பித்துத் தெளிகின்ற
னம்; உதாகரணமாய்—வெள்ளாட்டுக்குஞ் செம்மறிக்
குமுரிய சிலசாமானியமான குணங்களைமாத்திரம் அ
றிவமேல், அவ்விரண்டையும் ஒன்றிலொன்று விகற்
பித்துத் தெளிந்திலம்; ஆயின் அவ்விருவிலங்குகட்குமு
ரிய குணங்களை அதிக நுட்பமாயறிவமேல், அவ்விர
ண்டையுந் திட்பமாய் விகற்பித்துந்தெளிந்தனம்; ஆக
வே, ஒருபொருளை நன்றாய் அறிவம் என்றதன் கருத்து
அப்பொருட்குரிய குணங்களை நுட்பமாய் அறிவம் என்
றேதயாம்.

றிக்கும்*;-"அன்னியசாதியுந் தன்சாதியுமகன்றுநிற்ற றன்னியல்பு".

பொதுப்பதமானது †சாமானிய வியல்புப்பிரமேயத்தைக்குறிக்கும்;-"அன்னியத்தைத்தவிர்ந்துதன்சாதிக் கொத்தறன்னியபொதுவியற்கை."

பதார்த்தவிகற்பங்களாவன பொருள் குணம் கன்மம் காலம் இடம் சமவாயம் முதலியன; எப்பதமும்இப்பதார்த்தவிகற்பங்களுள் ஒன்றையேனும் பலவற்றையேனுஞ் சுட்டிச் சாரும். பதார்த்த விகற்பமனைத்தும் பொருள் குணம் எனுமிரண்டனுள் அந்தர்ப்பவிக்கும்.

சு. உறுமுன்னியாயம்விரிவாயொழுங்கினுரைக்கிற் பெயர்
பெறுமன்னையாயிதந்தாட்டாந்தரமிதுமுன்றுபெறும்
அறிபின்னிருபசந்தாட்டாந்தமேற்குமவற்றுளுரை
பெறலாம்விசேடியந்தன்பாலுரைத்தவிசேடகமே.

இ---யுள், (இரண்டாங்கரணமாகிய யூகத்தைச்சார்ந்துவருந் தாட்டாந்த இலக்கணங்களை விளக்குவான்றொடங்கி, தாட்டாந்தம் நியாயத்திலே பயிலுமாதலின்,) நியாயத்தின் பரியாயப்பெயர் இது என்றும், அதில்வருந்தாட்டாந்தம் இத்துணையென்றும், தாட்டாந்தத்தில் வரும்பதங்கள் இவையென்றும் இன்னவென்றும், உணர்த்துகின்றது

இ--ள். உறுமுன்னியாயம் விரிவாயொழுங்கினுரைக்கிற் பெயர்பெறுமன்னையாயிதம்-

---

*அருச்சுனன் என்பது பட்சிதாபரமுதலிய அன்னிய சாதியையும் நரர் என்னுந் தன்சாதியையும் நீங்கித் தன்னியல்பினிற்றலால், தன்னியல்புப்பிரமேயமாகிய சிறப்புப்பதமாம்.

† மனுஷன் என்பது பட்சிதாபரமுதலிய அன்னிய சாதியை நீங்கி மனுஷர் எனுந்தன்சாதியில் எவற்றுஞ் சாமானியமாய் நிற்றலால், சாமானியவியல்புப்பிரமேயமாகிய பொதுப்பதமாம்.

க உதயமானுன்; "செங்கதிர்ச் செல்வனுஞ்சூரியன்" என்பது விசேடியம், "திமிரத்தையும் பனியையுந் துரக்க உதயமானுன்" என்பது விசேடகம்.

எ. மேதகுதாட்டாந்தரமேசுயம்பிதஞ்சம்பவிதம்
ஒதுஞ்சுயம்பிதஞ்சுத்தமுந்தன்மையுமென் றிரண்டாம்
மீதன்னுவயம்வெதிரேகமேவுமெத்தாட்டாந்தமும்
வீதஞ்செய்சாமானியமேவிசேடம்விரித்தறியே.

இ---யுள், தாட்டாந்தத்தின் வகை இத்துணையென்றும், அவற்றுளொன்றுய சுயம்பித தாட்டாந்தத்தின் உட்பிரிவு இத்துணையென்றும், தாட்டாந்தத்தின் பொதுவிலக்கணம் இன்னவென்றும், உணர்த்துகின்றது.

இ---ள். மேதகுதாட்டாந்தரமே சுயம்பிதஞ் சம்பவிதம்-முக்கியமாய்த் தாட்டாந்தங்கள் *சுயம்பிதஞ் சம்பாவிதம்(என்றிருவகை.)

ஒதுஞ்சுயம்பிதஞ்சுத்தமுந்தன்மையுமென்றிரண்டாம்--சொல்லிய சுயம்பிதமானது சுத்தம் தன்மை என்றிரண்டு (வகை) ஆம்.

மீதன்னுவயம் வெதிரேகமேவுமெத் தாட்டாந்தமும்--மேலும் எந்தத்தாட்டாந்தமும் அன்னுவயத்தையேனினும் வியதிரேகத்தையேனினுஞ் சாரும்.

மேவுமெத்தாட்டாந்தமும் வீதஞ்செய்சாமானியமே விசேடம்விரித்தறியே--(அன்றியும்) எந்தத்தாட்டாந்தமும்(பிரமேயத்தைஅளந்து)

---

*சுயம்பிதம்என்பதன்சத்தார்த்தம் "தானுயிருப்பது" என்பதாம். சம்பாவிதம் என்பதன் சத்தார்த்தம் (பிறிதோன்றிற்) சார்பாயிருப்பது என்பதாம். மழைபெய்தது என்பது சுயம்பிததாட்டாந்தம். மழைபெய்யுமேல் நாடு செழிக்கும் என்பது சம்பாவித தாட்டாந்தம்.

நிறுத்துகின்ற சாமானியத்தையேனினும் விசேடத்தையேனினுஞ் சாரும்; (இவ்விலக்கணங்களை) விரித்து அறிந்துகோள். எ--று.

மேவுமெத்தாட்டாந்தமும்என்பது நாப்பிசைப்பொருளில் நின்றது.

சம்பாவிதம் எனும்மொழி செய்யுளுக்கிச் சம்பவிதம் எனக்குறுகி வந்தது.

'மேதகுதாட்டாந்தரமே *சுயம்பிதஞ்சம்பவிதம்'' என்றதனுற், கருடனும் பாம்பும் ஒன்றற்கோன்று பகையுடையன; பிணிக்கும் மருந்துக்கும் பகை; சூரியனல் விகசிதமான தாமரைப்புட்பங்கள் பரிமளித்தன எனவருஞ் சங்கர தாட்டாந்தமும்; சாத்தனுங் கொற்றனும் வந்தார்; சாத்தன் நீதியுந் தருமமுந் தயாளமும் உடையன் எனவருந் தொடைத்தாட்டாந்தமும் பிறவும் அமையுமெனத் தோனிக்கின்றது.

சுயம்பித தாட்டாந்தம் என்பது தன்னிலேயேபொருண்முற்றி, பிரிதொன்றை அவாவி முடியாதுவருந் தாட்டாந்தம்; உதாகரணம் --சாத்தன் தயாளமுடையன்; கொற்றன் வந்திலன்; நாகன் சற்குணனு!; தூதன் வந்தான்; மந்திரி அநியாயமாய் மொழிந்தான்; குயில் இனிமையாய்ப்பாடும்.

சம்பாவித தாட்டாந்தம் என்பது தன்னளவிலே இன்னதென்று பொருணயம் முடியாமற் சுயம்பிதத்திற்கு மறுதலையாய் வருந்தாட்டாந்தம்; உதாகரணம்,--இராவணன் கொடுங்கோல் செலுத்தினனேல் அவனை அடர்க்கவேண்டியது; இப்பருவங் கார்அல்லது கூதிர்காலம்

---

* யூகமானது வாக்கியாகாரமானவிடத்துத் தாட்டாந்தமாதலின்,--தாட்டாந்தங்களனைத்தும் வாக்கியாகாரத்தைப்பற்றிச் சுயம்பிதம் சம்பாவிதம் என்றிருவகையாயும், பொருட்சாதனைபற்றிச் சாமானியம் விசேடம் என்றிருவகையாயும், உறழ்வுபிறழ்வுபற்றி அன்னுவயம் வியதிரேகம் என்றிருவகையாயும், வரும்: வாக்கியாகாரம் என்றது வசனத்தை; பொருட்சாதனை என்றது எல்லாம் சில என்பவற்றை; உறழ்வு பிறழ்வு என்றது உடம்பாடெதிர்மறைகளை.

இராவணன் பாதகனெனின் அவனுக்கென்ன செய்யத்தகும்?; துரியோதனன் கொடுங்கோலோ செங்கோலோ செலுத்தினன்?; பத்துமாணிக்கமெனினும் பன்னிரண்டுமாணிக்கமெனினுங் கிடைக்கும்.

சுத்தசுயம்பித தாட்டாந்தமாவது விசேடியம் விசேடகத்துடன் உறழ்கின்றதோ பிறழ்கின்றதோ என்பதொன்றை மாத்திரங்குறிப்பதாம்; உதாகரணம்;—அரசன்புகழ்ந்தான்; மந்திரி இகழ்ந்திலன்; தருமஞ்சயங்கொண்டது.

தன்மைச் சுயம்பித தாட்டாந்தமாவது விசேடியம் விசேடகத்துடன் இன்னதன்மையாய் உறழ்கின்றது அல்லது பிறழ்கின்றதென்பதைக் குறிப்பதாம்; உதாகரணம்;—சாத்தன் நியாயமாகவே புகழ்ந்தான்; கொற்றன் நன்றாய் வாசித்திலன்; தந்தை அன்பாய் வளர்த்தான்.

இப்பொழுதுசுயம்பிதத்துளொன்றாயசுத்தசுயம்பிததாட்டாந்தத்தின் இலக்கணங்களையேமுதல் உணர்த்துவம்.

அன்னுவய தாட்டாந்தமாவது விசேடியம் விசேடகத்துடன் உறழ்கின்றதெனக் குறிப்பதாம்; உதாகரணம்;—கடவுள் அனுக்கிரகம் புரிந்தார்; பின்னமென்பது இல்லையென்பது; ஆதிபகவன் முதற்றேயுலகு; உள்ளகாரணத்தில் உண்டாங்காரியம் உதிக்கும்.

வியதிரேகதாட்டாந்தமாவது விசேடியம் விசேடகத்துடன் பிறழ்கின்றதெனக் குறிப்பதாம்; உதாகரணம்,—மனுடன் சருவஞ்ஞனல்ல; அனலிலாவிடத்துப் புகையின்று.

சாமானிய தாட்டாந்தமாவது விசேடியபதத்தாற் குறிக்கும் பொருள்முற்றுக்கும் விசேடகஞ்செல்ல நிற்பதாம்;—உதாகரணம்,—மரங்கள் வளர்கின்றன; பெயர்ச்சொற்களெல்லாம் வேற்றுமையேற்கும்; உரிச்சொற்பண்பைவிளக்கும்; மாயா இயந்திரதனுவினுள ஆன்மா.

விசேடதாட்டாந்தமாவது விசேடியபதத்தாற் குறிக்கும் பொருளனைத்துக்கும் விசேடகஞ்செல்லாமற் சிலவற்றிற்குமாத்திரஞ் செல்லநிற்பதாம்; உதாகரணம்;—சிலமரங்கள் செழித்துநின்றன; எல்லாமனுடரும் வித்துவான்களல்ல. (கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ; எல்லாருமானுடவராவரோ,—என்பபோலுந் தாட்டாந்தங்களும் பொருண்முடிபில் விசேடதாட்டாந்தமாயே ஒலிக்கும்.)

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

எத்தர்ட்டாந்தமும் அன்னுவயம் அல்லது வியதிரேகமாயும் சாமானியம் அல்லது விசேடமாயுமே நிற்கவேண்டியதால், சுத்தசுயம்பித தாட்டாந்தங்கள் நான்குவகையாய் வரும், அவை, *சாமானியான்வய தாட்டாந்தம் (இதன் அறிகுறி, ஆ), சாமானிய வியதிரேகதாட்டாந்தம் (ஈ), விசேடான்வய தாட்டாந்தம் (ஐ), விசேட வியதிரேக தாட்டாந்தம் (ஒ.)

---

*சாமானியான்வய தாட்டாந்தமானது சாமானியமும் அன்னுவயமுமாய் நிற்கும்; உதாகரணம்,—அகரமுதல எழுத்தெல்லாம். சாமானியவியதிரேக தாட்டாந்தமானது சாமானியமும் வியதிரேகமுமாய் நிற்கும்; உதாகரணம்,-புலவர் இகழ்ந்திலர். விசேடான்வயதாட்டாந்தமானது விசேடமும் அன்னுவயமுமாய் நிற்கும்; உதாகரணம்,—பட்சிகள்பாடும்; உலகம் அறியும். விசேடவியதிரேக தாட்டாந்தமானது விசேடமும் வியதிரேகமுமாய்வரும்; உதாகரணம்,-சிலபுட்சிகள் பாடுகின்றில; சிலமனுஷர் அறியார். பட்சியெல்லாம் வந்தன; பட்சியொன்றும் வந்திலது; சிலபட்சிகள் வந்தன; சிலபட்சிகள்வந்தில; என்பவற்றிலுங் கண்டுகொள்க. சாமானியான்வயதாட்டாந்தமுதலிய நான்கு தாட்டாந்தங்களையும் பலவிடங்களிலும் இந்நூலுள் எடுத்துரைக்கவேண்டியிருப்பதால், அவற்றை விளக்கும்படி, ஆ-ஈ-ஐ-ஒ-எனும் அட்சரங்களைக் குறிகளாக இட்டுக்கொண்டாம்.

அன்னுவயம்என்பதன்சத்தார்த்தம் “ஒன்றிச்செல்வது” என்பதாம்; “பொருத்தமுடையது” என்றுருமுளர். சிவஞானபோதம்.

வியதிரேகம் என்பதன்சத்தார்த்தம்“ஒன்றுதலில்லாதது” என்பதாம்; “பொருத்தமில்லது” என்றுருமுளர். சிவஞானபோதம்.

“பக்கமுன்றின்முன்றேதுவுடையபொருளைப்பார்த்துணரத்—தக்கஞானந்தன்பொருட்டாம்பிறர்தம்பொருட்டாமனுமானங்--தொக்கவிவற்றுற்பிறர்தெளியச்சொல்வதாதுமச்சொல்லு—மிக்க அன்னுவயத்தினெடு வெதிரேகச்சொலெனவிரண்டாம்” என்னும் அளவைச்செய்யுளில். அன்னுவயம் வியதிரேகம் எனும்பதங்கட்கு உரைத்திருக்கும் பொருளைக்காண்க.

*அ. அறிவைவிசேடியமோடுவிசேடகத்தின்றொடர்பாற்*
*பெறுமன்விசேடமுஞ்சாமானியமுமெய்த்தாட்டாந்தரம்*
*உறுமுன்விசேடியமீந்திடுஞ்சாமானியமொன்றுமே*
*நெறியின்விசேடகமேவெதிரேகமொன்றீந்திடுமே.*

இ--புள், தாட்டாந்தங்களைச் சாமானிய விசேடம் எனவரையறுத்தல் இவ்வாறென்றும், விசேடியவிசேடகபாதங்கள் இன்னின்னதாட்டாந்தத்தில் ஈந்து போதுப்பதமாய் நிற்கும் என்றும், உணர்த்துகின்றது.

இ--ள். அறிவைவிசேடியமோடு விசேடகத்தின்றொடர்பாற்பெறு மன்விசேடமுஞ் சாமானியமுமெய்த் தாட்டாந்தரம்--விசேடியத்துக்கும் விசேடகத்துக்கும் உள்ளதொடர்புபற்றியே மெய்மையான (பொருடரும்) தாட்டாந்தங்கள்விசேடத்தையுஞ்சாமானியத்தையும் பெரும்பான்மையும் பெறுமென்றறிவாயாக; (பொய்ப்பொருணுதலும் விபரீததாட்டாந்தங்களில் விசேடிய விசேடகத் தொடர்பு புலப்படத் தெளியும் அருமைகாரணமாய் விசேடசாமானியங்களைக் குறித்தலும் ஏலாமையாற்றான், மெய்மையான பொருடருந் தாட்டாந்தங்கள் என்றுவிதந்தது.)

உறுமுன்விசேடியமீந்திடுஞ் சாமானியமொன்றுமே—சாமானியதாட்டாந்தம் மாத்திரமே முன்னிற்கும் விசேடியத்தைஈயும்; (எனவே, விசேடதாட்டாந்தம் விசேடியத்தை ஈயாது என்று மீட்சிமொழியாயிற்று)

நெறியின் விசேடகமே வெதிரேகமொன்றீந்திடும்--வியதிரேகதாட்டாந்தம் மாத்திரமேவி

சேடகத்தை ஒழுங்கே *ஈயும்; (எனவே, அன்னுவயதாட்டாந்தம் விசேடகத்தை ஒழுங்கே ஈயாது என்று மீட்சிமொழியாயிற்று.) எ–று.

விசேடியத்தில்வரும்–எல்லாம் முற்றும் அனைத்தும் ஒவ்வொன்றும் முதலிய சொற்கள் காரணமாய்ச் சாமானியதாட்டாந்தத்தையும், சில பல அனேகம்முதலிய சொற்கள் காரணமாய் விசேடதாட்டாந்தத்தையும் ஒருவாறு†வரையறுத்துணரக்கூடியதெனினும், விசேடிய விசேடகத்‡தொடர்பினாலேயே தெளிய அளவிடலாம்; உதாகரணம்,—பட்சிகள் சிறகுடையன என்னுமிடத்து, சிறகின்றேற் பட்சிபல்ல என்னுந் தொடர்புபற்றி, பட்சிகளெல்லாஞ் சிறகுடையன என்று சாமானியான்வயதாட்டாந்தமாய்க் கொள்க; பட்சிகள் மரங்களல்ல என்னுமிடத்து மரமெனிற் பறக்குஞ்சிறகிராது என்னுந் தொடர்புபற்றி, பட்சியேதுவும் மரமல்ல என்று சாமானியவியதிரேக தாட்டாந்தமாய்க் கொள்க; பட்சிகள் பாடுகின்றன என்னுமிடத்து ஆந்தை காகம் கூகை

---

*சிலபட்சிகள் அன்னங்கள், அகத்தியன் தமிழைப் பெற்றமுனிவன் என்னுமிடத்து அன்னுவயதாட்டாந்தமும் விசேடகத்தை ஒருவாறு ஈயுமெனினும், இதுசிறப்பினதன்றெனும் பொருள்கருதியே "வியதிரேகதாட்டாந்தம் மாத்திரமே விசேடகத்தை ஒழுங்கே ஈயும்" என்றுரைத்தாம்.

† "ஒருவாறு வரையறுத்துணரக்கூடியது" என்றதென்னையோவெனின், "அவனுடையவார்த்தைகளெல்லாம் பொய்யல்ல, வார்த்தைமுற்றும்பொய்யல்ல, வார்த்தையனைத்தும்பொய்யல்ல, வார்த்தையாவும்பொய்யல்ல" என்னுந் தாட்டாந்தங்களிலே எல்லாம் முற்றும் அனைத்தும் யாவும் எனுஞ் சொற்கள் வந்து நின்றும், அத்தாட்டாந்தங்களோ விசேட தாட்டாந்தங்களாதலின்.

‡விசேடியவிசேடகத்தொடர்பு என்றது விசேடியவிசேடகங்களாற் குறிக்கப்படும் பொருள்கட்குள்ள தொடர்பை எனக்கொள்க.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

முதலிய சிலபட்சிகள் பாடுகின்றில எனும் *அனுபவத்
தொடர்புபற்றி, சில்பட்சிகள் பாடுகின்றன என்று வி
சேடான்வயதாட்டாந்தமாய்க் கொள்க; பட்சிகள் மா
மிசபட்சணிகளல்ல என்னுமிடத்து பருந்து காகம் க
ழுகுமுதலிய சிலபட்சிகள் மாமிசம்பட்சிக்கின்றன என்
னும் அனுபவத்தொடர்புபற்றி, சில்பட்சிகள் மாமிசப
ட்சணிகளல்ல என்று விசேடவியதிரேகதாட்டாந்தமா
ய்க் கொள்க.

ஈதல் என்பது விசேடியமெனினும் விசேடகமெனி
னுந் தன்னாற் குறிக்கப்படும் பொருண்முற்றுக்கும் பிர
யோகமாய் நிற்கப் பகுத்திடுதலாம்.

"விசேடியமீந்திடுஞ்சாமானியமொன்றும்" என்வே;
சாமானியான்வயதாட்டாந்தத்தினதுஞ் சாமானியவிய
திரேகதாட்டாந்தத்தினதும் விசேடியங்கள் ஈயப்பட்டு
நிற்கும் என்பதுபெற்ரும்; உதாகரணமாய்,--பட்சிகள்
காலுடையன பட்சிகள் மரங்களல்ல; (பட்சிகள் எ
னும் விசேடியங்கள் இங்ஙனம் ஈயப்பட்டன.)

"விசேடகமே வெதிரேகமொன்றீந்திடும்" என்வே
சாமானிய வியதிரேக தாட்டாந்தத்தினதும் விசேட
வியதிரேக தாட்டாந்தத்தினதும் விசேடகங்கள் ஈயப்
பட்டு நிற்கும் என்பதுபெற்ரும்; உதாகரணமாய்,-பட்சி
கள் மரங்களல்ல; சிலபட்சிகள் மாமிசபட்சணிகள
ல்ல; மரங்கள், பட்சணிகள எனும்விசேடகங்கள் இ
ங்ஙனம் ஈயப்பட்டன.)

இவ்வாறுரைக்கவே, சாமானியான்வய தாட்டாந்தத்
தின்விசேடியம் †ஈயப்பட்டும்விசேடகம்ஈயப்படாதும்

---

*அனுபவம் என்பது பொருள்களை அவற்றின் சம்ப
ந்தசார்புகளிற் கண்டு பரீட்சித்துத் தெளிதலான் வந்
த அறிவு;—"உத்தேசலட்சணபரீட்சைகாரணமாய் உ
றும்போதம்" எனினும் ஒக்கும். "மைந்தாசிந்தைதனி
ன் மயக்கமென்ன சுருதி யுத்தி அனுபவத்தாற்றெளிந்தி
டாயே" என்ற விடத்தும், "அனுபவம்" எனுஞ்சொல்
மேலையுரைத்த பொருளினின்றது காண்க. அனுபவத்
தொடர்பு என்பது அனுபவத்தாலறிந்த தொடர்பாம்.

†ஈயப்பட்டு நிற்றலாவது விசேடியபாதமேனும் வி
சேடகபாதமேனுந் தன்னாற் கருதப்படும் பொருளனை

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

நிற்கும் என்றும், சாமானியவியதிரேக தாட்டாந்தத்தின் விசேடியவிசேடகங்களிரண்டும் ஈயப்பட்டு நிற்கும் என்றும், விசேடான்வயதாட்டாந்தத்தின் விசேடியவிசேடகங்களிரண்டும்ஈயப்படாமனிற்குமென்றும், விசேடவியதிரேக தாட்டாந்தத்தின் விசேடியம் ஈயப்படாதும் விசேடகம் ஈயப்பட்டும் நிற்கும் என்றும், பொருடோனியாநின்றன; உதாகரணமாய்,—பட்சிகள் காலுடையன என்னுமிடத்து, பட்சிகள் என்னும் பதம் பட்சிசாதி முற்றுக்கும் பிரயோகமாய் அங்ஙனம் நிற்றலால் விசேடியம் ஈயப்பட்டு நிற்கின்றது; காலுடையன என்னும் பதம் மற்றும் விலங்குகளுக்கும் மக்களுக்குங்கூடப் பிரயோகமாகுமாதலால் விசேடகம் ஈயப்படாது நிற்கின்றது. பட்சிகள் மரங்களல்ல என்னுமிடத்து, பட்சிகள் என்னும் பதம் பட்சிசாதி முற்றுக்கும், மரங்கள் என்னும் பதம் விருக்கசாதி முற்றுக்கும் பிரயோகமாய் அங்ஙனம் நிற்றலால் விசேடியவிசேடகங்களிரண்டும் ஈயப்பட்டு நிற்கின்றன. (விசேடதாட்டாந்தங்களையும் மேலைவிதிக்கேற்ப இவ்வாறே விரித்துரைத்துக்கொள்க.)

*திரிபுசைகளெல்லாம் மூன்றுகோணங்களையுடையன, மூன்றுகோணங்களையுடையனவெல்லாம் திரிபுசை; பறவைகளெல்லாஞ் சிறகுடையன, சிறகுடையனவெல்லாம் பறவை; எனச் சாமானியான்வய தாட்டாந்தத்து விசேடகம் ஈயப்பட்டும்: சிலபட்சிகள் குயில்கள், சிலமரங்கள் பனை என விசேடான்வயதாட்டாந்தத்து விசேடகம் ஈயப்பட்டும், அருகிவரினும், இவைபோல்வனவெல்லாம் உரைமாத்திரையாற் சிறந்தன

---

த்துக்கும் பிரயோகமாக நிற்றலாம். ஈயப்படாது நிற்றலாவது விசேடியபாதமேனும் விசேடகபாதமேனுந் தன்னாற்கருதப்படும் பொருளனைத்துக்கும் பிரயோகமாகாது அப்பொருளுட் சிலவற்றுக்கேனினும் பலவற்றுக்கேனினும் பிரயோகமாக நிற்றலாம்.

*திரிபுசையென்பது மூன்று புயங்களையுடைய முக்கோணவடிவம்; அதனை இரேகாகணிதத்திற் காணலாம்.

அல்ல; (நியாயமானது பாஷிதமாகிய *உரையிலேயே பயின்றுபழகுகின்றது. )

அகத்தியன் ஒருமுனிவன், அருச்சுனன் ஒரு வீரன் என்னுந் தாட்டாந்தங்களின் விசேடியங்கள் சிறப்புப் பதமேயெனினும், அவை சாமானிய தாட்டாந்தத்துள் அடங்கும்; அசத்தியன் தமிழைப்பயந்த முனிவன், தமிழைப்பயந்தமுனிவன் அகத்தியன், எனவிசேடியம்போல விசேடகமும் ஈயப்பட்டு வருதலும் உண்டு. இராவணன் முற்றும் பாதகனல்ல, இவன் சற்றே விவேகி என்பபோல் வருவனவற்றை விசேடதாட்டாந்தம் என்று ஒருவாறு கூறலும் ஆம்.

ஒரு போதுப்பதமானது வேறுசில சொற்களுடன்புணர்ந்து தன்போருள் விரியிற் குன்றி வருங்கால், அப்பொதுப்பதம் அங்ஙனம் விசேடிய விசேடக பதங்களின் ஒருறுப்பேயன்றி ஒருபதம் அன்றும்; உதாகரணமாய்,—புலவர் என்னும் பொதுப்பதமானது சென்னபட்டணம் யாழ்ப்பாணம் மதுரை காசி முதலிய எவ்விடத்துப் புலவரெவர்க்கும் பிரயோகமாகுமேயென்பதுகருதி, யாழ்ப்பாணத்துப் புலவரெல்லாரும் மகிழ்ந்தனர் எனுந் தாட்டாந்தத்திலுள்ள புலவர் என்னுஞ் சொற் புலவரனைவருள்ளுஞ் சிலரைமாத்திரம் அங்ஙனங் குறிக்கின்றதென்பது நோக்கி, அத்தாட்டாந்தத்தை விசேடதாட்டாந்தம் என்று சொல்லப் போகாது; தாட்டாந்தமோ

---

*ஒருவர் நியாயிக்கும்போது, அந்நியாயமானது பயிலும் பாஷிதமானது அவருடைய புந்தியில் நிகழும் யுத்தியை விளக்கும் ஒலிக்குறியேயாயினும், அப்புந்தியில் நிகழும்யுத்தி இன்னதென்று நேர்முகமாய் நாங்காணுமையின், அதன் ஒலிக்குறியாய பாஷிதத்தையே நியாயம்பயிலும் உபாதானமாய்க் கொள்கின்றனம். "திரிபுசைகளெல்லாம் மூன்று கோணங்களையுடையன" என்னுமிடத்து விசேடகமானது விசேடியம்போல ஈயப்பட்டு நிற்பினும், பாஷிதமாகிய உரைமாத்திரத்தில் அப்படி வரலாம் என்றதாக விள்ளவில்லை. ஒருவர் ஒரு நியாயத்தை எடுத்துச் சொல்லும்போது அந்நியாயஞ் சித்தியுள்ளது அல்லது போலியானது என்று பாஷிதமாகிய உரைமாத்திரத்தாற்றான் அறுதியிடுகின்றனம்.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

ன்றுக்கு இரண்டுபதங்களேயன்றி மேலேயில்லை; எடுத்துக்காட்டிய தாட்டாந்தத்தில் விசேடிய பதம் யாழ்ப்பாணத்துப் புலவரெல்லாரும் என்பதேயன்றிப் புலவர் என்பதல்ல. சொல்லெல்லாம் *பதம் என்று முடியாவென்பதையும். ஒரு தாட்டாந்தத்துப் பதமாய் நின்ற சொல்லானது தான்வரும் எத்தாட்டாந்தத்தும் பதமாயேயன்றி உறுப்பாய் நிற்கப்படாது என்றொரு நியதியில்லையென்பதையும், அறிந்துகொள்க. "விசேடியமீந்திடுஞ் சாமானியமொன்றுமே" என்பதை நன்குணர்ந்து தெளிக. (சாமானிய தாட்டாந்தம் விசேடியபதத்தை ஈயுமேயன்றி விசேடிய பதத்தினுறுப்பாய் நிற்குஞ் சொற்களிலேதாவாது.)

௬. இடுமோர்விசேடியமேன்றவிசேடகத்தாலொருநான்
கடைவானதாட்டாந்தரமேவுமன்னவற்றேதெனிரண்
டுடலான்விரோதமொருநான்குறுமுயர்தாட்டாந்தமே
விடுமீர்பதநிலைமாறிடின்மூன்றிடமாற்றெய்துமே.

---

* சத்தசாத்திரத்திலே பதம் என்பார் "எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரின்." நியாயஇலக்கணத்திலே பதம் எனக்கொண்டது ஒருதாட்டாந்தத்தின் விசேடியவிசேடக பாதமாயும், தனிமானதந் தொடர்மானதத்தை விளக்கும் ஒலிக்குறியாயும், வருந் தனிமொழி தொடர்மொழிகளை. "ஒப்பிலாமலடிபெற்ற மகனொரு முயற்கொம்பேறித் தப்பிலாகாயப் பூவைப்பறித்தனன்" எனுந் தொடைத்தாட்டாந்தத்துப் பலசொற்கள்நின்றும் பதங்களோ மூன்றுமாத்திரம். "மண்ணிலில்லதாம் படங்கடாதி எழிறரும் இயற்றுவானுல்" எனுஞ் சுத்தசுயம்பித தாட்டாந்தத்தின் விசேடியபதம் "மண்ணிலில்லதாம் படங்கடாதி" என்பது;-விசேடகபதம் "எழிறரும் இயற்றுவானுல்" என்பது; இப்பதங்களினிற்குஞ் சொற்களாகிய மண் இல்லது படம் கடம் எழில் தரும் இயற்றுவான் என்பன--பிறதாட்டாந்தங்களிலே மண்வலிது இல்லது பிறவாது, படம் அழகிது, என்றாற்போலப் பதங்களாயும்வரும். ஆதலான், ஒருதனிச்சுயம்பித தாட்டாந்தத்திலே எத்தனை சொற்கள் நின்றும் பதங்களோ இரண்டுஎன நன்கறிந்து கொள்க.

இ—யுள், தாட்டாந்தங்களின் விரோதம் இடமாற்று என்னும் இரண்டனையும் உணர்த்துகின்றது.

இ—ள். இடுமோர்விசேடியமேன்ற விசேடகத்தாலொரு நான்கடைவான தாட்டாந்தரமேவும்-தருகின்ற ஒருவிசேடியத்தினாலும் ஒரு விசேடகத்தினாலும் ஒழுங்கான நாலு தாட்டாந்தங்கள் பிறக்கும்.

அன்னவற்றேதேனிரண்டுடலரன் விரோதமொரு நான்குறும்-அந்நான்கு தாட்டாந்தங்களுள் யாதேனும் இரண்டு(ஒன்றுடனொன்று) உடலுவதினால் நான்கு விரோதங்கள் வரும்.

தாட்டாந்தமேவிடுமீர்பத நிலைமாறிடின் மூன்றிட மாற்றெய்தும்-தாட்டாந்தமொன்றிலே நிற்கும் இரண்டுபதங்களும் (விசேடியமானது விசேடகமாயும் விசேடகமானது விசேடியமாயும்) நிலைபெயர்வதனால் இடமாற்று மூன்றுவரும். எ—று.

ஏன்ற என்பது இயைந்தஎனும் பொருடரும் அடை.
உயர் என்பது உயர்ந்த எனும் பொருடரும் அடை.
நாடு எனும்பதத்தை விசேடியமாயும் செழித்தல் எனும் பதத்தை விசேடகமாயுந் தரின்,
நாடோவ்வொன்றுஞ் செழித்தது, (ஆ;)
ஒருநாடுஞ்செழித்திலது, (ஈ;)
சிலநாடுகள்செழித்தன, (ஐ;)
சிலநாடுகள்செழித்தில, (ஓ;) என்று நான்கு தாட்டாந்தங்கள் வருமாறு கண்டுகொள்க.

க. சர்வவிரோதம். { நாடோவ்வொன்றுஞ்செழித்தது
ஒருநாடுஞ்செழித்திலது.

உ. சம்பவவிரோதம். { நாடோவ்வொன்றுஞ்செழித்தது,
சிலநாடுகள்செழித்தன. (அலது)
ஒருநாடுஞ்செழித்திலது,
சிலநாடுகள்செழித்தில.

௩. பாரிசேடவிரோதம்.
- நாடோவ்வொன்றுஞ்செழித்தது.
- சிலநாடுகள்செழித்தில (அலது)
- ஒருநாடுஞ்செழித்திலது,
- சிலநாடுகள்செழித்தன.

௪. சகளவிரோதம்.
- சிலநாடுகள்செழித்தன,
- சிலநாடுகள்செழித்தில.

விசேடியமோடு விசேடகத்தின்றொடர்பால் மேலையுரைத்த விரோததாட்டாந்தங்களின் மெய்மை *பொய்மையை அளந்தறிக

விரோதம் என்பது நிகரான் விசேடிய விசேடகங்களையுடைய இரண்டு தாட்டாந்தங்கள் ஒன்றற்கொன்றுள்ள பொருட்பகையாம்.

இடமாற்று என்பது ஒரு தாட்டாந்தத்தினிற்கும் விசேடிய விசேடகபதங்களை நிலைபெயர்த்திடுவதாம்†; இப்படி நிலைபெயர்க்குங்கால், முன்னர்நின்ற மூலதாட்டாந்தமும் பின்னர்வந்த மாற்றுத்தாட்டாந்தமும் ஒன்றற்கொன்று அருத்தாபத்தியாயும், மூலதாட்டாந்தத் தீயப்படாமனின்ற பதமானது மாற்றுத்தாட்டாந்தத்தும் ஈயப்படாதத்தாயும், நிற்கவேண்டியது.

---

* விசேடிய விசேடகத்தொடர்பால் விரோததாட்டாந்தங்களின் மெய்மைபொய்மையை அளக்குமாறு; "பட்சியெல்லாஞ் சிறையுடையன, பட்சியொவ்வொன்றுஞ் சிறையில்லது" என்னுஞ் சர்வவிரோத தாட்டாந்தமிரண்டினுள், சாமானியான்வய தாட்டாந்தமேதொடர்புபற்றி மெய்மையென்றும், ஆகவே அதன்விரோதமாகிய சாமானிய வியதிரேக தாடாந்தம் பொய்மையென்றுங் காண்க. நியாயிக்குமிடத்து, தாட்டாந்தங்களின் மெய்மை பொய்மையை விளங்கவேண்டுமென்பதுபற்றியே விரோததாட்டாந்தங்களை இங்ஙனம் உரைத்தாம்.

† நியாயிக்குமிடத்து, நிலைதுறைகளுக்கேற்பத் தாட்டாந்தங்களின் பாதங்கள் இடமாறிநிற்பினும், அத்தாட்டாந்தங்கள் இன்னபொருள் என வரையறுத்துணர வேண்டுமென்பதுபற்றியே தாட்டாந்த இடமாற்றை இங்ஙனம் மொழிந்தனம்.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

மாற்றுத்தாட்டாந்தம் மூலதாட்டாந்தத்தின் *அருத்தாபத்தியாய் நிற்பதுநோக்கி, இடமாற்றையுத்தித்தல் என்று கொள்ளப்படாது; இடமாற்றுவது யூகம் ஒன்றையே பிரிதொருவிதமாய்க்கொள்ளல் ஆகும் என்றறிக; உதாகரணமாய்,—"உலகம் நித்தியசோயம்பானதல்ல" எனும் யூகத்தையே இடமாற்றி "நித்தியசோயம்பானது உலகமல்ல" என்றுவிளம்பல்.

இடமாற்று மூவகைப்படும்; அவை,—தனியிடமாற்று, வரைவிடமாற்று, மறையிடமாற்று—என்பவாம்.

க. தனியிடமாற்று என்பது விசேடியத்தை விசேடகமாயும் விசேடகத்தை விசேடியமாயுமாத்திரம் நிலைபெயர்த்திடுவதாம்; சாமாஷிய வியதிரேகதாட்டாந்தமானது தன்பதங்களிரண்டனையும் ஈந்தும், விசேடான்வயதாட்டாந்தமானது பதங்களொன்றையேனும் ஈயாதும், நிற்றலால், ஈ-யும் ஐ-யும் தனியிடமாற்றாய் வரும்; உதாகரணம்.—

ஈ { பட்சிகள் மரங்களல்ல, பின்னை
மரங்கள் பட்சிகளல்ல.

ஐ { சிலபட்சிகள் மாமிசபட்சணிகள், பின்னை
சிலமாமிசபட்சணிகள் பட்சிகள்.

உ. வரைவிடமாற்று என்பது நிலைமாற்றுங்கால் ஈயப்படாது முன்னர்நின்ற பதத்திற்கு எல்லைதந்து நிலைபெயர்த்திடுவதாம்; சாமானியான்வயதாட்டாந்தமான

---

*மாற்றுத் தாட்டாந்தமானது மூலதாட்டாந்தத்தின் அருத்தாபத்தியாய் நிற்க இடமாற்றினாலன்றி, மற்றைப்படி நியாயித்தற்குதவாது; உதாகரணமாய் "பட்சிகள் காலுடையன" எனுந்தாட்டாந்தத்தை "காலுடையன சிலபட்சிகள்" என்று இடமாற்றாமல், "காலுடையன வெல்லாம்பட்சிகள்" என்று இடமாற்றின, அதுபோலியாய்நியாயத்துக்குதவாது: "பட்சிகள் மரங்களல்ல" எனுந்தாட்டாந்தத்தை "மரங்கள் பட்சிகளல்ல" என்று இடமாற்றாமல், "சிலமரங்கள் பட்சிகளல்ல" என்று இடமாற்றின், அதுவும்போலியாம்; இப்படி, தாட்டாந்தங்களை ஒன்றற்கொன்று அருத்தாபத்தியாய் நிற்க இடமாற்றுங்கால், ஒருயூகத்தையே பிரிதொருவிதமாய் உரைக்கின்றனம்.

து விசேடியபதத்தை ஈந்தும் விசேடகபதத்தை ஈயாதும்நிற்றலால்,ஆ,வரைவிடமாற்றுய்வரும்;உதாகரணம்.-

ஆ { அன்னங்களெல்லாந் தோலடிப்பறவைகள், பி.
சிலதோலடிப்பறவைகள் அன்னங்கள்.

ஆ { எருமைகளெல்லாங் கவையடிவிலங்குகள், பி.
சிலகவையடிவிலங்குகள் எருமைகள்.

சாமானிய வியதிரேக தாட்டாந்தத்துவரும் எதிர்மறைச்சந்திவண விசேடகத்தினுறுப்பாய்க்கொண்டு, ஆகவே,-ஈ-யை ஆ-வாய்க்கருதி, ஈ-யை வரைவிடமாற்றுய்ப் பெயர்த்தலும் அருகிவரும்; உதாகரணம்.

ஈ { மரங்கள் விவேகாத்துமிகளல்லன, பின்வண
சிலவிவேகாத்துமிகளல்லன மரங்கள்.

("விவேகாத்துமிகள் மரங்களல்லன" என்பதுதனியிடமாற்றும், "சிலவிவேகாத்துமிகளல்லன மரங்கள்" என்பது வரைவிடமாற்றும் ஆம் என்றுணர்க.)

௫. மறையிடமாற்று என்பது பதங்களை நிலைமாற்றுங்கால் எதிர்மறுத்து மாற்றலாம்: விசேடவியதிரேக தாட்டாந்தமானது விசேடியபதத்தை ஈயாதும் விசேடகபதத்தை ஈந்தும் நிற்றலால், மாற்றுத்தாட்டாந்தம் மூலதாட்டாந்தத்தின் அருத்தாபத்தியாயே வரும்படி-ஒ மறையிடமாற்றுய்வரும்; உதாகரணம்,

ஒ { சிலபுலவர்கள் சுத்தவிவேகிகளல்லர், பின்வண
சிலசுத்தவிவேகிகளல்லார் புலவர்கள்.

இவ்வாறு மறையிடமாற்றுங்கால், ஒ-வில்வரும் எதிர்மறைச்சந்திவண விசேடகத்தினுறுப்பாய்க் கொண்டு (ஆகவே. ஒ-வை ஐ-யாய்க்கருதி) தனியிடமாற்றெனக்கொளினும் அமையும். அன்றியும், சாமானியான்வயதாட்டாந்தமும் மறையிடமாற்றினும் ஒருவாறுவரும்; உதாகரணம்,

ஆ { அன்னங்கள் தோலடியின, பின்வண
தோலடியில்லன அன்னங்களல்ல.

மேலும், "பறவைகளெல்லாஞ் சிறகுடையன, சிறகுடையனவெல்லாம் பறவைகள்," என்றும், "அகத்தியன் தமிழைப்பயந்தமுனிவன், தமிழைப்பயந்தமுனிவன் அகத்தியன்," என்றுஞ் சாமானியான்வயதாட்டாந்தந் தனியிடமாற்றுய் வருதலும்; "சிலபட்சிகள் குயில்கள், குயில்கள் சிலபட்சிகள்" என விசேடான்வயதா

ட்டாந்தஞ் சாமானியான்வயதாட்டாந்தமாய் இடமாறுதலும், அருகுமென்றறிந்தமைத்துக்கொள்க.

மேலவிரித்து முடித்தவற்றைத் தொகுத்துமுடிக்கின்; *ஈ-யும் ஐ-யும் தனியிடமாற்றே; ஆ-வும் ஈ-யும் வரைவிடமாற்றே, ஆ-வும் ஒ-வும் மறையிடமாற்றே.

௧0. எய்திருசாதனதாட்டாந்தநின்றவற்றேவிளையும்
மெய்தருசாத்யமுடித்தணயாயிதஞ்சாதனம்பின்
பெய்திடினேதுதிட்டாந்தமுன்சாத்தியம்பட்சமுடன்
உய்பிரதிஞ்ஞையுபநயமோர்கநிகமனமே.

இ--யுள், நியாயத்தின் பரியாய்ப் பெயராகியணையாயிதம் இவ்வாறுவரும் என்றும், ஞையாயிதத்தின் உறுப்புகள் இவையென்றும், உணர்த்துகின்றது.

இ--ள். எய்திருசாத்னதாட்டாந்த நின்றவற்றே விளையும் மெய்தருசாத்யமுடித்தணையாயிதம்-தருகின்ற †சாதனங்களாகிய இரண்டு தா

---

*இடமாற்றிலே பயிலும்படி சில உதாகரணங்கள் தருதும்,--மரங்கள் யுத்தியில்லன; சிலபட்சிகள் பாடுகின்றன; மனுஷர் விவேகாச்சாரசிருட்டிகள்; எல்லாமனுஷரும் ஞானிகளல்ல; சிலமனுஷர் சிதடர்; கல்விமேன்மையுடையது; சாங்தஞ் சிறந்த இலட்சணம்; வேற்றுமை ஐமுதலாறும்; விகாரமணத்தும்மேவலதியல்பே; தேயுவும்வாயுவும் பூதியங்கள்; பிரபஞ்சந்தோற்றமுடையது; சிவஞானபோதம் பொருணூல்; சிவஞானசித்திபதிநூல்; சிவப்பிரகாசம் ஆத்துமிகநூல்; தத்துவப்பிரகாசஞ் சித்தாந்தநூல்; இந்நூல்கள் சித்தாந்தநூல்கள்; இலக்கணவிளக்கம் கருவிநூல்; நேமிநாதம் இலக்கணநூல்; நியாய இலக்கணம் பொருணூலன்று; கடவுள் கிஞ்சிஞ்ஞத்துவனன்று; ஆன்மா சருவஞ்ஞத்துவனன்று; லோகாயதங் கடவுணூலன்று.

†சாதனம் என்பது சாத்தியத்தைச் சாதிப்பதற்கிடனை தாட்டாந்தம்; இதனை "அவினுபாவம் பேசுறுமேது" என்றும் "இலிங்கம்" என்றுங்கூறுவார். "எய்திருசாதனதாட்டாந்தநின்றவற்றே விளையும் மெய்தருசாத்

ட்டாந்தங்களினால் அச்சாதனங்களிலே (குறிப்பாய்) விளைந்து கிடக்கின்ற மெய்ம்மையான சாத்தியத்தை ("விரிவாயோழுங்கின்") முடிப்பதாகிய நியாயம் நையாயிதம் ஆம்.

சாதனம்பின்பெய்திடினேது திட்டாந்தம்--சாதனங்களை (சாத்தியத்தின்) பின்வைத்தால் எது திட்டாந்தம் (என்றுமுறையேபெயர்பெறும்.)

முன்சாத்தியம் பட்சமுடனாய்பிரதிஞ்ஞை-(அப்பொழுது,) முதனிற்குஞ் சாத்தியமானது பட்சம் அல்லது பிரதிஞ்ஞை (என்ற பெயர் பெறும்.)

உபநயமோர்கநிகமனமே--(அன்றியும்), உபநயம் நிகமனம் (என்னும் உறுப்புகளிரண்டையும்அங்ஙனம்) தெளிந்துகொள்க. எ--று.

"உய்" என்பதுசெலுத்தும்எனும்பொருடரும்அடை.

ஒவ்வொருநையாயிதத்திலும் சாதனம் சாத்தியம் என்றிருபகுதிகள் உண்டு; அவற்றுள், சாதனமானது பூர்வசாதனம் உத்தரசாதனம் என்றிரண்டாம்; இவ்விருசாதனங்களிலுஞ் சாத்தியமானது வெளிப்படையானன்றிக் குறிப்பாய் அமைந்துகிடக்கும்; உதாகரணமாய்,—

---

யமுடித்தனையாயிதம்" என்று இங்ஙனம் மொழிந்ததற்கொப்பவே, "அனுமானம் அவினாபாவம் பேசுறுமேதுக்கொண்டு மறைபொருள்பெறுவதாகும்" எனச் சிவஞானசித்தியளவையிலும் மொழிந்திருக்கின்றது. சாத்தியமானது சாதனங்களிலே வெளிப்படையானன்றிக் குறிப்பாய் அமைந்துகிடத்தலின், அதனைப் பாஷிதமாகிய உரையிலே விரித்துவிளக்குவதே நியாயித்தற்குச் சிறப்பும் யுத்தித்தற்கு வலிமையுமாம்; சாத்தியத்தைப் பாஷிதமாகிய உரையிலே விளக்காது சாதனங்களிலேயே குறிப்பாய் அமைந்துகிடக்கவிடின், அச்சாத்தியம் எவர்க்கும் புலப்படாது நியாயித்தலும் வலிகுன்றிப்போன்றும். சாத்தியத்தை இலிங்கி எனக்கூறுவார்.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

பூர்வசாதனம்.—"நல்லோரெவருஞ்சாந்தத்தைநயக்கின்றனர்,"

உத்தரசாதனம்.—"இம்மந்திரிஒருநல்லவன்;" என்னும் இச்சாதனங்களிலே "இம்மந்திரி சாந்தத்தைநயக்கின்றனன்" என்னுஞ் சாத்தியமானது குறிப்பாய் அமைந்துகிடந்தமைகாண்க:

சாத்தியத்தை அனுமானம் என்னலும் ஆம்.

பூர்வசாதனத்தை முன்னரும் உத்தரசாதனத்தை அதன் பின்னருஞ் சாத்தியத்தை அவற்றின் பின்னுமாக "நியாயம்விரிவாயொழுங்கினுரைக்கின்," அதுவே நையாயிதநெறியாம்.

இவ்வாறு சாதனங்களை முன்னிறுந்திச் சாத்தியத்தைப் பின்முடியாமல், "இம்மந்திரிசாந்தத்தைநயக்கின்றனன்; என்னையெனின், இவன் ஒரு நல்லவன், நல்லோரெவருஞ் சாந்தத்தை நயக்கின்றனர்" என்று நியாயமுடிக்குமிடத்து, சாத்தியம் முதனிற்றலால் இங்ஙனம் பட்சம் ஆயிற்று; உத்தரசாதனம் பட்சத்தின் பின்னர் வந்து ஏதுவாயிற்று; பூர்வசாதனம் அதன்பின்னர் வந்து திட்டாந்தம் ஆயிற்று.

பூர்வசாதனத்தையும் உத்தரசாதனத்தையுஞ் "சாதனம்" என்னும் ஒரு சொல்லான் விளம்புமாறுபோல, ஏதுவையுந் திட்டாந்தத்தையும் "நியாயம்" என்னும் ஒரு சொல்லான் விளம்புதலும் உண்டு.

எடுத்துக்கொண்ட தொடர்பினுக்கேற்பச் *சாதனங்களை முன்னர்நிறுவிச் சாத்தியத்தைப் பின்னர் அனுமிப்பதும் உண்டு; சாத்தியமாகிய பட்சத்தையே முன்னர்

---

*பிறர்க்கு அறிவுறுத்துவதே முக்கியகருமமாயின், சாதனம் முன்னருஞ்சாத்தியம் பின்னரும் வரலாம்; அன்றி, அறிவுறுத்துவதே கருமமாயினும் வலியுறுத்துவதே முக்கியவிடமாயின், சாத்தியம்பட்சமாய் முன்னருஞ்சாதனம் நியாயமாய்ப் பின்னரும்வரலாம்; ஆயினும், நியாயிப்போர் ஒருநையாயிதத்தையே ஒருக்காற் சாதனசாத்தியமுறையாயும் ஒருக்காற்பட்ச நியாயமுறையாயும் வைத்தலின் இடந்தருணம் அறிந்து ஏற்பவைப்பதே முறையாம்.

ணைவத்து ஏதுதிட்டாந்தம் என்னு நியாயத்தைப் பின்னர் வருவிப்பதும் உண்டு.

இனி நையாயிதத்திலே அருகிப்பயில்கின்ற பட்சம் ஏது திட்டாந்தம் உபநயம் நிகமனம் என்னும் *பஞ்சாங்கங்களை உணர்த்துவான் உதாகரிப்பம்;

பட்சம்—இம்மந்திரி சாந்தத்தைநயக்கின்றனன், என்னையெனின்,
ஏது—நன்மை இவனிலே விளங்குகின்றது,
திட்டாந்தம்—நன்மையுடையோரெவருஞ் சாந்தத்தை நயக்கின்றனர்,
உபநயம்—இம்மந்திரி நன்மையுடையவன் ஆதலால்,
நிகமனம்—இம்மந்திரி சாந்தத்தை நயக்கின்றனன்.
பட்சம்-அந்தமலை நெருப்புடைத்து, என்னையெனி
ஏது—புகை அதிலே தோன்றுகின்றது, (ன்,
திட்டாந்தம்—புகையுள்ள இடமெதுவும் நெருப்புடைத்து,
உபநயம்—அந்தமலை புகையுடைத்து, ஆதலால்,
நிகமனம்—அந்தமலைநெருப்புடைத்து. இந்நையாயிதங்களுள் முதலுதாகரணத்திலே, "நன்மை இவனிலே விளங்குகின்றது" என்னும் ஏதுவம் "இம்மந்திரி நன்மையுடையவன்" என்னும் உபநயமும் எப்படியேனும் ஒருபொருளையே தருவனவாய்க் கூறியதுகூறலாயும், "இம்மந்திரி சாந்தத்தை நயக்கின்றனன்" எனும்பட்சமும் "இம்மந்திரிசாந்தத்தை நயக்கின்றனன்" எனும் நிகமனமும் பெயருணயமிலா அனுவாதமாயும், நிற்றலால், உபநயம் நிகமனம் எனும் இரண்டுறுப்புகளுஞ் சிறப்பில்லன என்றும், பட்சம் ஏது திட்டாந்தம் எனப்பெயர்கின்ற பூர்வசாதனம் உத்தரசாதனம் சாத்தியம்†

---

*பஞ்சாங்கம் என்பது ஐந்து உறுப்பு;-அவை, பட்சம் ஏது திட்டாந்தம் உபநயம் நிகமனம் எனமேலையுரைத்தவாறே சிவஞானசித்தியளவையிலும் வருகின்றன.

†சிவஞானசித்தியளவையிலே உரையாசிரியராகிய ஞானப்பிரகாசதம்பிரானும் இவ்வாறே உபநயம் நிகமனம் இரண்டும் சிறந்தனவல்லவேன்றும், பட்சம் ஏது திட்டாந்தம் மூன்றுமே சிறந்தன என்றும், உரைசெய்திருக்கின்றனர்.

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY

என்னுந் திரியாங்கங்களினாலேயே நையாயிதம் முடியும் என்றும், உய்த்துணர்ந்துகொள்க.

நையாயிதத்தையும் நியாயத்தையும் ஒன்றற்கொன்று ஒற்றுமையான்வழங்கலும், அனுமானத்தையும் நியாயத்தையும் ஒன்றற்கொன்று ஆகுபெயரான் வழங்கலும், உண்டு.

மேலையுரைத்த பஞ்சாங்கங்களுட் சிலவற்றைச் சிறிதே *விகற்பித்துரைப்பாரும் உளர்.

கக. மனனிவையாயிதசித்தியின்றத்துவசூத்திரம்ன்வ
இனியீபோதுப்பதமேலுடம்பட்டேனேதிர்மறுத்தேன்
னனியேவிசேடகித்திட்டதியாதுமவ்வாறதனில் [டே.
இனிதேயமையேதன்மேலும்விசேடகித்தேற்றலுண்

இ--யுள், நையாயிதங்கட்கெல்லாந் தத்துவசூத்திரம் உணர்த்துகின்றது.

இ--ள். மனனினையாயிதசித்தியின்றத்துவசூத்திரமவையினி-இப்போழுது நையாயிதங்களின் வலியை அளக்குந் தத்துவசூத்திரத்தைப் புந்தியிலே வைத்துக்கோள், (சோல்லுகின்றனம்.)

“ஈ போதுப்பத மேலுடம்பட்டேனேதிர்மறுத்தேனனியே விசேடகித்திட்ட தியாதுமவ்வாறதனிலினிதேயமையேதன்மேலும விசேடகித்தேற்றலுண்டே”--ஈந்துநிற்கும போதுப்

---

*அதுவருமாறு,—
“மலையிதுவன்னியையுடைத்து — பிரதிஞ்ஞை
புகையுடைத்தாதலால் — ஏது
எங்கெங்கேபுகையுண்டு, அங்கங்கேவன்னியுண்டு,
எப்படி அடுக்களை — திட்டாந்தம்,
அப்படி இந்தமலை புகையுடைத்து — உபநயம்
ஆகையால், அப்படிவன்னியுடைத்து நிகமனம்.”
“தோகையாருறுப்பைந்தொடுங் கூட்டிச்செல்லுவாருமுளர் துணிந்தே” என்பதிலும் பஞ்சாங்கங்கள் சிறந்தனவல்லவென்றே ஒலிக்கின்றது.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

பதத்தைப்பற்றி உடம்பாடாயேனினும் எதி
ர்மறையாயேனினும் விசேடகித்துரைத்ததே
தனையும் அப்பதத்துள் அமைந்த எப்பொரு
ண்மேலும் அவ்விதமாகவே விசேடகித்து ஏ
ற்றலாம்.—என்றவாறு.

"நனி" என்பது மிகஎனும்பொருடரும் அடை.
"இனிதே"என்பதுநன்கிதாய்எனும்பொருடரும்அடை.
"விசேடகித்திட்டது" என்றதனால், "ஈபொதுப்பதம்"
என்றது விசேடியத்தையென்று சுவாபப்பிரமாணமாய்
ஒலிக்கின்றது.

தத்துவம்என்பது தன்னிலேயே தெளிபொருளுடைய
தாய்த் தன்னைரூபிகரிக்கப் பிறசாதனத்தை அவாவாது
நிற்குந் *தாட்டாந்தம்; உதாகரணமாய்,–இரண்டுபொரு
ள்கள்தனித்தனி பிரிதொருமூன்றும்பொருளை நிகர்க்கு
மெனின், அவ்விரு பொருளுந் தம்முளும் ஒன்றனையொ
ன்றுநிகர்க்கும். தத்துவசூத்திரத்தை விளக்கும் உ--ள்,–

*நியாயிக்குமிடத்து, மாந்தரெவருஞ் சந்தேக விபரீத
மற ஒப்புக்கொள்ளுந் தத்துவசாதனத்தை வைத்தே
சாத்தியம்முடிக்கவேண்டியது; அன்றி, தத்துவசாதன
த்தையும் ரூபிகரிக்கவேண்டுமென்னின், நியாயம் வரம்
பிகந்துசெல்லுமென்றறிக; ஆகவே, நியாயித்தலும் இல்
லையென்றே அறுதியாம். "ஈபொதுப்பதமேலுடம்பட்
டேனெதிர்மறுத்தென்நனியேவிசேடகித்திட்டதியாதும்
அவ்வாறதனில் இனிதேயமைஎதன்மேலும்விசேடகித்
தேற்றலுண்டு" என்பது ஓர்தத்துவசாதனம்;—இத்தத்
துவசாதனத்தைப் பிறசாதனங்களால் ரூபிகரிப்பதே
லாது; ரூபிகரிக்கலாம் எனச்சிலர்கூறினும், அதனையே
பிறசொற்களான் உரைப்பரன்றி, பிறசாதனங்களை
வைத்து அதனைச் சாத்தியமாய் அனுமித்து ரூபிகரிக்க
மாட்டார் என்றறிக. "ஒன்றும் ஒன்றும் இரண்டு, ஒன்
றின்பாதி ஒன்றினுஞ் சிறிது, ஒன்று அதன் பாதியினும்
பெரிது" எனுந் தத்துவங்களை ரூபிகரித்தலேலாமை
போல, மேலையுரைத்த தத்துவசூத்திரத்தையுஞ் சித்தா
ந்தஞ்செய்வதேலாது,

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

க. பட்சிகள் காலுடையன,
ஆந்தைகள் பட்சிகள்; ஆகவே
ஆந்தைகள் காலுடையன;

இந்தஉதாகரணத்திலே "பட்சிகள்" எனும் ஈபொது ப்பதமேல் உடம்பாடாய்விசேடகித்திட்டகாலுடைமை யானது பட்சிகள் எனும் அப்பதத்துள் அமைந்த "ஆந் தைகள்" எனும் பொருண்மேலும் உடம்பாடாய் விசே டகித்தேற்றப்பட்டிருக்கின்றது.

உ. பட்சிகள் மரங்களல்ல,
மயில்கள் பட்சிகள்; ஆகவே
மயில்கள் மரங்களல்ல;

இந்த உதாகரணத்திலே, "பட்சிகள்" எனும் ஈபொ துப்பதமேல் எதிர்மறையாய் விசேடகித்திட்ட மரங்க ளானது பட்சிகள் எனும் அப்பதத்துள் அமைந்த "மயி ல்கள்" எனும்பொருண்மேலும் எதிர்மறையாயேவிசே டகித்தேற்றப்பட்டிருக்கின்றது.

௩. நல்லோர்கள் சாந்தத்தைநயக்கின்றனர்,
சிலஅரசர் நல்லோர்கள்; ஆகவே
சிலஅரசர் சாந்தத்தைநயக்கின்றனர்.

௪. புனிதமுடையோர்மறத்தொழிலவிரும்பார்,
சிலமந்திரிகள் புனிதமுடையோர்; ஆகவே
சிலமந்திரிகள் மறத்தொழிலவிரும்பார்.

கஉ. உண்டேநியாயமனைத்துமித்தத்துவசூத்திரத்தை
கண்டேமுடிதல்பின்றத்துவசூத்திரம்வேறிரண்டு [க்
கொண்டேமுடியுஞ்சுயம்பிதசம்பாவிதங்களெனும்
எண்டோய்பலதிறன்றுவனுமானமியாவையுமே.

இ—யுள், மேலைச்செய்யுளில் உரைத்த மகா தத்துவசூத்திரத்தால் எந்த நியாயமும் முடியும் என்றும், வேறிருதத்துவசூத்திரங்களாலும்முடியும் என்றும், உணர்த்துகின்றது.

இ—ள். உண்டேநியாயமனைத்துமித்தத்துவ சூத்திரத்தைக் கண்டேமுடிதல்-நையாயிதங் களெல்லாம் (மேலையுரைத்த) அத்தத்துவசூத்

திரத்தில்வந்தோடுங்கியே *முடிவதுண்டு.

பின்றத்துவசூத்திரம்வேறிரண்டுகோண்டே முடியுஞ் சுயம்பித சம்பாவிதங்களேனும் எண்டோய்பலதிறன்ருவனுமானமியாவையும் -(நேரேஒருக்காலேமுடியாவானபடியால்)மேலும், வேறிரண்டுதத்துவசூத்திரங்களாலே முடியும்,--சுயம்பிதநையாயிதம் சம்பாவிதநையாயிதம் என்னுந் தோகையுளடங்கிய பலதிறன் போருந்தும் நியாயானுமானமேல்லாம்.- என்றவாறு.

நையாயிதங்களனைத்தையும் முன்னருரைத்த மகா தத்துவசூத்திரத்திற் கோணர்ந்து முடித்தலின் உழப்பும் அருமையும் நோக்கியே, வேறிரண்டு தத்துவசூத்திரங்களுரைப்பான்றொடங்கினம்.

“பலதிறன்ருவனுமானம்” ஆவன,—

௧. சுவார்த்தானுமானம்,—இது “பக்கமூன்றின்மூன்

---

*மேவல இருபத்துமூன்ருஞ் செய்யுளின்கீழ் உதாகரித்திருக்கும் பலதுறை நையாயிதமனைத்தையும் மகா தத்துவசூத்திரத்திலே கோணர்ந்து முடிக்கும்விதத்தைஅங்ஙனம் உரைப்பாம்; அந்த விதியினுல் முடித்தறிந்துகோள்க. “உண்டேநியாயமனைத்துமித்தத்துவசூத்திரத்தைக்கண்டேமுடிதல்” என்றுரைத்ததனுல், எந்தநியாயத்தையுந் தத்துவசூத்திரத்திலேயே கோணர்ந்து முடிக்கவேண்டியதென்றெருநியதி தோன்ருது; விரும்பியவிடத்து, நியாயம்போலியன்றென விளக்கும்படி தத்துவசூத்திரத்தால் முடித்துக்காட்டலாம்; நியாயமானது தத்துவசூத்திரத்தான் முடியுமேனின் ஆபாசமாகிய போலி இல்லையேன்றும், முடியாதேனின் ஆபாசமாகியபோலி உண்டென்றும் அறியலாம். “சத்தசாத்திரமுறையாய்ப் பேசுதல்” என்பதற்கு ஒவ்வோரு சோல்லையும் பதமுடித்தல் என்பது போருளல்லாதவாறுபோல “நியாயஇலக்கணமாய்ப்பேசுதல்” என்பதற்கும் ஒவ்வோருநியாயத்தையும் நையாயிதமாக்கித் தத்துவசூத்திரத்தாலும் முடித்துக்காட்டுதல் என்பதுபோருளல்ல.

றேதுவுடையபொருளைப்பார்த்துணரத் தக்கஞானந்த ன்பொருட்டாம்'' என்றுசிவஞானசித்திஅளவையிலும், "குருவறிதறன்பொருட்டாய்க்கொள்வர்'' என்று அளவைவிளக்கத்திலும், உரைத்திருக்கின்றது.

உ. பரார்த்தானுமானம்,-இது "பிறர்தம்பொருட்டாமநுமானந்தொக்கவிவற்ருற்பிறர்தெளியச்சொல்வதாகும்'' என்று சிவஞானசித்திஅளவையிலும், "குருவருளாற் பின் சீடற்கோதல் பிறர்பொருட்டா மான்மானம்'' என்று அளவைவிளக்கத்திலும், உரைத்திருக்கின்றது.

ங. கேவலான்வயானுமானம்,—இது பட்சம்ஏதுதிட்டாந்தம் உபநயம்நிகமனம்எனும்பஞ்சாங்கங்களால்விரிந்து வெளிப்படையினிற்கும் அன்னுவயஅனுமானம்; உதாகரணம்,—

"இந்தமலைநெருப்புடைத்து, என்னையெனின்,
இது புகையுடைத்து,
புகையுள்ளஇடம்நெருப்புடைத்து,
இம்மலைபுகையுடைத்து, ஆகவே,
இம்மலைநெருப்புடைத்து.'' இதனைச்சற்றே விகற்பித்துரைப்பாரும்உளர்.

ச. கேவலவியதிரேகானுமானம்,—இதுபஞ்சாங்கங்களால்விரிந்துவெளிப்படையினிற்கும் வியதிரேகஅனுமானம்; உதாகரணம்,—

"இம்மலைநெருப்புடைத்து, என்னையெனின்,
இதுபுகையுடைத்து,
நெருப்பில்லாதஇடம் புகையுடைத்தன்று,
இம்மலைபுகையில்லாததன்று, ஆகவே.
இதுநெருப்பில்லாதஇடமன்று.'' இங்ஙனம்உரைத்ததைச் சிறிதேவிகற்பித்து அளவையில் உதாகரித்திருக்கின்றது.*

["நெருப்பில்லாதஇடம்புகையுடைத்தன்று'' என்னு

---

*அதுவருமாறு,—
"மலையிது வன்னியையுடைத்து பிரதிஞ்ஞை.
புகையுடைத்தாதலால் ஏது.
எங்கெங்கேவன்னியில்லை, அங்கங்கே புகையில்லை, எப்படி, மடு திட்டாந்தம்.
அல்லஅப்படிஇது உபநயம்.
ஆகையால், அல்லஅப்படிஇது நிகமனம்.

ஞ்சாமானிய வியதிரேகதாட்டாந்தத்தை இடமாற்றின், "புகையுள்ள இடம்நெருப்பில்லாதஇடமன்று" எனவரும்; "நெருப்பில்லாததன்று" என்பது நெருப்புடைத்து எனும்பொருளேயாதலின் "புகையுள்ள இடம் நெருப்புடைத்து" என்று முடியுமாறு காண்க.]

ரு கணிதானுமானம்,—இது எண்களினலே தேள்ளிதினளந்து கணிக்கவரும் பொருள்களின் சம்பந்தசார்புகளைப்பற்றிய நியாயம்* ஆம்.

சு. அனுபவானுமானம்,—இது உலகிலே இயல்பாய் நிகழுஞ் சம்பவங்களைப்பற்றி நம்மில் வந்த அனுபவமே ஆதாரமாய் நடக்கும் நியாயம் ஆம்; (வேதனுனுமானமுந் துல்லியானுமானமும் கதார்த்தானுமானமும் அனுபவானுமானத்தின் பகுப்புகளாம்.)

எ. வேதனுனுமானம்,--இது விசேடவிடயகதங்களிற் சாமானியபிரமேயத்தையளக்கும் நியாயம் ஆம்; (கூஅ. ம் செய்யுளின்கீழும் அனுபந்தத்திலுங் காண்க.)

அ. துல்லியானுமானம்;--இது ஒருவிடயத்தாலேனுங் கதத்தாலேனும் அதனினத்துளமைந்த பிரிதொருவிடயத்தையெனினுங் கதத்தையெனினும்பற்றி நியாயிக்கும் அனுமானம் ஆம்; (அனுபந்தத்திட்காண்க.)

கூ. காரணுனுமானம்; இது காரணங்களாற் காரியங்களை அனுமிக்கின்ற நியாயம் ஆம்; அமாவாசியை பௌரிணிமி வருதலாகிய காரணத்தைக்கொண்டு சூரியகிரகணமுஞ் சந்திரகிரகணமும் ஒன்றுக்கொன்று பதிவணந்துதிதிக்குட்படவரா† என்று சாதிப்பது.

---

*உதாகரணமாய்,—

ஆறின்வர்க்கம்முப்பத்தாறு,

மூன்றின்வர்க்கத்தை நாலாற்பெருக்கிவருங்குணிதம் ஆறின்வர்க்கத்துக்குச்சமன்; ஆகவே, மூன்றின்வர்க்கத்தைநாலாற்பெருக்கிவருங்குணிதம் முப்பத்தாறு.

†இந்நியாயத்தைச் சுயம்பிதனையாயிதமாய்க்கோணரின் எப்படி நிற்குமெனின்,—

அமாவாசியை பௌரிணிமி ஒன்றுக்கொன்று பதிவணந்து திதிக்குட்படவரா; சூரியகிரகணமுஞ்சந்திரகிரகணமும்அமாவாசியை பௌரிணிமிக்குரியது; ஆகவே,

சூரிய சந்திரகிரகணங்கள் ஒன்றுக்கொன்று பதிவணந்துதிதிக்குட்படவரா.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472 Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

கO. காரியானுமானம்,-இது காரியங்களாற்காரணங் களை அனுமிக்கின்ற நியாயம் ஆம்: * உலகமாகிய காரி யத்தைக்கொண்டு கர்த்தா உண்டென்று† சாதிப்பது.

கக. தண்டாபூபிகானுமானம்,-இது ஒன்றன் முடிபி னால் அதனினுந் தெள்ளிய பின்னொன்றனையும் அருத் தாபத்தியான் முடிக்கும் நியாயம் ஆம்; துட்டகண்டகனா கிய ஒரு திருடனை வதைக்கத் தகுமெனின், பெற்றதா யை வன்மமாய்க் கொன்ற வன்கண்ணனை வதைக்க வேவேண்டும், என்று சாதிப்பது.

இவையும் பாரிசேடானுமான முதலிய நியாயங்களுமெ ல்லாஞ் சுயம்பிதநையாயிதம் சம்பாவித நையாயிதம் எ ன்னும் இரண்டனுள் அடங்கி, முன்னருரைத்த மகாதத் துவசூத்திரத் தொடுங்கி முடியும் என்றறிக; நியாய இலக் கணத்தைக் கற்றுணர்ந்தபின் கண்டுதெளிக.

கங. வையேயிரண்டுபதமோருமூன்றும்பதத்துடனே
செய்யேயுறழினிற்றம்முடனேயுமுறழ்ந்திடுமாற் {ல்
பெய்யோர்பதத்துடனொன்றுறழ்ந்தோன்றுபிறழ்ந்திடுமே
மெய்யேயிரண்டுதம்மோடும்பிறழும்விரித்துணரே

இ--யுள், தத்துவசூத்திரங்களிரண்டனையு ம் உணர்த்துகின்றது.

இ--ள். வையேயிரண்டுபதமோருமூன்றும் பதத்துடனே செய்யேயுறழினிற்றம்முடனே

---

*இந்நியாயத்தைச் சுயம்பித நையாயிதமாய்க் கோ ணரின் எப்படிநிற்குமெனின்,—
காரியமெதுவுங் கர்த்தாவையுடைத்து,
உலகம் ஒருகாரியம்; ஆகவே
உலகங் கர்த்தாவையுடைத்து.

†இடித்துமின்னியிருண்டுமேக மெழுந்தபோதீதுபெய் யுமென்-றடுத்ததும் அகிலசந்தம்உந்தியவலத்துவார்புன லாறுகொண்—டெடுத்துவந்திடமால்வரைக்கணிருந்து கொண்டல்சோரிந்தெனு—முடித்ததும் இவை காட்சிய ன்றனுமானமென்றுமொழிந்திடே; என்று சிவஞானசி த்தியின் பரபட்சம் லோகாயதமறுதலையிலே காரணனு மானமுங் காரியானுமானமும் உதாகரித்திருக்கின்றது.

யுமுறழ்ந்திடும்--(புந்தியிலே) அமைத்துக்கோள்; இரண்டுபதங்கள் ஒரு மூன்றும் பதத்துடனே ஒற்றுமைப்படின், அவ்விரண்டுந் தம்முடனேயும் ஒற்றுமைப்படும்.*

பெய்யோர்பதத்துட ஞென்றுறழ்ந்தோன்று பிறழ்ந்திடுமேல் மெய்யேயிரண்டுதம்மோடும் பிறழும்--சோல்லியஒரு (மூன்றும்) பதத்துடனேஒருபதம் ஒற்றுமைப்பட்டும்மற்ருேருபதம் வேற்றுமைப்பட்டும் வரின், அவ்விரண்டுந் தம்முடனேயும் வேற்றுமைப்படும். †

விரித்துணர்- (இவைகளைமகாதத்துவசூத்திரத்திலேயும்) விரித்தறிந்துகோள்.-எ-று.

"செய்யே" என்பத செவ்விதாய் எனும் பொருடரும் அடை. [அடை.

"மெய்யே" என்பது மெய்மையாய் எனும்பொருடரும்

சாத்தியத்தில் நிற்கும் இருபதங்களையே "இரண்டுபதம்" என்று இங்ஙனங்கருதியது.

சாதனங்களில்வரும் மத்திய பதத்தையே "மூன்றும் பதம்" என்றுநுதலியது.

---

*உதாகரணமாய்,-ஆந்தைகள்,- காலுடையன-எனும் இரண்டு பதங்கள் "பட்சிகள்" எனும் ஒரு மூன்றும் பதத்துடனே,—

"பட்சிகள் காலுடையன" என்றும்

"ஆந்தைகள் பட்சிகள்" என்றும் உறழின்,

"ஆந்தைகள் காலுடையன" என்று தம்முடனேயும் உறழும்.

†உதாகரணமாய்,—மயில்கள்,-மரங்களல்ல-எனும் இரண்டு பதங்கள் "பட்சிகள்" எனும் ஒரு மூன்றும்பதத்துடனே,—

"பட்சிகள் மரங்களல்ல" எனஒன்றுபிறழ்ந்தும்,

"மயில்கள் பட்சிகள்" எனஒன்றுறழ்ந்தும்வரின்,

"மயில்கள் மரங்களல்ல" என்று இரண்டுந் தம்முடனேயும் பிறழும்.

Digitized by EMORY UNIVERSITY  Original from EMORY UNIVERSITY

உறழ்தல் என்பது (விசேடியமான) ஒருபதத்துடன் (விசேடகமான) வேறொருபதம் உடம்பாடாய் நிற்றல். பிறழ்தல் என்பது விசேடியமான ஒரு பதத்துடன் விசேடகமான வேறொருபதம் எதிர்மறையாய்நிற்றல்.

கக. ம் செய்யுளின்கீழ் உரைத்திருக்கிற க-ம். ௩-ம் உதாகரணங்கள் இங்ஙனங்கூறிய தத்துவ சூத்திரங்களின் முற்சூத்திரத்தாலும், உ-ம் ச-ம் உதாகரணங்கள் பிற்சூத்திரத்தாலும், முடியும்.

இவ்விருதத்துவசூத்த்ரங்களானும் சுத்தசுயம்பிதனையாயிதங்களின் சித்தியை அளந்துகொள்க.

கச. உணரேமுடிந்திடுமன்வயசாத்யமுற்சூத்திரத்தின்
இணையேமுடியும்வெதிரேகசாத்தியஞ்சூத்திரம்பின்
துணைசேருந்தத்துவசூத்ரனையாயிதங் தோய்ந்தவென்ன
அணையேய்விதிகடருவமளக்கனையாயிதமே.

இ-யுள், தத்துவசூத்திரங்களிரண்டினுலும் இன்னின்ன சாத்தியங்கள் முடியும் என்றுணர்த்துகின்றது.

இ--ள். உணரேமுடிந்திடுமன்வயசாத்யமுற் சூத்திரத்தின்—அறிந்துகோள், அன்னுவயமாய்நிற்குஞ் சாத்தியமெதுவும் முற் * சூத்திரத்தாலேமுடியும்.

முடியும்வெதிரேகசாத்தியஞ்சூத்திரம்பின்-வியதிரேகமாய்நிற்குஞ் சாத்தியமெதுவும் பிற் † சூத்திரத்தாலேமுடியும்.

---

* "இரண்டுபதமொரு மூன்ரும்பதத்துடனே செய்யேயுறழினிற்றம்முடனேயும் உறழ்ந்திடும்" என்றதே முற்சூத்திரம்என இங்ஙனங் கருதியது. அன்னுவயதாட்டாந்தமாவது விசேடியம் விசேடகத்துடன் உறழ்கின்றதெனச்குறிப்பதாம்.

† "பெய்யோர்பதத்துடனென்றுறழ்ந்தொன்றுபிறழ்ந்திடுமேல்மெய்யேயிரண்டுதம்மோடும்பிறழும்" என்றதே பிற்சூத்திரம் என்இங்ஙனம் நுதலியது. "வியதிரேகதாட்டாந்தமாவது விசேடியம் விசேடகத்துடன் பிறழ்கின்றதெனக் குறிப்பதாம்."

துணைசேருந்தத்துவசூத்ர நையாயிதந்தோய்ந்
தவென்ன அணையேய்விதிகடருவமளக்கநை
யாயிதமே--தத்துவ சூத்திரங்களிரண்டிலேயு
ம் நையாயிதமெல்லாம் அந்தர்ப்பவித்தன எ
ன்று கண்டு,- நையாயிதங்களை அளக்கும்படி,
(தத்துவசூத்திரங்களாகிய)ஆதாரத்தின்மேலே
நிற்கும் விதிகளைச்சொல்லுவம்.-எ--று.

' இணையே'' என்பதுநிகராய்எனும்பொருடரும்அடை.

க—ம் செய்யுளிலே "நியாயஇலக்கணம்யுத்தியதன்
கலை'' என்றும், "நியாயநடையினுக்காதாரமாயுலவு
மிலக்கணமே * தெளியுங்கலை'' என்றும் மொழிந்த
தை மகாதத்துவசூத்திரத்திலுந்தத்துவசூத்திரங்களிரண்
டிலுங் கண்டுகொள்க; "நியாயஇலக்கணம்யுத்தியதன்
வித்தை'' என்றும், "வித்தையென்பதலமின்றுபுந்திய
னுமிக்கவேவிதியாய்ந்திடும்'' என்றும் மொழிந்ததை மே
லைச் செய்யுள்களிற்றரும் விதிகளிலே கண்டுகொள்க.

"கலையென்பது நிலையாய்ப் பொருள்களொன்றற்
கொன்றுள்ள நிருவிகற்பமான சம்பந்தசார்புகளைப்ப
ற்றிய அறிவாகிய ஞானம்'' என்றும், ' வித்தைஎன்பது
கலையிற்பிறந்த அறிவைத் தொழிற்பால் அமைக்குஞ்
சாதனை'' என்றும், உரைத்ததையும் தத்துவ சூத்திரங்
களிலும் மேலையுரைக்கும்விதிகளிலுங்கண்டுதெளிக.

நியாயநடையினுக்காதாரமாய் உலவுமிலக்கணங்க
ளை அல்லதுயுத்திநடையின் சம்பந்தசார்புகளைச் சந்
தேகவிபரீதமற ஆராய்ந்து மெய்மையாய்த் தெளிந்தபி
ன்னர், அந்த அறிவை நியாயஇலக்கணநூலிற் கோண
ர்ந்து கலையாய்த்தருதலும், அக்கலையைப் பிறர்க்குண

---

*நியாயஇலக்கணமானது கலையாய்க்கருதப்படுங்கா
ல், விசேடியவிசேடகபதங்களான் வருந்தாட்டாந்தங்
களாகிய பொருள்களொன்றற்கொன்றுள்ள நிலையான
சம்பந்தங்களைத் தெளிந்து, அச்சம்பந்தங்கள் தத்துவ
சூத்திரங்களில் உரைத்தவாறே இருக்குமென்று விளக்கு
ம்; வித்தையாய்க் கருதப்படுங்கால், தத்துவசூத்திரங்க
ளில் உரைத்தவாறே அச்சம்பந்தங்களை இருத்தும்படி
இன்னின்னசெய் என்று சொல்லும்.

ர்த்தலும், அவர் அதனைத் தெளிந்து விளங்கி அங்கீகரித்தலும், அக்கலையைத் தொழிற்பால் அமைத்துச் சாதனைசெய்தலும், பிறவும் அச்சம்பந்தசார்புகள் நிலையும் நிருவிகற்பமுமானவைகள் என்று மாந்தருடையபுந்தியிலே இயற்கையுஞ் சகசமுமாய்க்கிடக்கும் பிரஞ்*ஞைகாரணமாகவே இயலுகின்றனவெனவுந் தெளிந்துணர்க.

கரு. நையாயிதத்தினிற்பூருவமத்தியமுத்தரமா
மெய்யேபதமொருமூன்றுண்டுபூருவசாதனமே
ஐயார்தருமுத்தரசாதனத்தொடுசாத்யமென்று
நையாயிதத்தின்முத்தாட்டாங்தமெய்துநலந்தரவே.

இ--யுள், நையாயிதங்களை அளக்கும்படி தத்துவசூத்திரங்களாகிய ஆதாரத்தின் மேலே நிற்கும் விதிகளை உணர்த்துவான்றொடங்கி, முதலாம் இரண்டாம்விதிகளை இங்ஙனம் உணர்த்துகின்றது.

---

*சம்பந்தசார்புகள் நிலையும் நிருவிகற்பமுமானவைகள் என்று மாந்தருடைய புந்தியிலே இயற்கையுஞ் சகசமுமாய் ஒரு பிரஞ்ஞைகிடவாதிருப்பின், அவற்றை ஆராய்தலுந் தெளிதலும் கலையிற்றருதலும் உணர்த்தலும் சாதனைசெய்தலும் பிறவும் ஏலா. மழை வெயில் காற்றுமுதலியவற்றிற்கு விலகியொதுங்க மனைகோலுதலும், உயிர் சுகம் இன்பம் முதலிய வேண்டிப் பொருளீட்டலும், தழல் சலம் நஞ்சு முதலியவற்றிற்கு உயிர்பேணலும், இவைபோலும் அனந்த கிருத்தியங்களெல்லாம் சம்பந்தசார்புகளைப்பற்றிப் புந்தியில் உறையும் பிரஞ்ஞை காரணமாயே இயலுகின்றன; இப்படி ஓர்பிரஞ்ஞை தம்மிலில்லையென்று சிலர் சொல்லினும், அது உண்டென்று தத்தம்செயலாற் சாதிக்கிறார்; அவருடையநெஞ்சமே அவர்க்குணர்த்தும். அனுபவத்தினாலே, இன்னின்ன பொருள்கட்குள்ள சம்பந்தங்கள் இவையென்று தெளிகின்றனம்; பிரஞ்ஞையினாலேயோ, உலகிற்பொருள்கட்குள்ள சம்பந்தசார்புகள் நிலையும் நிருவிகற்பமுமானவையென்று அறிவம்.

இ--ள். நையாயிதத்தினிற் பூருவம் மத்திய முத்தரமா மெய்யேபதமொருமூன்றுண்டு-நையாயிதமோவ்வொன்றிலும் பூர்வபதம் மத்தியபதம் உத்தரபதம் என்று மூன்று பதங்கள் மாத்திரம் உண்டு.

பூருவசாதனமே ஐயார்தரு முத்தரசாதனத் தோடுசாத்யமென்று நையாயிதத்தின்முத்தாட்டாந்த மெய்துநலந்தர--நையாயிதமோவ்வொன்றிலும் பூர்வசாதனம் உத்தரசாதனம் சாத்தியம் என்று மூன்றுதாட்டாந்தங்கள் மாத்திரம் உண்டு,-என்றவாறு.

ஐயார்தரும் என்பது அழகுநிறைந்த எனும் பொருடரும் அடை

மெய்யே, நலந்தர, எனுஞ் சொற்கள் "மாத்திரம்" எனும் பொருட்டொனியில் வந்துநின்றன. மெய்யே என்பது உண்மையாய் எனவும் நலந்தர என்பது அழகு பெற என்றும் பொருள்படும்.

பூர்வபதம் என்பது சாத்தியத்தின் அல்லது பட்சத்தின் விசேடகம் ஆம்.

உத்தரபதம் என்பது சாத்தியத்தின் அல்லது பட்சத்தின் விசேடியம் ஆம்.

மத்தியபதம் என்பது பூர்வபதத்தையும் உத்தரபதத்தையும் (இவற்றின் உறழ்வையெனினும் பிறழ்வையெனினும் யூகிக்கும்படி) தனித்தனி புணர்த்திப் பார்த்தற்கிடனாய் நிற்கும் மூன்றாம்பதம் ஆம்; "இரண்டுபதமொருமூன்றாம்பதத்துடனே செய்யேயுறழினிற்றம்முடனேயுமுறழ்ந்திடுமாற் பெய்யோர்பதத்துடனொன்றுறழ்ந்தொன்றுபிறழ்ந்திடுமேல் மெய்யேயிரண்டுதம்மோடும்பிறழும்" என்று மேலையுரைத்த தத்துவசூத்திரங்களிலே ஒட்டி இவற்றைத்தெளிந்துகொள்க.

ஒரு நையாயிதத்திலே மூன்றுபதங்களேயன்றி அதிகம் வருமெனின், மத்தியபதம் இரண்டு அல்லது பலவாகித் தத்துவசூத்திரங்களை முரணும்; நையாயிதமுஞ்சித்திதன்றும்; "யுத்திஇருயூகநின்றனுமிக்குநடை" என்பத

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

ஞேடுஞ்சார்த்தி நையாயிதத்திலே முப்பதங்களே வருமென்று அறிக.

பூர்வசாதனம் என்பது பூர்வபதமும் மத்தியபதமும் புணர்ந்துநிற்குந் * தாட்டாந்தம் ஆம்.

உத்தரசாதனம் என்பது உத்தரபதமும் மத்தியபதமும் புணர்ந்து நிற்குந் தாட்டாந்தம் ஆம்.

சாத்தியம் என்பது உத்தரபதமும் பூர்வபதமும் புணர்ந்து முடியும் அனுமான தாட்டாந்தம் ஆம் "முன்சாத்தியம் பட்சமுடன் உய் பிரதிஞ்ஞை" என்றதனேடொப்பச் சாத்தியமானது பட்சம் அல்லது பிரதிஞ்ஞையெனவுநிற்கும்.

ஒரு நையாயிதத்திலே பூர்வசாதனம் உத்தரசாதனம் சாத்தியம் எனமூன்று தாட்டாந்தங்களே வருமென்பதனைத் தத்துவ சூத்திரங்களிலே ஒட்டி அளந்துகொள்க; தத்துவசூத்திரத்தின் வலியையும் ஆங்காங்கு அறிந்து தெளிக.

நையாயிதமொன்றிலே மூன்று தாட்டாந்தங்களேயன்றிஅதிகம்வருமெனின், முப்பதங்களின் மேற்பதமெனினுங் கூறியதுகூறலான தாட்டாந்தமெனினுந் தலைப்பெய்துளப்பட்டுத் தத்துவசூத்திரங்களை மரணும்; முப்பதங்களை இரண்டிரண்டாய்ப் புணர்த்த மூன்றுதாட்டாந்தங்களே பிறக்கும் என்று கணித விதியாலுமறிக.)

---

*பூர்வசாதனத்தில் நிற்கும் பூர்வபதமானது ஏற்றநிலைச்கியைய விசேடியமாயும் வரும் விசேடகமாயும்வரும்; உதாகரணமாய்,—"விலங்குகள்யுத்தியுடையனவல்ல" எனும் பூர்வசாதனத்திலே "யுத்தியுடையன" எனும் பூர்வபதம் விசேடகமாயும், "யுத்தியுடையனவிலங்குகளல்ல" எனும் பூர்வசாதனத்திலே "யுத்தியுடையன" எனும் பூர்வபதம்விசேடியமாயும் வருமென்று கொள்க. இதனை நிலயுட்காண்க. இவ்வாறே, உத்தரசாதனத்திலே உத்தரபதமானது விசேடியமாயேனும் விசேடகமாயேனும் வரும்; வரவே, சாதனங்களிலே மத்தியபதமானது, ஏற்றநிலைக்கியைய, விசேடியமாயும் விசேடகமாயும் வரும் என்றறிக. இவைகளெல்லாந்துறைகளிலும் நிலைகளிலுமே கண்டு நன்குதெளிக.

நல்லவன் சாந்தத்தை நயக்கின்றனன்,
இம்மந்திரி நல்லவன்; ஆகவே
இம்மந்திரி சாந்தத்தை நயக்கின்றனன்; எனுஞ் சுத்தசுயம்பித ஙையாயிதத்திலே, "இம்மந்திரி சாந்தத்தை நயக்கின்றனன்" என்பது சாத்தியம்; இச்சாத்தியதாட்டாந்தத்திலே விசேடியமாய் நிற்கும் "இம்மந்திரி" என்பது உத்தரபதமும், விசேடகமாய் நிற்குஞ் "சாந்தத்தை நயக்கின்றனன்" என்பது பூர்வபதமும் ஆம். சாத்தியத்தைச் சாதித்தற்கிடனாய் நின்ற சாதனமிரண்டனுளும் விரவிவிளங்கிய "நல்லவன்" என்பது மத்தியபதம். "நல்லவன் சாந்தத்தை நயக்கின்றனன்" எனுந்தாட்டாந்தமானது பூர்வபதமும் மத்தியபதமும் புணர்ந்துநிற்றலிற் பூர்வசாதனம் ஆம்; "இம்மந்திரி நல்லவன்" எனுந்தாட்டாந்தமானது உத்தரபதமும் மத்தியபதமும் புணர்ந்து நிற்றலின் உத்தரசாதனம் * ஆம்.

கசூ. தருமத்தியபதஞ்சாதனந்தம்மிற்சிலேடையதாய்
வரவும்படாதிருசாதனந்தோன்றிலொருமறையேன் [ம்
விரியீந்துநிற்கவும்வேண்டிடுஞ்சாதனத்தோன்றிலெனு
சரியிர்திடாப்பதம்யாதெனுஞ்சாத்தியத்தீயன்மினே.

இ-யுள், மூன்றும்நாலாம் விதிகளை உணர்த்துகின்றது.

---

* "ஒழுக்கமுடைமை குடிமை,
இந்நளனனின்சீலம் ஒழுக்கமுடைமை; ஆகவே
இந்நளனனின்சீலங் குடிமை"—என்னு ஙையாயிதத்திலே, "இந்நளனனின்சீலங்குடிமை" என்பது சாத்தியம்; இச்சாத்தியத்தின் விசேடியமான "இந்நளனனின் சீலம்" என்பது உத்தரபதமும், விசேடகமான "குடிமை" என்பது பூர்வபதமும் ஆம்: சாதனங்களில் விரவிவிளங்கும் "ஒழுக்கமுடைமை" என்பது மத்தியபதம்; ஒழுக்கமுடைமைகுடிமை என்பது பூர்வபதமும் மத்தியபதமும் புணர்ந்துநிற்றலிற் பூர்வசாதனம் ஆம்; இந்நளனனின்சீலம் ஒழுக்கமுடைமை என்பது உத்தரபதமும் மத்தியபதமும் புணர்ந்துநிற்றலின் உத்தரசாதனம் ஆம். இப்படியே ஙையாயிதங்களில் வரும் பதங்களிலுஞ் சாதனங்களிலும் பயின்று பழகுக.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

இ--ள். தருமத்தியபதஞ்சாதனங் தம்மிற்சிலேடையதாய் வரவும்படாது--சொல்லும்மத்தியபதமானது சாதனங்களிலே சிலேடையுடையதாய் வரவும்படாது.

இருசாதனத்தோன்றிலொருமுறையேன் விரியீந்து நிற்கவும்வேண்டிடும்-சாதனமிரண்டனுள் ஒன்றிலெனினும் ஒரு முறையாகுதல் (அம்மத்தியபதமானது) தன் பொருள்விரியிலே ஈயப்பட்டுநிற்கவும் வேண்டியது.

சாதனத் தோன்றிலெனுஞ் சரியீந்திடாப்பதம் யாதேனுஞ் சாத்தியத்தீயன்மின்--சாதனங்களுள் ஒன்றிலேனுஞ் செவ்விதாக ஈயப்பட்டுநில்லாத பதமேதனையுஞ் சாத்தியத்திலே ஈயாதிருங்கள.-என்றவாறு.

"மத்திய பதஞ் சாதனங்தம்மிற் சிலேடையதாய் வருதல்" ஆவது ஒரு சாதனத்துள் ஒரு அர்த்தமும் மற்றச் சாதனத்துள் வேறர்த்தமுமாயேனும், அல்லது சாதனங்களிரண்டுளும் ஈந்திடாப்பதமாய் நின்று ஒரு சாதனத்துட் டனதுபொருள்விரியிற் சிலவற்றையும் மற்றச்சாதனத்துளோ ஒழிந்தவற்றையெனினும் அவற்றுட் சிலவற்றையெனினுங்குறிப்பதாயேனும் (மத்தியபதம்) வருதலாம்; இவ்வாறு வருமிடத்து, மத்தியபதமானது ஒலி மாத்திரையான் ஒன்றேனினும் பொருண்மாத்திரையான் இரண்டேயாய், முதலாம் விதியோடும் மாறுகொண்டு தத்துவ சூத்திரங்களையும் முரணும்;—"இரண்டு பதமொருமூன்றும் பதத்துடனே" என்றே தத்துவ சூத்திரம் விளம்புகின்றது.—

சிலேடை மத்தியபதத்திற்கு உதாகரணம்;—

வேங்கை ஒருமரம்,
இவ்விலங்கு ஒருவேங்கை; ஆகவே
இவ்விலங்கு ஒருமரம்; இந்த நையாயிதத்திலே நிற்கும் "வேங்கை" எனும் மத்தியபதமானது பூர்வசாதனத்திலே வேங்கையாகிய மரத்தையும், உத்தரசாதன

த்திலேயோ வேங்கையாகிய புலியையுங் குறிக்குஞ் சிலேடை மத்தியமாய்ச் சாத்தியப்போலி * யாயிற்று.

ஈந்திடா மத்தியபதத்திற்கு உதாகரணம்;—

இமயம் ஒருமலை
பொதியம் ஒருமலை; ஆகவே
பொதியம் இமயம்; இந்த நையாயிதத்திலே நிற்கும் "மலை" எனும் மத்தியபதமானது பூர்வசாதனத்திலே மலைகளுளொன்று என்னும் ஒரு அர்த்தத்தையும் உத்தரசாதனத்திலே மலைகளுளொன்று என்னும் வேறர்த்தத்தையுங் கருதி, இருசாதனத்தொன்று ளொருமுறையேன் விரியீந்து நில்லாத ஈந்திடாமத்தியபதமாய்ச் சாத்தியப்போலியாயிற்று. (இவ்வகையானபோலி நியாயங்களை ஆபாசத்துட்காண்க)

"மத்தியபதம் இருசாதனத்தொன்று ளொருமுறையேன் விரியீந்து † நிற்றல்" ஆவது சாமானிய தாட்டாந்த சாதனங்களின் விசேடியமாயெனினும், வியதிரேகதாட்டாந்த சாதனங்களின் விசேடகமாயெனினும் ஒருமுறையாகுதல் வந்து நிற்றலாம். சாத்தியபாதங்களுளொன்று மத்தியபதத்தாற் குறிக்கப்படும் பொருள்கள் சிலவற்றுடனேயும் மற்றது பொருள்களனைத்துடனேயும் புணர்த்தப்படுமேல், அவ்விருபதங்களும் ஒரு பத

* "போலியிற் சாத்யநியாயித்தற் சூத்ரவிதிகள் மாறுணுறு சாத்தியஞ் சாதனந் தம்மில் விளைவதின்றுய் ஏலுநியாயித்தலொன்றினிலெய்தும் வழுவதென்ப" என்று ஆபாசத்துட் சாத்தியப்போலியைப்பற்றி விளக்கியதைக் கண்டுகொள்க. சிலேடைமத்தியபதமும் ஈந்திடா மத்தியபதமும் போலியின்கீழ் வரும்.

நாகம் ஒருவிலங்கு.
இம்மரம் நாகம்; ஆகவே
இம்மரம் ஒருவிலங்கு—சிலேடைமத்தியபதம்
கங்கை ஒருநதி,
காவிரி ஒருநதி; ஆகவே
காவிரி கங்கை—ஈந்திடாமத்தியபதம்

† "விசேடியமீந்திடுஞ் சாமானியமொன்றுமே நெறியின் விசேடகமே வெதிரேகமொன்றீந்திடும்" என்றுரைத்த செய்யுளின்கீழ்க்காண்க.

த்துடனேயே புணர்த்தப்பட்டனவாதலின் மத்தியபதம் இருசாதனத்தொன்று ளொருமுறையேன் விரியீந்து நிற்கினும் அமையும் என்றறிக; "அதனில் இனிதேயமையெதன்மேலும் விசேடகித்தேற்றலுண்டு" என்று தத்துவசூத்திரஞ்சொல்லியதையும் உணர்க.

மத்தியபதஞ் சாதனமொன்றனுள் மாத்திரம் ஈயப்பட்டுநிற்குமெனினும் அமையும் என்றதற்கு, உ-ம்;*

பறவைகள் சிறகுடையன,
மயில்கள் பறவைகள் ; ஆகவே
மயில்கள் சிறகுடையன; இந்த நையாயிதத்திலே "பறவைகள்" எனும்மத்தியபதமானதுபூர்வசாதனத்திலேஈயப்பட்டும்உத்தரசாதனத்திலே ஈயப்படாதும்நின்றும்,தத்துவசூத்திரத்தான்முடிந்தவாறு கண்டுகொள்க.

'சாதனத்தொன்றிலெனுஞ் சரியீந்திடாப்பதம் யாதெனுஞ் சாத்தியத்தீயன்மின்" என்றுரைத்தது என்னையெனின், அங்ஙனமீந்தாற் பூர்வபதக்கள்ளநடையெனினும் உத்தரபதக்கள்ளநடையெனினும் பிறந்து சாத்தியப்போலியாகும்; உதாகரணமாய்—

மயில்களெல்லாம் பட்சி,
குயில் மயிலல்ல; ஆகவே
குயில் பட்சியல்ல. (பூர்வபதக்கள்ளநடை.)†

---

* கலைகள் சம்பந்த சார்புகளைத் தெளியும்,
இந்நூல் ஒருகலை ; ஆகவே
இந்நூல் சம்பந்தசார்புகளைத்தெளியும்.
அண்டசமெல்லாம் முட்டையிற் பிறக்கின்றன,
சிலவிலங்குகள் அண்டசம் ; ஆகவே
சிலவிலங்குகள் முட்டையிற் பிறக்கின்றன.
தாபரங்கள் இயங்குகின்றில,
சிலதோற்றங்கள் தாபரங்கள்; ஆகவே
சிலதோற்றங்கள் இயங்குகின்றில.

†பூர்வபதக்கள்ளநடை என்பது பூர்வபதமானது சாதனங்களிலே ஈயப்படாமலுஞ் சாத்தியத்திலே ஈயப்பட்டும்நடத்தல்; உதாகரணமாய்—

குமரமெல்லாம் விலங்குகள்,
பட்சி குமரமல்ல; ஆகவே
பட்சி விலங்கல்ல.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

வைரரத்தினம் விலைபெற்றது,
சிலரத்தினம் வைரம்; ஆகவே
இரத்தினமெல்லாம் விலைபெற்றது. (உத்தரபத
க்கள்ள நடை) *

இங்ஙனம் உதாகரித்தவாறு, சாதனத்திலே ஈயாத பதத்தைச் சாத்தியத்திலே ஈந்திடின், நையாயிதமொன்றனுள் முப்பதமேற் பதம்வந்து, தத்துவசூத்திரங்களை முரணும் என்றுதெளிக.

கஎ அன்றிவெதிரெகசாதனந்தம்மிலனுமிதமே
இன்றிருசாதனத்தோன்றுவெதிரேகமேலனுமை
ஒன்றிடுமேவெதிரேகமிவ்வாறுவிதிகளினல்
நன்றுநையாயிதம்யாவுமளக்கநலஞ்செயவே.

இ—யுள், ஐந்தாம் ஆறும் விதிகளை உணர்த்துகின்றது.

இ-ள். அன்றிவெதிரேகசாதனந் தம்மிலனுமிதமேயின்று—மேலும், வியதிரேகசாதனங்களினலே(சாத்தியம்)அனுமானமாவதில்லை.

இருசாதனத்தோன்று வேதிரேக மேலனுமையோன்றிடு மேவெதிரேகம்—சாதனமிரண்டுளோன்று வியதிரேகமேயாயிற் சாத்தியமும் வியதிரேகத்தையே சார்ந்துவரும்.

இவ்வாறு விதிகளினல் நன்று நையாயிதம் யாவுமளக்க நலஞ்சேய-மேலேச்சொல்லிய ஆறு விதிகளினலும் நையாயிதமெல்லாவற்றையும் அழகுதரநன்கிதாய் அளந்துகோள்க. எ-று.

---

* உத்தரபதக்கள்ளநடை என்பது உத்தரபதமானது சாதனங்களிலே ஈயப்படாமலுஞ் சாத்தியத்திலே ஈயப்பட்டும்நடத்தல்; உதாகரணமாய்—
மாந்தர் யுத்தியாற்சிறந்தோர்,
சிலசிருட்டிகள் மாந்தர்; ஆகவே
சிருட்டியெல்லாம் யுத்தியாற்சிறந்தன.

"வெதிரேகசாதனந் தம்மிலனுமிதமேயின்று"* என்றுரைத்தது என்னையோவெனின், அச்சாதனங்களிலே சாத்தியபாதமிரண்டும் மத்தியபதத்துடன் உறழ்வதாயெனினும் அன்றேல் ஒன்றுறழ்ந்தொன்று பிறழ்வதாயெனினுங் கூருமல், இரண்டுபாதங்களும்பிறழ்வதாயே கூறிநிற்றலின் என்றறிக; "பெய்யோர்பதத்துடனொன்றுறழ்ந்தொன்று பிறழ்ந்திடுமேல் மெய்யேயிரண்டுதம்மோடும்பிறழும்" என்று வியதிரேகசாத்தியங்களை முடிக்குந்தத்துவசூத்திரங் கூறுகின்றது.

"இருசாதனத்தொன்று வெதிரேகமேலனுமை ஒன்றிடுமே வெதிரேகம்" எனப்புகன்றது என்னையெனின், "ஓர்பதத்துடனொன்றுறழ்ந்தொன்று பிறழ்ந்திடுமேல் மெய்யேயிரண்டு தம்மோடும்பிறழும்" என்பது தத்துவசூத்திரமாதலின், என்றறிக.   [வதில்லை.—

க. விசேடசாதனங்களினுற் சாத்தியம் அனுமானமா

உ. சாதனமிரண்டுளொன்று விசேடமேயாகிற் சாத்தியமும் விசேடமாயேவரும்.—

௩. சாதனங்கள் சாமானியமாய்நிற்பச் சாத்தியமோ விசேடமாயும்வரும்.—என்று மேலையுரைத்த ஆறுவிதிகளினுலுந் தொனிக்கின்றது.

ஈந்திடாமத்தியபதத்தையுங்கள்ளநடையையும்பற்றி நிகழ்த்திய மூன்றும்நான்காம்விதிகள்வழியாய்இப்பொழு

---

*"வெதிரேகசாதனந் தம்மிலனுமிதமேயின்று" என்பதை விளக்குவாம்;—

வவ்வால் அண்டசமல்ல,

விருக்கம் அண்டசமல்ல; (இவற்றுற் சாத்தியம் அனுமானமாகாது.) வவ்வால்அண்டசமல்ல,இப்பறவை வவ்வால், என ஒருசாதனம் அன்னுவயமும் ஒருசாதனம் வியதிரேகமுமாய் வரின், இப்பறவை அண்டசமல்ல என்று சாத்தியம் அனுமானமாம்.

விருக்கம் அண்டசமல்ல,-வேம்பு ஓர் விருக்கம், என ஒருசாதனம் அன்னுவயமும் ஒருசாதனம் வியதிரேகமுமாய்வரின், வேம்பு அண்டசமல்ல என்று சாத்தியம் அனுமானமாம்.

வவ்வால் அண்டசமல்ல,—புறவு அண்டசம், எனச்சாதனங்கள்வரின், புறவு வவ்வாலல்ல என்று சாத்தியம் அனுமானமாம்·

து மேவலயுரைத்த மூன்றுவிதிகளையுந் தெளிந்துணர்க.

க. "விசேடசாதனங்களினற் சாத்தியம் அனுமான மாவதில்லை" என்றதற்கு உதாகரணம்.—

சிலமனுஷர் அதியூகிகள்,
சிலமனுஷர் பேதைகள்; ஆகவே
சிலபேதைகள் அதியூகிகள்.—(போலிநியாயம்*) இந்தப்போலி நையாயிதத்திலே மனுஷர் எனும் ஈந்திடா மத்திய பதம் வந்து நியாயம்புரண்டது காண்க.

சிலமிருகம் உபாயமுள்ளன,
சிலபட்சிகள் உபாயமில்லன; ஆகவே
சிலபட்சிகள் மிருகமல்ல.—(போலிநியாயம்) இந்தப்போலி நையாயிதத்திலே பூர்வபதக்கள்ள நடைவந்து நியாயஞ்சிதைந்ததுகாண்க.

உ. "சாதனமிரண்டுளொன்று விசேடமேயாகிற் சாத்தியமும் விசேடமாயே வரும்" என்றதற்கு உதா-ம்.

கடவுளின் சித்தத்துக்கேற்ப நடப்பவர்கள் மரணத்திற்கஞ்சார்; சிலவித்துவான்கள் கடவுளின் சித்தத்துக்கேற்ப நடப்பவர்கள்; ஆகவே
சிலவித்துவான்கள் மரணத்திற்கஞ்சார்;—என்று சாத்தியம் விசேடமாயே வருமன்றி; "வித்துவான்களெல்லாரும் மரணத்திற்கஞ்சார்" என்று சாமானியமாய் வராது; வரின், உத்தரபதக்கள்ளநடையாம்.

---

*போலிநியாயம் என்பது "கொள்பட்சத்தறுதியுடையதுநம்புணர்ப்புக்கியைவதும்போற் புறந்தோன்றிப்பொருளளவில்இணக்கில் அசித்திநியாயம்." இதன்விரியை ஆபாசத்துட்காண்க. வாதிபிரதிவாதிகள் போலிநியாயங்களைப் பிரயோகிக்குங்கால், பிறரை மயக்கி நியாயத்தோரணி அவர்க்குப் புலப்படாவாறும் போலியுண்டென அவர் ஆசங்கியாவாறும், கள்ளநியாயததைப்பலபேதமாய்ச் சுத்தநியாயம்போற் பகர்தலும் உண்டு; தாம்பகரும் நியாயந் தமக்கே புலப்படாமலும் போலி சுலபமாய்விளங்காமலுங் கள்ளநியாயத்திற் ருமேஇறங்குதலும் உண்டு; பின்னை, "போலியெல்லாஞ் சாலவறிந்துமறியாதுந் தோன்றலின்" போலிகளை விரைவிலேகிருகித்துக்கொள்வது அருமையென்றறிக. போலிகளைத் தெளியும்படி மேவலயுரைத்த ஒன்பது விதிகளையும் ஞாபகத்திலே நன்கமைத்துச் சாதனைசெய்க.

௬. "சாதனங்கள் சாமானியமாய் நிற்பச் சாத்திய மோ விசேடமாயும் வரும்" என்றதற்கு உதா—ம்.

மாந்தரணவரும் யுத்தியெனுங் கரணமுடையர்,
மாந்தரணவருங் கடவுளின் சிருட்டிகள்; ஆகவே
சிலசிருட்டிகள் யுத்தியெனுங்கரணமுடையர்; என்று விசேடசாத்தியமேயன்றி, 'சிருட்டிகளனவரும் யுத்தி யெனுங்கரணமுடையர்" என்று சாமானியசாத்தியம் வரின், உத்தரபதக் கள்ளநடையாம்.

"வகை ஈந்திடா மத்தியபதம் கள்ளநடையிரண்டு
பகையீர் வேதிரேகசாதனம் முப்பதமேற் பதங்கள்
தகைதீர் வேதிரேகசாதனத் தன்வயசாத்ய மற்றும்
அகைவார்சிலேடைமத்யம்பிறசாத்தியஆபாசமே*"

௧௮. செய்யநையாயிதந்தாட்டாந்தமூன்றுசேறிதலி ஞன் [ணேண்
கெய்திடுதாட்டாந்தரமூன்றினிற்றேடை செய்யவேண்
மோய்துறைகூடுமவற்றினுண்மேலவிதிமுரணு
தேய்தும்பதினெருமெய்த்துறைசித்திநையாயிதத்தே.

இ--யுள், நையாயிதத்துறைகளை உணர்த்து கின்றது. (துறைஎன்பது நையாயிதமொன்ற னுள் வருந் தாட்டாந்தங்கள்மூன்றும் சாமா னியவிசேடங்களிலும் அன்னுவயவியதிரேக ங்களிலும் ஒன்றையொன்று தொடர்ந்துநிற்கு ம் ஒழுங்கு.)

இ--ள். செய்யநையாயிதந்தாட்டாந்தமூன் று சேறிதலினுன் கெய்திடுதாட்டாந்தரமூன்றி னிற்றேடை செய்யவேண்ணேண் மோய்து றை கூடும்--செவ்விய நையாயிதமொன்றிலே மூன்று தாட்டாந்தங்களே வருகின்றபடியினு

*இச்செய்யுள் ஆபாசத்துக்கே உரித்தாயினும், போலிபிறக்குமாற்றை இங்ஙனம் எதிர்மறைமுகத்தானொரு வாறுவிளக்கியிருக்கின்றமையின், அதனை இங்ஙனம் எடுத்துமொழிந்தது தகாதன்றல்ல.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

லே, (ஆ. ஈ. ஐ. ஒ. என) நான்காய்வருந்தாட் டாந்தங்களை மும்மூன்றாகத் தொடுத்தால், அறுபத்துநான்குதுறைகள் வரும்.

அவற்றினுண் மேலே விதிமுரணுதேய்தும் பதினொரு மெய்த்துறை சித்திநையாயிதத்து—அந்த அறுபத்துநான்குதுறைகளுள் முன்னருரைத்த விதிகளை விரோதியாமல் மெய்மையானபதினொருதுறைகள்சித்தியினையுடைய நையாயிதத்திற் பிரயோகமாகும்.—என்றவாறு.

துறையாவது இன்னபோலுமெனவிளக்குதும். உ—ம்.

பறவைகள் சிறகுடையன;
மயில்கள் பறவைகள்; ஆகவே
மயில்கள் சிறகுடையன; இந்நையாயிதம் ஆ. ஆ. ஆ. எனுந் †துறையினையுடையது.

விலங்குகள் யுத்தியுடையனவல்ல,
யானைகள் விலங்குகள், ஆகவே
யானைகள் யுத்தியுடையனவல்ல; இந் நையாயிதம் ஈ.ஆ. ஈ. எனுந் துறையினை யுடையது.

இவ்வாறே நையாயிதமேதனையும் அதனுள் வருந் தாட்டாந்தங்களினால் அளந்து துறைஅறிக.

"நான்கெய்திடுதாட்டாந்தர மூன்றினிற்றேடைசெய்யவெண்ணெண் மொய்துறைகூடும்" என்றது எங்ஙனமெனின்,—நான்குவகையான தாட்டாந்தங்களுந் தனி

---

†ஆ. ஆ. ஆ. எனும் உயிர்கள்முன்னருரைத்தவாறேசாமானியான்வயம், சாமானியான்வயம், சாமானியான்வயம் எனமூன்று தாட்டாந்தங்கட்கு அறிகுறியாய்நிற்கின்றன. யாதொரு சித்திநையாயிதத்தின் துறையை விளம்பவேண்டின், அந்நையாயிதத்திற் பயின்று நிற்குந் தாட்டாந்தங்களை முறையே இன்னவென்றறிந்து, அவற்றின் அறிகுறியான உயிர்களால் விளம்புக.

மாந்தர் யுத்தியெனுங் கரணமுடையர்,
மாந்தர் கடவுளின்சிருட்டிகள்; ஆகவே
சிலசிருட்டிகள் யுத்தியெனுங்கரணமுடையர்; இந்நையாயிதம் ஆ. ஆ. ஐ. எனுந்துறையுடைத்து.

த்தனி பூர்வசாதனமாய்நிற்க, இப்பூர்வசாதனங்களொவ்வொன்றற்கும் வியத்தியாசமான நான்கு உத்தரசாதனங்களை ஒட்டி, வருஞ் சாதனம் பதினாறு சோடுகள் ஒவ்வொன்றற்கும் வியத்தியாசமான நான்கு சாத்தியங்களை முடித்து, நாலுதரம் பதினாறு அறுபத்துநான்கு எனத் துறைகண்டுகொள்க.

நான்குபொருளைமும்மூன்றாய்த் *தொடுத்தால், அறுபத்துநான்குசோடுவரும்என்பதனைக்கணிதவிதியாலுங்கண்டுகொள்க,—"சொல்லியபொருளினெண்ணைத் தொடையினெண்ணளவுக்குஉறழ்ந்துகொள்"; இது கணித விதி.

அறுபத்துநான்குதுறைகளுள் ஐம்பத்துமூன்று துறைகள் வியதிரேக சாதனங்களையும் விசேடசாதனங்களையுங் கள்ளநடையையும் பற்றியவிதிகளை †விரோதிப்பதால், அவ்வைம்பத்து மூன்றும்ஒழிந்து நின்றபதினொரு துறைகளையே "மேலவிதி முரணுதெய்தும் பதினொரு மெய்த்துறை சித்திநையாயிதத்து" என்றுரைத்தாம்.

பதினொரு மெய்த்துறைகளாவன,—ஆ ஆ ஆ, ஆ ஆ ஐ, ஆ ஈ ஈ, ஆ ஈ ஒ, ஆ ஐ ஐ, ஆ ஒ ஒ, ஈ ஆ ஈ, ஈ ஆ ஒ, ஈ ஐ ஒ, ஐ ஆ ஐ, ஒ ஆ ஒ; இப்பதினொரு துறைகளுமே மெய்த்துறைகளெனத்துணிதற்கு மத்தியபதநிலையையும் விளங்கவேண்டும்.

---

*இப்படித் தொடுக்குமிடத்து, பொருள்கள்வேண்டியவாறு தம்மோடும் பிறிதோடும் புணரும்; உதாகரணமாய்,—ஆ ஆ ஆ எனவும்வரும், ஆ ஈ ஈ எனவும்வரும்.

† ஈ ஈ ஈ, ஒ ஒ ஒ, வியதிரேகசாதனங்களையுடையதுறைகள்; ஐ ஐ ஐ, விசேடசாதனத்துறை; ஈ ஐ ஈ, கள்ளநடைத்துறை; மேலயுரைத்திருக்கும் நையாயிதவிதிகளொன்பதினாலும் அறுபத்துநான்கு துறைகளையும் அளக்குமிடத்து, அவ்விதிகளை விரோதியாமற் பதினொருதுறைகள் மாத்திரமே வருதலின் அப்பதினொருதுறைகளும் மெய்த்துறையெனும் பெயர்பெற்றன; இப்பதினொன்றனுளுஞ் சிலதுறை நையாயிதங்களிற் பயிலா என்பதை நிலையை உணர்த்துமிடத்துக் கண்டுதெளிக.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

௧௬. இதமத்தியபதமேயிருசாதனத்தெய்துநிலை
நிதநான்குமுன்னர்விதிமுரணாதுமுன்னோர்துறைகள்
விதமாநிலைகளனைத்தினுமேவுதலின்றுஎண்மூன்
றதிமாதுறைகள்முடியுமைந்தோவுபயோகமன்றே.

இ—யுள், மத்தியபதநிலையையும், நிலையால்வருந்துறைகளையும், உணர்த்துகின்றது.

இ--ள். இதமத்தியபதமே யிருசாதனத்தெய்துநிலைநிதநான்கு—(சாத்தியபட்சத்தை அறுதியாய்ச்சாதிப்பதற்கு) இனிய * மத்தியபதம் (அப்பட்சத்தை) சார்ந்த சாதனமிரண்டுளும் எய்திநிற்கும் நிலை நான்குமாத்திரந்தான்.

முன்னர்விதிமுரணாது முன்னோர்துறைகள் விதமா நிலைகளனைத்தினு மேவுதலின்று--மேலைநிறுத்திய பதினொரு மெய்த்துறைகளும் முன்னேயுரைத்த விதிகளை விரோதியாமல் நான்குவிதமான நிலைகளோவ்வோன்றிலேயும் வருதல் ஏலாது.

எண்மூன்றதிமாதுறைகள்முடியு மைந்தோவுபயோகமன்று--இருபத்துநாலு மகத்துவ து

*மத்தியபதமே சாத்தியபட்சத்தை அறுதியாய்ச் சாதிப்பதற்கு இனியதுந் ததுந்ததும். ஒருசாத்தியத்தைஅல்லது பட்சத்தை வைத்து அதனை ரூபிகரிக்கச் சொல்லிக்கேட்பரேல்,–வைத்தபட்சத்திலுள்ள விசேடிய விசேடகங்களை உத்தரபதமும் பூருவ பதமுமாய்க் கொண்டு, பட்சமானது அன்னுவயவியதிரேகசாமானியவிசேடங்களில் யாதெனத் தெளிந்து, மேலையுரைத்த நையாயிதவிதிகளைப் புந்தியினிறுத்திக்கொண்டு, சாதனங்களிலே சாத்தியபாதங்களைத் தனித்தனி புணர்த்தித் தாட்டாந்தமுடித்தற்கேற்ற மத்தியபதம் இதுவேயெனத் தெரிந்து, தத்துவசூத்திரங்களை முரணுமலுஞ் சாத்தியம் வழுவின்றிமுடியுமாறும் சாதனங்களைத்தருவதே சாத்தியத்தை ரூபிகரிப்பதாம்.

றைகள்மாத்திரம்முடியும்; (இவற்றுளும்) ஐந்துதுறைகளோ உபயோகமில்லாதன.-எ--று.

நிலை என்பது சாத்தியபாதங்களுடனே மத்தியபதமானது சாதனங்களினிற்குந்தானமாம்.

முதலாம்நிலை; மத்தியபதமானது பூர்வசாதனத்து விசேடியமாயும் உத்தரசாதனத்துவிசேடகமாயும்நிற்றல்.

இரண்டாம்நிலை; மத்தியபதமானது சாதனங்களிரண்டினதும் விசேடகமாய்நிற்றல்.

மூன்றாம்நிலை; மத்தியபதமானது சாதனங்களிரண்டினதும் விசேடியமாய்நிற்றல்.

நான்காம்நிலை; மத்திய பதமானது பூர்வசாதனத்து விசேடகமாயும் உத்தரசாதனத்து விசேடியமாயும் நிற்றல்; முதனிலைக்கு எதிர்நிலையாம்.

"முன்னோர்துறைகள் விதமாநிலைகளனைத்தினுமேவுதலின்று" என்றதெங்ஙனமெனின்,--ஈந்திடாமத்தியபதம், கள்ளநடை என்பவைகளைப்பற்றியவிதிகளை விரோதிக்குமாதலால்; இவற்றை * விரித்துக்கண்டுகொள்க.

முன்னுரைத்த ஈந்திடாமத்தியபதமுதலியவற்றைச் சார்ந்த விதிகளைவிரோதியாமல் ஒவ்வொரு நிலைக்கும் அவ்வாறு மெய்த்துறைகள்முடியும்; இப்படிமுடியும் அவ்வாறு மெய்த்துறைகளுள், முதலாம்நிலையில் இரண்டும், இரண்டாம் நிலையில் இரண்டும், நான்காம் நிலையில் ஒன்றும் ஆகக்கூடிய ஐந்துதுறைகள், சாமானிய சாத்தியத்தைச் சாதிக்கக்கூடியவிடத்து † விசேடசாத்தியத்தைச்சாதிப்பவாக நிற்றலால், "ஐந்தோ உபயோ

---

* பதினொரு மெய்த்துறைகளுள் முதலாம்நிலைக்கேலாததுறைகள்,— ஆ ஈ ஈ, ஆ ஈ ஒ, ஆ ஒ ஒ, ஐ ஆ ஐ, ஒ ஆ ஒ, இவ்வைந்து துறைகளுள் ஆ ஈ ஈ பூர்வபதக்கள்ளநடையாம்; ஆ ஈ ஒ பூர்வபதக்கள்ளநடையும், சாமானியம் விசேடமானதும்; மற்றவைகளனைத்தும் இவ்வாறே கண்டுகொள்க.

† ஆ ஆ ஐ, ஈ ஆ ஒ இவ்விரண்டுஞ் சாமானியசாத்தியத்தைச் சாதிப்பவர்கநிற்றலின், முதலாம் நிலையிலே உபயோகமில்லன; மற்றை நிலைகளிலும் இவ்வாறேகண்டுகொள்க.

கமென்று" என உரைத்தாம். இவைகளையெல்லாம் விரித்துவிளக்கும் உதாகரணங்களையெடுத்துத் தெரித்தளந்துகோள்க.

உ0. அன்றேயொழிதுறைபன்னொன்பது அவற்றின்றுறையு
நன்றேயதெய்துநிலையுந்தெளியுநலனதனுக் [டுநான்
கென்றேபன்னொன்பதுவாக்கியஞ்சொல்லுது நான்கோ
கோன்றேறுமைந்தொடுஐந்தெனநானிலைகாணுவனயே.

இ—யுள், சித்திரையாயிதங்கள் வந்துபயிலுகின்ற துறைநிலைகள் இத்துணையென்றும், அவை இவையென வாக்கியங்களால் விளங்குமென்றும், உணர்த்துகின்றது.

இ--ள். ஒழிதுறைபன்னொன்பது-ஒழிந்தசித்தித்துறைகள் பத்தோன்பதாம்.

அவற்றின்றுறையு நன்றேயதெய்துநிலையுந் தெளியுநலனதனுக்கேன்றே பன்னொன்பது வாக்கியஞ்சோல்லுதும்-அவைகள் இன்னின்னதுறையென்பதையும், அத்துறையானதுவருகின்றநிலை இன்னதென்பதையும் நன்றாகத்தெளிந்துகோள்ளும் நன்மையின் போருட்டாய்ப் பத்தோன்பது வாக்கியங்கள் சோல்வோம்.

நான்கோடுநான்கோன்றேறுமைந்தோடு ஐந்தெனநானிலைகாணுளையே— (முதலாம்நிலையில்)நாலும் (இரண்டாம்நிலையில்)நாலும் (மூன்றாம்நிலையில்) ஆறும் (நான்காம் நிலையில்) ஐந்தும் என்று நாலு நிலைகளையும் அவ்வாக்கியங்களுட்கண்டுகோள்க.-என்றவாறு.

அன்றே என்பது அந்தாதித்தொடைநோக்கிவந்த அசைமொழி

நாலுநிலைகளிலுங் கூடியதுறைகள் பத்தோன்பதென்றும், எந்தநையாயிதமும் அத்துறைகளுள் ஒன்றிலே

அல்லது அவற்றிற்குவழுவியோ நிற்கின்றனவென்பதை அளந்துதெளிந்துகொள்க. *

உஉ காமானிள் சாமீனீல் தைமாரில் பீலாளோ பீலலோ இவ்வைந்தும்பெசின்முத லாநிலயி ஞற்றுறைநையாயிதம்பானன்றேமுடிந்திடுமாற் போற்றுகமுன்மழங்நிலயேபோய்.

இவ்--யுள், நான்காம்நிலைக்குரிய ஐந்துவாக்கியங்களையும், வாக்கியத்துறைகள் பத்தோன்பதனது உபயோக பிரயோகங்களையும், உணர்த்துகின்றது.

இ-ள். காமானிள் சாமீனீல் தைமாரில் பீலாளோ பீலலோ இவ்வைந்தும்பேசின் முதலாநிலையிஞற்றுறை நையாயிதம்பானன்றே முடிந்திடும்---காமானிள் சாமீனீல் தைமாரில் பீலாளோ பீலலோ எனும் இவ்வைந்து துறைகளும், (நியாயங்களைஆய்ந்தளந்து) சொல்லவேண்டின், முதலாம்நிலைக்குரிய நான்குது

---

* எந்தநையாயிதமேனும் மகாதத்துவசூத்திரத்தை அல்லது தத்துவசூத்திரங்களிரண்டின அல்லது விதிகள் ஆறை அல்லது நானிலக்குமுரிய மெய்த்துறை பதிஞென்றை முரணுமெனின், அந்நையாயிதத்தின் சித்திகுன்றிப் போலிதவலப்படும்; ஆகலான் நையாயிதங்களைத்துறையானு நிலையானுங்கண்டு, விதியானுந் தத்துவசூத்திரத்தானும் அளந்து, மெய்மை பொய்மையறிக. நியாயித்தலும் நியாயஇலக்கணமும் ஒன்றற்கொன்றுவிகற்பமானவை; நியாயித்தலானது யுத்தியெனும் மனோகரணத்தைச் சொல்லால்வாதித்தலாம்; நியாய இலக்கணமானது முன்னருரைத்தவாறே "யுத்தியதன் கலைவித்தை" ஆம். ஆகலான் நன்குநியாயித்தற்கு இலக்கணஅறிவும் சாதனையும்வேண்டியது, ஒன்றுற்பெரும்பயனின்றும.

றைகளிலும்வந்து பயில்கின்ற நையாயிதங்களிலேயே தெளிவாயும் இயல்பாயும்முடியும்.

போற்றுகமுன் முந்நிலையேபோய்—(ஆகையால் நாலாம்நிலையைவிட்டு) போய் முதன்மூன்றுநிலைகளையுமே விரும்பிப்பேணுக. எ--று.

ஆல் என்பது உடம்பாட்டிடைச்சொல்.*

மத்தியபதமானது முதலாம்நிலைத்துறையிலே பூர்வசாதனத்தின்விசேடியமும் உத்தரசாதனத்தின் விசேடகமுமாய்வர நாலாம்நிலைத்துறையிலேயோ இதற்குமாறாய்ப் பூர்வசாதனத்தின்விசேடகமும் உத்தரசாதனத்தின்விசேடியமுமாய்வருதலால், நாலாம்நிலைத்துறைகளில் உரைக்குநையாயிதங்களை முதலாம்நிலைத்துறைகளில்மொழிவதே தெளிவும் இயல்புமென்றுகாண்க.

யானைகள் விலங்குகள்,
விலங்குகள் யுத்தியுடையனவல்ல; ஆகவே
யுத்தியுடையன யானைகளல்ல, என்னுநையாயிதமானது நான்காம்நிலையிலே ' சாமீனீல்'' எனும்வாக்கியத்துறையால்முடிந்து, மத்தியபதமான 'விலங்குகள்' என்பது பூர்வசாதனத்தின்விசேடகமும் உத்தரசாதனத்தின் விசேடியமுமாய்நிற்றலால், சாதனங்களைநிலைமாற்றிச் சாத்தியத்தைத்தனியிடமாற்றி,--

விலங்குகள் யுத்தியுடையனவல்ல,
யானைகள் விலங்குகள்; ஆகவே

---

* ஆல் எனும் இடைச்சொல் அசைஇடையாய்ப்பலவிடத்துவரினுஞ் சிலவிடத்து உடம்பாட்டுப்பொருளையுஞ் சிலவிடத்து எதிர்மறைப்பொருளையுங் கருதும்மொழியாயும்வரும்; வருவாரால், மொழிவரால், இன்சொலால் ஈரமளைஇப்படிறிலவாஞ் செம்பொருள்கண்டார் வாய்ச்சொல்- இவ்வுதாரணங்களிலே ஆல் உடம்பாட்டிடை; மறால், தழால், அழால், இவ்வுதாரணங்களிலே ஆல் எதிர்மறையிடை. ஆல் என்னும் இடைப்பதம் ஆம் என்றும் அல்லவென்றும்வரும்; மேலும் ஆல் என்பது அசையிடையாய் உடம்பாட்டெதிர்மறைக்களத்துச்சொற்களோடு புணர்ந்து வருமெனினும் வழவன்றாம்.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

## ௩. தாரையை.

சற்குணனெவனுஞ் சாந்தத்தை விரும்புகின்றன
சிலமந்திரிகள் சற்குணர்; ஆகவே [ன்.
சிலமந்திரிகள் சாந்தத்தைவிரும்புகின்றனர்.

## ௪. பீரையோ.

நல்லோர் பிறர்குற்றம் நாடுவோரல்ல;
சிலவித்துவான்கள் நல்லோர்; ஆகவே
சிலவித்துவான்கள் பிறர்குற்றம் நாடுவோரல்ல.

## இரண்டாம் நிலை.

## க. சீலாரீ. *

யுத்தியுடையன விலங்குகளல்ல;
யாவனகள் விலங்குகள்; ஆகவே
யாவனகள் யுத்தியுடையனவல்ல.

## உ. சாமீலில்.

யாவனகள் விலங்குகள்;
யுத்தியுடையன விலங்குகளல்ல: ஆகவே
யுத்தியுடையன யாவனகளல்ல.

---

* சீலாரீ எனுந்துறையின் முதல்வல்லொற்றுச் சகரமாதலின், சித்தாந்தஞ்செய்யவேண்டியவிடத்துச் சீராடீ எனுந்துறைக்குக்கொணர்க; லகரவொற்றுத்தனியிடமாற்றுக்குறியாதலின் அதன்முன்னிற்கும் ஈ எனும் உயிராற்குறிக்கப்படுஞ் சாமானியவியதிரேகதாட்டாந்தத்தைத் தனியிடமாற்றுக; அங்ஙனந்தனியிடமாற்றின், எப்படிநிற்கும் அந்நையாயிதமெனின்,—
விலங்குகள் யுத்தியுடையனவல்ல,
யாவனகள் விலங்குகள்; ஆகவே
யாவனகள் யுத்தியுடையனவல்ல, (சீராடீ.)
"பெய்யோர்பதத்துடனொன்றுறழ்ந்தொன்றுபிறழ்ந்திடுமேல் மெய்யேயிரண்டுதம்மோடும்பிறழும்" என்றவியதிரேகசாத்தியதத்துவ சூத்திரத்தான்முடிந்தது.

## ௩. பீலயோ.

பிறர்குற்றம்நாடுவோர் நல்லோரல்ல;
சிலவித்துவான்கள் நல்லோர்; ஆகவே
சிலவித்துவான்கள் பிறர்குற்றம்நாடுவோரல்ல.

## ௪. பாளேரோ.

பிறர்குற்றம்நாடுவோர் தீமையைவிரும்புவோர்;
சிலவித்துவான்கள் தீமையைவிரும்பார்; ஆகவே
சிலவித்துவான்கள் பிறர்குற்றம் நாடுவோரல்லர்.

## மூன்றும் நிலை.

## க. தாராளீ.*

அன்னங்கள் பட்சிகள்;
அன்னங்கள் தோலடியுடையன; ஆகவே
சிலதோலடியுடையன பட்சிகள்.

## உ. தைலாமில்.

சிலசற்குணர் மந்திரிகள்;
சற்குணர் சாந்தத்தைவிரும்புகின்றனர். ஆகவே
சாந்தத்தைவிரும்புகின்றனர்சிலர் மந்திரிகள்.

---

* தாராவள எனுந்துறையின் முதல்வல்லோற்றுத்த கரமாதலின், சித்தாந்தஞ் செய்யவேண்டியவிடத்துத் தாரையை எனுந்துறைக்குக்கொணர்க; ளகரவொற்று வரைவிடமாற்றுக்குறியாதலின், அதன் முன்னிற்கும் ஆ எனும் உயிராற் குறிக்கப்படுஞ் சாமானியான்வயதாட்டாந்தத்தை வரைவிடமாற்றுக; அங்ஙனம் வரைவிடமாற்றின் அந்நையாயிதம் எப்படிநிற்குமெனின்,
அன்னங்கள் பட்சிகள்,
சில தோலடியின அன்னங்கள்; ஆகவே
சிலதோலடியின பட்சிகள். (தாரையை.)
"சில தோலடியின" எனினும் "தோலடியினசில" எனினும் ஒக்கும்.

இ—யுள். நான்குநிலைகளிலுமுள்ள பத்தொன்பது துறைகளையுஞ்சிறப்பித்து உணர்த்துகின்றது.

இ-ள். கொள்ளமுன்முந்நிலைப் பன்னான்குநற்றுறையாய்—முதன்மூன்று நிலைகளிலும் வருகின்ற பதினான்கு துறைகளையும் நற்றுறைகளென்று அறிந்துகொள்க.

இவற்றுள் உள்ளமுதலாநிலையினினாற்றுறையுத்தமமாய்—இப்பதினான்கு துறைகளுள்ளும் முதலாம்நிலையில்வரும் நான்குதுறைகளையும் உத்தமதுறைகளென்றுதெளிக.

தெள்ளிதந்நான்கினிற்றத்துவசூத்திரஞ் சேரும்--அந்த உத்தமதுறைகணான்கிலுமே தத்துவசூத்திரமானது தெள்ளிதாகப்பொருந்தும்.*

எந்த வள்ளைநியாயமும் வாமிவையொன்றிலெவ்வாறெனுமே-வளஞ்சிறந்த எந்தெந்த நியாயமும் ("பின்னர் முந்நிலைப்பன்னைந்துறை

---

* "உள்ளமுதலாநிலயினினாற்றுறை யுத்தமமாய்த் தெள்ளிதந்நான்கினிற்றத்துவசூத்திரஞ்சேரும்" என்றதென்னையெனின், "ஈபொதுப்பதமேலுடம்பட்டெனெதிர்மறுத்தெனனியேவிசேடகித்திட்டதியாது மவ்வாறதனிலினிதேயமையெதன்மேலும் விசேடகித்தேற்றலுண்டு" எனுந்தத்துவசூத்திரத்திலே—"ஈ பொதுப்பதம்" எனக்கருதியது மத்தியபதத்தையே,--பின்வன, மத்தியபதம்மேல்உடம்பட்டெனெதிர்மறுத்தென்விசேடகிக்கின், அத்தாட்டாந்தம் பூர்வசாதனமும், மத்தியபதம் அதன்விசெடியமும் ஆய்நிற்கும்; "அதனுளினிதேயமையெது" என்றதனல், இத்தாட்டாந்தம் உத்தரசாதனமும், மத்தியபதம் அதன்விசேடகமுமாய் நிற்கும்; ஆகவே முதலாம்நிலக்கே தத்துவசூத்திரந்தெள்ளிதாய்ப்பொருந்தும்.

ணை’’ மருவினும்) இந்தஉத்தமதுறைகணுன்கிஞென்றனுள்ளே எப்படியுந் தாவியேமுடியும். எ—று.

வெண்மை தொன்மை இன்மை நன்மை எனுங்குணப்பதங்கள் வெள்ள தொல்ல இல்ல நல்ல எனத்தனித்தும் புணர்ந்தும் பெயருமாறுபோல் வண்மை எனுங்குணப்பதம் வள்ளயெனப்பெயர்ந்தது; எதுகைநாடித்திரிந்ததெனினும் அமையும்; வள்ளுவர் வள்ளியோர் வள்ளல் வள்ளுரை வள்ளமொழிஎனும் இலக்கியங்களானுங்காண்க.

‘‘முதலாநிலையினிறுற்றுறையுத்தமம்’’என்றும், ‘‘தெள்ளிதந்நான்கினிற்றத்துவசூத்திரஞ் சேரும்’’ என்றும், ‘‘எந்த வள்ளநியாயமும் வாமிவையொன்றிலெவ்வாறெனுமே’’ என்றும், இச்செய்யுளிலே தாற்பரித்த கட்டுரையை மேலயிருபத்துமூன்ருஞ்செய்யுளின் கீழ்த்தந்த ‘‘காராடா’’ முதலியநான்கு உதாகரணங்களிற்கண்டும், நியாயங்களிற்பயின்றுபழகியும், நன்குதேறுக.

நியாயங்கள் பெரும்பாலும் முதலாம்நிலயிலேயே இயல்பாய் (சுபாவமாய்) வரும்; ஆயினும், பிறர்நாட்டியுந்தழுவியும்வரும் மதங்களையேனுந் துணிபுகளையேனும் மறுத்து நிராகரிக்கவேண்டுமேல் நியாயம் இரண்டாம் நிலயிலேயே பெரும்பாலும்வரும்; உதாகரணமாய்,-

யாவனகள் யுத்தியுடையன என்று சிலர்துணிந்து நாட்டுமிடத்து, அத்துணிபுக்கு உடம்படாதுமறுத்து, யாவனகள் யுத்தியுடையனவல்ல என்று நிராகரிக்கவேண்டுமேல், ஏற்ற ஒருமூன்ரும்பதமாகிய ‘‘விலங்குகள்’’ எனும் மத்தியபதத்தையெடுத்து, மத்தியபதமானது இரண்டாம்நிலயிலேயோ சாதனமிரண்டினதும் விசேடகமாய்நிற்குமாதலான், ‘‘விலங்குகள்’’ எனும்பதத்தைவிசேடகமாக்கி,—

யுத்தியுடையனவிலங்குகளல்ல,
யாவனகள் விலங்குகள்; ஆதலால்
யாவனகள் யுத்தியுடையனவல்ல.– * என்றுநியாயத்தை இரண்டாம்நிலயிலே முடித்துக்காட்டுக.

---

* இந்நையாயிதம் இரண்டாம்நிலயிற் ‘‘சீலாரீ’’ எனுந்துறையான்முடிந்துநிற்கின்றது; இதனைமுதலாம்நி

மத்தியபதமானது சிறப்புப்பதமாயேனும், பிரதிவாதியின் சாதனங்களை வாதி ஆட்சேபிக்கவேண்டியதாயேனும், வருங்கால், நியாயம் மூன்ரும்நிலையிலேயே பெரும்பாலும்வரும்; உதாகரணமாய்—

பவணந்தி சமணன்;
பவணந்தி இலக்கணி, ஆகவே
சிலஇலக்கணி சமணன். (சிறப்புப்பதங்கள் தமக்கேயன்றிப் பிறபொருட்கு உடம்பாட்டிலே விசேடகமாகவரா; ஆதலாற்ருன், மத்தியபதஞ் சிறப்புப்பதமெனின், நியாயம் மூன்ரும்நிலையிலேயே பெரும்பாலும் பயிலும் என்றுரைத்தாம்.)

(பொறிகளிற்புலப்படக்) காணுதவெல்லாம் உள்ளனவல்ல;
கடவுள் ஒருவருங்காணுதது; ஆதலால்
கடவுள் உள்ளதல்ல—என்று ஒருவன்சாதிக்குமிடத்து, "காணுதவெல்லாம் உள்ளனவல்ல," என்று அவன்நிறுத்திய பூர்வசாதனத்தை ஆட்சேபிக்கும்படி,
உடம்பினுள் உயிர் ஒருவருங்காணுதது,
உடம்பினுள் உயிரோ உள்ளது; ஆகவே
உள்ளவற்றிற்சில ஒருவருங்காணுதன—என நியாயம் மூன்ரும்நிலையில்வரும். ("காணுதனசில உள்ளன")* என்று ஆட்சேபநியாயத்தில்வாதிகாட்டி, 'காணுதவெல்லாம் உள்ளனவல்ல" என்று நீர் உரைத்தது ஏலாது எனப் பிரதிவாதிக்குணர்த்தினமைகாண்க.)

---

லயிற் "சீராடீ" எனுந்துறைக்குக்கோணர்ந்து த்த்து வசுத்திரத்தாற் சித்தாந்தஞ்செய்யின், பூர்வசாதனத்தைத்தனியிடமாற்றுக;—
விலங்குகள் யுத்தியுடையனவல்ல,
யாணைகள்விலங்குகள்; ஆகவே
யாணைகள் யுத்தியுடையனவல்ல. (சீராடீ)

* காரியத்தைக்கண்டு அக்காரியத்தைச்சேட்டிப்பிக்கத்தகுங்காரணத்தை அனுமிப்பது யுத்தியெனுங்காரணத்தின்குணமாம். "ஒருவனேடொருத்தி யொன்றென்றுரைத்திடுமுலகமெல்லாம் வருமுறைவந்துநின்றும் போவதுமாதலாலே தருபவனெருவன்வேண்டுந் தான் முதலீறுமாகும்" என்றும், "இலங்கியதோற்றநிற்றலீறிவையிசைதலாலே நலங்கிளர்தோற்றநாசந் தனக்கி

இந்நூல் "நியாயநடையினுக்காதாரமாயுலவும் இலக்கணமேதெளியும் நியாய இலக்கணநூல்" ஆதலின், தர்க்கநியாயங்களை உதாகரணத்திற்குவேண்டியளவின்றியுரைக்கின் மற்றொன்றுவிரித்தலாய் *முடியும்போலே.

உரு. எனும்பின்னர் முந்நிலைப்பன்னைந்துறையை
யியைந்தமுத
லினிஞற்றுறையினிற்சித்தாந்தஞ்செய்யவிருவகையே
இனிதிற்கோணருதனேர்முகமோடுமறைமுகமாம்
உனுமுதல்சாத்தியமெய்யென்றொழிந்தபொய்யன்றுஎன்
றே.

இ—யுள், பின்மூன்றுநிலைகளிலும் வரும் நையாயிதங்களை நேர்முகமாயும் மறைமுகமாயும் முதனிலைக்குக்கோணரும் வகையை உணர்த்துகின்றது.

இ--ள். எனும்பின்னர் முந்நிலைப்பன்னைந்துறையையியைந்த முதலினிஞற்றுறையினிற் சித்தாந்தஞ்செய்யவிருவகையே இனிதிற்கோணருதல்-(நியாயங்கள்வந்துபயிலும்)என்

---

லாநாதன்வேண்டும்" என்றும் உரைத்தவிடத்து, உலகமாகிய காரியத்தைக்கொண்டே கடவுளாகியகாரணத்தை அனுமித்திருக்கின்றது.

உள்ளதாவதுகண்டதென்றுரை கோண்டதென்னுலகத்துநீ—பிள்ளையாவளர்கின்றநாளுனைப் பெற்றதாயொடுதந்தையைக்—கள்ளமேபுரி காலனுருயிருண்ணவின்றொருகாவலையா---மெள்ளவேயுளரென்றுகொண்டுவிரும்புமாறுவிளம்பிடே.

* மற்றொன்றுவிரித்தல் என்பது எடுத்தபொருளைவிளக்காது பிரிதொருபொருளைவிளக்கல்; உதாகரணமாய், சத்தசாத்திரம் இன்னதெனவிளக்கப்புகுந்து சான்றோரிலக்கியங்களைவிரித்தல்; நியாயநடத்தற்காதாரமாயிருக்கும் இலக்கணத்தைவிளக்கப்புகுந்து, தர்க்கநியாயங்களைப்பேசுதல்; யாற்றைவர்ணனை செயப்புகுந்து மேகத்தையேவர்ணித்தல்.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

றுசோல்லிய பின்மூன்றுநிலைகளிலுமுள்ள பதினைந்து துறைகளையும் அவ்வத்துறைகட்கு இயைந்திருக்கின்ற முதனிலையினுன்குதுறைகளிலேயும் (தத்துவசூத்திரத்தால்) சித்தாந்தஞ்சேய்யும்படி கோண்டுவருதல் இரண்டுவகையாம்.

நேர்முகமோடு மறைமுகமாம்-(அவ்வகைகள்) நேர்முகமும் மறைமுகமும் ஆம்.*

உனுமுதல் சாத்தியமெய்யென்று-கருதியமுதல்வகையாகிய நேர்முகமானதுசாத்தியம்மெய்மையென்று (சித்தாந்தஞ்செய்துகாட்டும்.)

ஒழிந்தபோய்யன்று என்று-(இரண்டாம்வகையாகிய மறைமுகம் எனும்) மற்றது (சாத்தியம்) போய்மையல்லவேன்று (சித்தாந்தஞ்செய்துகாட்டும்.) என்றவாறு.

இனிதில் என்பது நன்கிதாய் எனும்பொருடரும்அடை.

"பின்னர்மூந்நிலைப்பன்னைந்துறையை யியைந்தமுதலினிறுற்றுறையில்" கோணருங்கால், சாதனசாத்தியங்களை ஒன்பதாஞ்செய்யுளின்கீழ்† உரைத்தவண்ணம் வேண்டியவிடத்து இடமாற்றியும் பூர்வசாதனத்தை உத்தரசாதனமாயும் உத்தரசாதனத்தைப் பூர்வசாதனமாயும்மாற்றியும்மாத்திரங்கோள்ளலாம்.

வாக்கியங்களில் முதலெழுத்தாய்நிற்குங் கசதப என்னும் ஒற்றுக்களினலே, காராடா, சீராடீ, தாரையை,

---

* நேர்முகசித்தாந்தம்ஆவது இன்ன ஏது திட்டாந்தங்களால் இன்னபட்சம் இப்படியாகுமென்று நேராய் ரூபிகரித்தல; மறைமுகசித்தாந்தம்ஆவது இன்னபட்சம்இப்படியன்றேல் இன்னவிபரீதம் விளையுமென்றுரூபிகரித்தல்.

† இடுமோர்விசேடியமேன்றவிசேடகத்தாலொருநான்
கடைவானதாட்டாந்தரமேவு மன்னவற்றேதெனிரண்
டுடலான்விரோதமொருநான்குறுமுயர்தாட்டாந்தமே
விடுமீர்பதநிலைமாறிடின்முன்றிடமாற்றெய்துமே. கூம்
(செய்யுள்.

பீரையோ என்னும் உத்தமதுறைகளுள் எத்துறைக்கு மற்றைத்துறைகவளக் கொணரவேண்டியதென்று அறியலாம்.

லகரவோற்றுனது தனக்குமுன்னிற்கும் உயிராற்குறிக்கப்படுகின்ற தாட்டாந்தத்தைத் தனியிடமாற்றவேண்டியதென்றும், ளகரவொற்றுனது வரைவிடமாற்றவேண்டியதென்றும், மகரவொற்றுனது சாதனங்கவளமாற்றவேண்டியதென்றும் விளக்கும்.

நேர்முகமாய்க்கொணர்தற்கு உதாகரணங்கள்.

சீலாரீ.

"யுத்தியுடையன விலங்குகளல்ல,
யாவனகள் விலங்குகள்; ஆகவே
யாவனகள் யுத்தியுடையனவல்ல"—என்னுநையாயிதத்தைச் சீராடீ எனும் முதனிவலத்துறைக்குக்கொணர்ந்து தத்துவசூத்திரத்தால் நேர்முகமாய்ச் சித்தாந்தஞ்செய்யும்படி, பூர்வசாதனத்தை-விலங்குகள் யுத்தியுடையனவல்ல என்று தனியிடமாற்றின்;–

விலங்குகள் யுத்தியுடையனவல்ல,
யாவனகள் விலங்குகள்; ஆகவே
யாவனகள் யுத்தியுடையனவல்ல என்றுமுடியும்.

காமானிள்.

"அன்னங்கள் பறவைகள்,
பறவைகள் காலுடையன; ஆகவே
காலுடையனசிலஅன்னங்கள்"—என்னு நையாயிதத்தைக் காராடா என்னும் முதனிவலத்துறைக்குக் கொணர்ந்து, தத்துவசூத்திரத்தால் நேர்முகமாய்ச் சித்தாந்தஞ்செய்யும்படி. சாதனங்கவளமாற்றி விசேடான்வயசாத்தியத்தை ஒன்பதாஞ்செய்யுளின்கீழ் உரைத்தவண்ணஞ் சாமானியான்வயமாக்கின,–

பறவைகள் காலுடையன,
அன்னங்கள் பறவைகள்; ஆகவே
அன்னங்கள் காலுடையன என்றுமுடியும்.

இவ்விதமே, "பின்னர்முங்கிவலப்பன்வணந்துறையையியையந்தமுதலினிறுற்றுறையினில்," நேர்முகமாய்ச் சித்தாந்தஞ்செய்துகொள்க.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472 Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

மறைமுகமாய்க்கோணர்தற்கு *உதாகரணம்.

பாரளோரோ.

"பிறர்குற்றம்நாடுவோர் தீமையைவிரும்புவோர்,
சிலவித்துவான்கள் தீமையை விரும்பார்; ஆகவே
சிலவித்துவான்கள் பிறர்குற்றம் நாடுவோரல்லர்,-என்னுநையாயிதத்தின் சாத்தியம் மெய்மையன்றெனின், அச்சாத்தியதாட்டாந்தத்தின் விரோதமாகிய "வித்துவான்களெல்லாரும் பிறர்குற்றம்நாடுவோர்" என்னுந்தாட்டார்ந்தம் மெய்மையென்று முடியும்; அங்ஙனமேல், "வித்துவான்களெல்லாருந் தீமையைவிரும்புவோர்" என அச்சாதனங்களொன்றிலே முடிந்துநிற்கவேண்டியது; ஆனல் அப்படியின்றி, "சிலவித்துவான்கள் தீமையைவிரும்பார்" என்றுசாதனம் நிற்றலால், அச்சாதனத்தின் விரோத தாட்டாந்தத்தினல் முடியுஞ்சாமானியான்வயசாத்தியமும் மெய்மையன்றும்; ஆகவே முன்னர்நின்ற விசேடவியதிரேகசாத்தியம் பொய்மையன்றும்; பொய்மையன்றெனவே அது மெய்மையேயாம்.

மேலவுரைத்த நையாயிதத்தை நேர்முகமாய்க்கோணர்ந்து சித்தாந்தஞ்செய்யவேண்டின், ஒன்பதாஞ்செய்யுளின்கீழ் உரைத்தவண்ணம் பூர்வசாதனத்தை மறையிடமாற்றி உத்தரசாதனத்தை விசேடான்வயமாய்க்கருதி,—

தீமையைவிரும்பாதோர் பிறர்குற்றம்நாடுவோரல்லர்,
சிலவித்துவான்கள்தீமையைவிரும்பாதோர்; ஆகவே
சிலவித்துவான்கள் பிறர்குற்றம்நாடுவோரல்லர் என்று பீரையோ எனுந்துறையில் முடித்துக்கொள்க.

---

* மறைமுகசித்தாந்தமானது சிலவிடங்களிலேயோ அதிகபொருணயமும் நியாயவலியுமாய்த் தோனிக்கும்; இன்னது இப்படியல்லவென்றுமறுக்கின், இது விபரீதமெனக்காட்டுவது. அனுபவானுமானமானது நேர்முக சித்தாந்தத்தையே மிகுதிபற்றி அவாவிவரும். கணிதானுமானத்திலேயோ மறைமுகசித்தாந்தம் அதிக தொனிப்பினதாய் நிற்கும்; ஆயினும், ஏற்றபொருடருணங்காலமிடங்கட்கியைய நேர்முகமும் மறைமுகமும் வந்து பயிலும்.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

இப்படியே பின்னர்முந்நிலைப்பன்னணந்துறையையி யைந்தமுதலினிறுற்றுறையினிற்கோணர்ந்துசித்தாந்தஞ்செய்யுமிடத்து, சாத்தியத்தை அருத்தாபத்தியான் இடம்மாற்றவேண்டியும்வரும்.

உசூ. என்றிதுகாறுமுரைத்தனஞ்சுத்தசுயம்பிதமா
நன்றுநையாயிததாட்டாந்தரங்கணவில்வமினித்
துன்றியதன்மையதாட்டாந்தரஞ்சோல்விசேடகமித்
தன்றிவிசேடியஞ்சாருமேனுந்தன்மைத்தாட்டாந்தமே.

இ--யுள், தன்மைச்சுயம்பித தாட்டாந்தத்தை * உணர்த்துகின்றது.

இ--ள். என்றிதுகாறுமுரைத்தனஞ்சுத்தசுயம்பிதமா நன்றுநையாயிததாட்டாந்தரங்கள் -நன்கிதான சுத்தசுயம்பிததாட்டாந்தமும் நையாயிதமும் (இன்னின்ன இலக்கணங்களையுடையன) என்று இவ்வளவும் உரைத்தோம். நவில்வமினித்துன்றியதன்மையதாட்டாந்தரம்-இப்போழுது,(சுயம்பிதத்தை)சார்ந்துவருந் தன்மைத்தாட்டாந்தத்தைச் சோல்லுவாம். சோல்விசேடகமித்தன்றி விசேடியஞ்சாருமேனுந் தன்மைத்தாட்டாந்தம்-தன்மைத்தாட்டாந்தம் என்பது விசேடியமானது சோல்லும் விசேடகத்துடன் இன்னதன்மையாகச்

---

* தன்மைச் சுயம்பித தாட்டாந்தத்தைத் தன்மைத்தாட்டாந்தமேன்று உரைத்துக்கோள்க. முன்னர்மோழிந்தவாறே தாட்டாந்தமேதுவும் சுயம்பிதம் சம்பாவிதம் எனும் இருபகுப்பாயும், அவற்றுளோன்றாயசுயம்பிதமானது சுத்தசுயம்பிதம், தன்மைச்சுயம்பிதம் என்றிருபகுப்புகளாயும், ஒழிந்தசம்பாவிதமானதுசங்கேதம் வியோகம் என்றிருபகுப்புகளாயும், வருமேன்றறிக. மழைபெய்தது,-சுத்தசுயம்பிததாட்டாந்தம்; மழைநன்றாய்ப்பெய்தது,-தன்மைத்தாட்டாந்தம்; மழைபெய்யுமேல்நாடுசெழிக்கும்,-சங்கேததாட்டாந்தம்; இப்பருவம்மாரிகாலம் அல்லதுகோடைகாலம்,-வியோகதாட்டாந்தம்.

சாரும் என்று குறிக்கும்.—என்றவாறு.

நன்மையெனுஞ்சொல் நன்றி நன்று எனவுந் தோன்மை தோன்று எனவும் வருமாறுபோல, தன்மை தன்றியெனத்திரிந்துவந்தது; தன்றியென்பதைத் தண்டியெனத்திரித்து வழங்கலுமுண்டு.

தன்மைத்தாட்டாந்தத்தைப்பற்றி ஏழாஞ்செய்யுளின்கீழ்க்காண்க.*

தன்மைத்தாட்டாந்தத்திற்கு உதாகரணம்,—
அரசன் சடுதியாய் இறந்தான்.
தூதன் விரைவில்வந்தான்.
மழை பெய்யும்போலே. - இவ்வுதாகரணங்களிலே, சடுதியாய், விரைவாய், போலே, எனுஞ்சொற்கள் விசேடிய விசேடகங்கள்சாருந் தன்மையைவிளக்கிநிற்றலால் இத்தாட்டாந்தங்கள் தன்மைத்தாட்டாந்தங்களாயின.†

அரசன் இறந்தான்; தூதன்வந்தான்; மழைபெய்யும், என்பனசுத்தசுயம்பிததாட்டாந்தங்கள். சுத்தசுயம்பிததாட்டாந்தத்திற்குந், தன்மைச்சுயம்பிததாட்டாந்தத்திற்கும்உள்ளவிகற்பத்தையும் இங்ஙனங்கண்டுகொள்க.

உஎ. மேவியதன்மைமொழிகளைப்பாதமிரண்டினு
ன்றிற்
ருவிமுடிப்பினத்தன்மையதாட்டாந்தரஞ்சுத்தமாம்
தாவுமிசைத்திரிபாற்றன்மைத்தாட்டாந்தரமுதல
வாவும்பலதனித்தாட்டாந்தரத்துவகைமுடிபே.

இ—யுள், தன்மைத்தாட்டாந்தத்தை மே

---

* மேதகுதாட்டாந்தரமேசுயம்பிதஞ்சம்பவிதம்
ஓதுஞ்சுயம்பிதஞ் சுத்தமுந்தன்மையுமென்றிரண்டாம்
மீதன்னுவயம்வெதிரேகமேவுமெத்தாட்டாந்தமும்
வீதஞ்செய் சாமானியமேவிசேடம் விரித்தறியே. ஏழாஞ்செய்யுள்.

† கடல் ஒல்லெலன இரைந்தது; புட்பங்கம்மென்று மணத்தது;-உலகந்தானுய்த் திருட்டியாகாது; "சார்பினிற்றேன்றுமெல்லாந் தருபவனில்லை; உலகமெங்கும்பொள்ளெனப்பரந்தது; ஆயுள்கொன்னேகழிந்தது;" இன்னபிறவுந்தன்மைத்தாட்டாந்தங்களாம்.

லும்விரித்தும், இசைத்திரிபு இன்னதென்று விரித்தும், உணர்த்துகின்றது.

இ-ள். மேவியதன்மைமொழிகளைப்பாதமிரண்டினொன்றிற் றாவிமுடிப்பினத்தன்மையதாட்டாந்தரஞ்சுத்தமாம்- (தன்மைத்தாட்டாந்தத்திலே) வருகின்றதன்மைவிளக்குஞ் சொற்களை(அத்தாட்டாந்தத்தின்) இரண்டுபாதங்களுள் ஒன்றினுடனேசார்த்திமுடித்தால் அத்தன்மைத்தாட்டாந்தமானது சுத்தசுயம்பிதமாகும்.

தாவுமிசைத்திரிபாற்றன்மைத்தாட்டாந்தரமுதல வாவும் பலதனித் தாட்டாந்தரத்துவகைமுடிபு-(தாட்டாந்தத்திற் பயிலுஞ்சொற்கள்மேற்) பாய்கின்ற * ஓசைவிகற்பத்தினாலே தன்மைத்தாட்டாந்தமுதலியவை யெல்லாம் பலதனித்தாட்டாந்தங்களின் வகையையும் முடிபையும் அவாவும். எ—று.

---

* ஓசைவிகற்பம் என்றது ஒலிவேறுபாட்டை; இது பல்லசைமொழியின் ஓரசையிலேயும், சொற்றொடை வசனத்தொருமொழியிலேயும் சொற்றொடைவசனத்தின் எடுத்தல் படுத்தலோசையெனும் ஆரோகண அவரோகண ஒலியிலேயும், பெரும்பான்மைபற்றிவரும்; மேலையுரைத்த இசைத்திரிபென்ற ஓசைவிகற்பமோ சொற்றொடைவசனத்தொருமொழியிலேவரும். நீர் நாளை நகரிக்குப்போவிரா? காவிரியாறு வசந்தனிற்பெருகுமா? இவ்வகையான வசனங்களிலே இசைத்திரிபிற்கொப்ப, தாட்டாந்தங்களோ பொருண்முடிபிற்பலவாம். சொற்றொடையிலே தாட்டாந்தமொன்றேயெனினும் பொருணடையிலோபலவாம்; உதாரணமாய்,—“அரசன் வந்தான்” என்பது பொருணடையளவிலோ இரண்டுதாட்டாந்தமாம். இசைத்திரிபினது நயத்தையும் இங்ஙனங்கண்டுகொள்க.

தன்மைச் சுயம்பிததாட்டாந்தங்கள் பயின்றுவரும் நையாயிதமானது தன்மைச்சுயம்பிதநையாயிதமாம்.

உலகந்தானாய்த்தோன்றாது, என்னுமிடத்து, தானாய் என்பதைத்தோன்றாது எனும் விசேடகபாதத்துடனே ஒட்டியும், அவன்சொன்னது முற்றும்போய், என்னுமிடத்து, முற்றும் என்பதை அவன்சொன்னது எனும் விசேடியபாதத்துடனே ஒட்டியும், முடிப்பின், அத்தன்மைத்தாட்டாந்தங்கள் சுத்தசுயம்பிதங்களாய்நிற்கும். இப்படி முடிந்துநிற்குந் தன்மைத்தாட்டாந்தங்களும், அவற்றான்வரும் தன்மைநையாயிதங்களும் சுத்தசுயம்பிதங்கட்கு மேலையுரைத்த இலக்கணங்களையும் விதிகளையும்பெற்றுமுடியும் என்றும் புந்தியிலே நன்கமைத்துக்கொள்க.

"ஆய்தமுயிர்மெய்யன்று" எனுந்தாட்டாந்தமானது, இசைத்திரிபினாலே,--

ஆய்தம் உயிர்மெய்யன்று எனப்பிளந்திசைக்கின், ஆய்தமானது உயிர்மெய்யாகிய சார்பெழுத்தல்லவென்று பொருள்படநிற்கும்.

ஆய்தமுயிர் மெய்யன்று, எனப்பிளந்திசைக்கின், ஆய்தமாகிய உயிரெழுத்து மெய்யெழுத்தல்ல எனப்பொருள்பட நிற்கும்.

ஆய்தம் உயிர் மெய் அன்று. எனப்பிளந்திசைக்கின் ஆய்தமானது உயிருமன்று மெய்யுமன்று எனப்பொருள்படநிற்கும்.

"வைத்தியநாததம்பிரானின் இலக்கண விளக்கம், பவணந்திமுனியின் நன்னூலைவெல்லச் செயப்பட்டதன்று" எனுந்தாட்டாந்தத்தை * இசைத்திரிபாற்

---

* இத்தாட்டாந்தம் இசைத்திரிபாற் பலதாட்டாந்தங்களின் பொருணடை எய்தும். போலிநியாயம் விளைதற்கு இஃதோர்வருவாயாம்; ஆகலான், நியாயிக்குங்கால் இசைத்திரிபையுங்கருத்திலே அமைத்துக்கொள்ளவேண்டியது. விகடகவிகளே பெரும்பாலும் இசைத்திரிபாற்பிறர்க்கு வினோதம்விளைவிப்போர். இசைத்திரிபானது பொருணயமின்றிவரிற் சொன்னயமின்றாம்; உதாகரணமாய், ஊர்மன்று, கண்ணிமை, செவிப்புலவொலி, கட்புலவடிவம்; இவற்றுள் மன்று இமை

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

பிளந்திசைக்கின், பலதனித்தாட்டாந்தத்தின் வகையையும் முடிபையும்பெறும் என்று அறிக.

"இசைத்திரிபாற்றன்மைத்தாட்டாந்தரமுதலவாவும் பலதனித்தாட்டாந்தரத்துவகைமுடிபே" எனவும் "எழுத்தியறிரியாப் பொருடிரிபுணர்மொழி இசைத்திரிபாற்றெளிவெய்தும்" எனவும் உரைக்கவே,-பேசுங்காலன்றி எழுதுங்கால் இசைத்திரிபால் விளையும்பொருளை விளக்குமபடி சொற்களைத்தொடரத்திரட்டியும் பிளந்தும் ஏற்றசொற்களில் இசையுறுத்தியும் வழங்கலுந்தகும் என்றும் ஒலிக்கும்.*

"ஆய்தம்உயிர் மெய்யன்று" என்பதை ஆய்தம் உயிர்மெய்யன்று எனவும், ஆய்தம உயிர்; மெய்யன்று எனவும், ஆய்தமுயிர் மெய்யன்று எனவும், ஆய்தம் உயிர் மெய் அன்று எனவும் ஏற்றவாறு சொற்களைத் தொடரத்திரட்டியெழுதுக.

கொற்றன் முந்தைநாளெட்டுநாழிகையளவில் இங்கேவந்தான், என்பதைக் கொற்றன் என்பதில் இசையுறுத்தின், பின்னொருவரல்லக் கொற்றனே யென்றுபொருளாம்; முந்தைநாள் என்பதில் இசையுறுத்தின், பின்னொருநாளிலல்ல முந்தைநாளேயென்றுபொருளாம்; எட்டுநாழிகை என்பதில் இசையுறுத்தின், பின்னொருநாழிகையிலல்ல எட்டுநாழிகையளவிலேதான் என்றுபொருளாம்; இப்படியே மற்றுஞ் சொற்களிலும் இசையுறுத்திக்கண்டுகொள்க.

இசைத்திரிபுகாரணமாய்ப் பலபொருட்பட முடியுந் தாட்டாந்தத்தில், நாம்பேசும் நியாயத்தை வலியுறுத்த எடுத்துக்கொண்ட துணிபொருள் இன்னதென்று நன்குதெளியவேண்டியது. அப்படித்தெளியாமல், வாதியொருபொருளிலும் பிரதிவாதி வேறொருபொருளிலும் ஒருதாட்டாந்தத்தைப் பிரயோகிக்கின், குதர்க்கம்பிறக்

---

ஒலி வடிவம் என்னுமொழிகளையே இசையுறுத்தவேண்டும்; ஆகலான், இசைத்திரிபிற் பொருணயஞ் சொன்னயங்கருதி அமைத்தாலன்றிச் சிறப்பின்றாம்.

* ஆகவே பொருணயஞ்சொன்னயங்கருதாது மொழிகளைப் புணர்ச்சிவிதிகட்கமைவேன்று ஒருங்குதிரட்டித் தொடரெழுத்தாய் எழுதுவது சிறப்பன்றாம்.

கும்; வாதியேனும் பிரதிவாதியேனும் ஒருக்கால் ஒரு பொருளிலும் பின்னொருக்கால் வேறொரு பொருளிலும் பிரயோகிக்கிற்போலி பிறக்கும்.

* மன்றிலே விவகரிக்குங்கால், தாட்டாந்தமொன்றிலேயுள்ள பதைனிப்பொருவளயும் முறையே தனித்தனி ரூபிகரிக்கவும்வேண்டிவரும், உதாகரணமாய்,—

"சேனுபதி அரசனை மனசார வன்மத்தாற்கொன்றுன்" என்பதில் மந்திரியல்லச் சேனுபதிதான் கொன்றுன் என்றும், பின்னொருவனையல்ல அரசனையேகொன்றுன் என்றும், நிணையாப்பிரகாரமல்ல மனசாரவே என்றும் தற்செயலாயல்ல வன்மஞ்சாதித்தேயென்றும், தனித்தனி ரூபிகரிக்கவேண்டியதென்றறிக.

உஅ. பேசுசம்பாவிததாட்டாந்தரம்பல் சுயம்பிதமே வாசிரோடையாநியாயத்தோனிப்புசம்பாவிதம்பால் வீசலில்லாதுசம்பாவிதசாதனத்தாலனுமை பேசினதைக்கொள்சுயம்பிதமாப்பொருட்பேறளவே.

இ--யுள், சம்பாவிததாட்டாந்தம் இப்படி வருமென்றும், சுயம்பிதனையாயிதத்தை மேலும் ஒருவாறுவிரித்தும், உணர்த்துகின்றது.

---

* மன்று என்பது பிரசைகளின் குறைமுதலியன விளங்கி நிறைமுதலியனபுரியும்மன்சபை. விவகரித்தல் என்பது வழக்காடுதல். தர்ம்ம நெறியின்வழுவி அதர்ம்ம வழியிலொழுகுவோரையடக்கி, பிரசைகளுக்குப்பிரசாந்தி செல்வவிருத்தி சம்பத்துச்சேமம்முதலிய சற்காரியங்களைப் படைத்து, அன்னபோற் றன்னயங்கருதாது ஆதரிக்கும் மன்னனன்வீற்றிருக்குஞ் சபையே மன்று எனப்படும். செங்கோன்மைநெறியைத் தழுவாது கொடுங்கோன்மையையேபழகிய மன்னனதுசபையாகிய மன்றிலேறி விவகரிக்கப்புகுவது பொருளுந் தொலைந்து அருமைபெருமையுங் குலைந்து மனேசாந்தியுங் குன்றுதற்கோர் நன்னெறியாகிய புன்னெறியாம்; ஆகவே; இராச்சியபரிபாலனத்துக்குரிய இலட்சணஞ் செறிந்து தர்ம்ம வடிவம் நிறைந்தோரே மன்னர் எனும்பெயர்க்குஉரியார்.

இ—ள். பேசுசம்பாவிததாட்டாந்தரம்பல் சுயம்பிதமே வாசிரேருடையாம்--(முன்னர்) உரைத்தசம்பாவிததாட்டாந்தமானதுபல சுயம்பிததாட்டாந்தங்களால் வருந்தோடையாம். நியாயத்தோனிப்பு சம்பாவிதம் பால் வீசலில்லாது சம்பாவிதசாதனத்தாலனுமை பேசினதைக்கோள் சுயம்பிதமாப்போருட் பேறளவே--நியாயித்தலின் தோனிப்பானது சம்பாவிதத்திலே தாவாதபடி சம்பாவிதசாதனத்திஞலே சம்பாவிதசாத்தியத்தை அனுமித்தால், அந்தநியாயத்தைப் போருண்மாத்திரத்திலே சுயம்பிதநியாயமாகக்கோள்.எ--று.

ஆசில் என்பது குற்றமின்றிய எனும் போருடரும் அடை.

சம்பாவிததாட்டாந்தமானது இரண்டுமுதலாய சுயம்பிதங்கள் புணர்ந்துவரும். சம்பாவிததாட்டாந்தம் இன்னதென்பதை ஏழாஞ்செய்யுளின்கீழ்க்காண்க.

சம்பாவிததாட்டாந்தத்திற்கு உதாகரணங்கள்.

கர்த்தாவின்றேற் பிரபஞ்சகாரியமுமின்றும்.

* காரியமுண்டேனிற் காரணமுண்டு.

---

* காரணமின்றி எங்ஙனேனுங் காரியமின்றும். காரணகாரியங்கட்கு நிலயும் நிருவிகற்பமுமான சம்பந்தம் உண்டேன்று மாந்தரதுபுந்தியிலே இயற்கையுஞ் சகசமுமான ஒரு பிரஞ்ஞை கிடக்கின்றது; ஆனதிஞற்றுன் மாந்தர் காரியமேதவணக் காணுமிடத்துங் காரணத்தைவிஞவுவது. காரணகாரியத்தோடர்பு அனுபவ ஞானமன்றும்; அனுபவத்திஞலே இன்னகாரியத்துக்கு இதுகாரணமென்று அறிகின்றனம்; இப்படிக்காரியத்தைக்காணுமிடத்துப் புந்தியானது காரணத்தை விஞவுவதென்னையெனின், அப்புந்தியிலே காரணகாரியங்கட்கு நிருவிகற்பமான சம்பந்தமுண்டேன்று ஒரு பிரஞ்ஞை சகசமாயிருந்து உணர்த்துவதிஞற்றுன். காரியத்தின்இருப்பிஞலும் நிருவாகத்திஞலுங் காரணத்தின் இருப்பும் இலட்சணமுஞ்சாதிக்கலாம்.

கீழ்வரும்,-(சம்பாவிதநையாயிதவகைகளி ரண்டும்) மேலைச்செய்யுட்களில்வரும். எ-று.

வளமைஎன்பது பொருட்செழுமைஎனும் அர்த்தந்தரும் அடை.

அந்நியாயம் என்றது தாப்பிசைப்பொருண்மேனின்றது.

பூர்வசாதனம்-சாத்தன் சுரமுடையனேல்நோயுடையன்; உத்தரசாதனம்—சாத்தன்சுரமுடையன்; ஆகவே சாத்தியம்-அவன் நோயுடையன்;-என்று நியாயிக்குமிடத்து, நியாயம் சம்பாவிதத்தமைந்து நிற்றலின், இந்நியாயஞ் சுயம்பிதநையாயிதமன்று, சம்பாவிதநையாயிதம் என்றும்.

சம்பாவிதநையாயிதத்தின் இருவகையாவன,—

சங்கேதநையாயிதம், வியோகநையாயிதம்.

சம்பாவிதசாதனம் என்பது சம்பாவிததாட்டாந்தமாய்நிற்குஞ் சாதனம் ஆம். (சம்பாவிததாட்டாந்தம் இன்னதென்று தாட்டாந்தத்திலே முன்னர் உரைத்தாம். சம்பாவிதம் என்பதையும் அங்ஙனம் உரைத்தாம்; கண்டுகொள்க.)

இருபத்தெட்டாஞ்செய்யுளின்கீழ் உதாகரித்திருக்கின்ற நையாயிதங்களிலே சம்பாவிததாட்டாந்தம் வந்துபயின்றும், நியாயத்தொனிப்போ சம்பாவிதத்திற்றுவாமனிற்றலின், அவற்றைச் சுயம்பிதநையாயிதங்களென்றும், இங்ஙனம்உதாகரித்திருக்கின்றநையாயிதத்திலோ சம்பாவித தாட்டாந்தமும் பயின்று நியாயித்தலுஞ் சம்பாவிதத்திலேயே தாவிநிற்றலின், இதனைச் சம்பாவிதநையாயிதமென்றும், உரைத்தனமென்று தெளிந்துகொள்க.

---

மாய்,—பூர்வசாதனம்—இப்பருவங் கார் அல்லதுகூதிர் அல்லது பனி அல்லது வேனில்; உத்தரசாதனம்-இது கார் கூதிர் அன்று; ஆகவே சாத்தியம்-இதுபனியல்லது வேனிற்பருவமாம்;—இங்ஙனம் எடுத்துக்கொண்டசம்பாவித நியாயத்துக்குப் பீடிகை பூர்வசாதனமேயன்றி மற்றையவல்ல.

௯0. வருமீர்சுயம்பிததாட்டாந்தரங்களுளொன்றின்
தருமாறுலவருத்தாபத்தியதுசங்கேதமதின் (மற்ற
மருவேதுமேல்விளகாரியம்மன்னுசம்பந்தமதில்
ஒருவாதுமெய்போயொடுங்கிடுஞ்சூத்ரமுரைக்குவமே.

இ--யுள், சங்கேததாட்டாந்தமின்னதேன்றும், அதன் மெய்மைபோய்மையைத் தேளியுமாறு இப்படியேன்றும், உணர்த்துகின்றது.

இ--ள். வருமீர்சுயம்பிததாட்டாந்தரங்களுளொன்றின்மற்ற தருமாறுலவருத்தாபத்தியது சங்கேதம்-சங்கேததாட்டாந்தம் என்பது (ஒருசம்பாவிததாட்டாந்தத்தில்) வருகின்றசுயம்பிததாட்டாந்தமிரண்டனுள் ஒருதாட்டாந்தத்தால் மற்றது விளையும்படி நடக்கும் அருத்தாபத்தியையுடையதேயாம்.

அதின் மருவேதுமேல்விளைகாரியம்மன்னு சம்பந்தமதில் ஒருவாதுமெய்போயொடுங்கிடும்--அச்சங்கேததாட்டாந்தத்துள் அமைந்து கிடக்கின்ற ஏதுவுக்கும் அதில் விளையுங் காரியத்துக்குமுள்ள சம்பந்தத்திலேயே (அத்தாட்டாந்தத்தினது) மெய்மையும் போய்மையும் நீங்காதோடுங்கும். *

---

* சுயம்பிததாட்டாந்தங்களிலே மெய்மை போய்மை விசேடிய விசேடகத் தொடர்பாற் றெளியுமாறுபோல, சங்கேததாட்டாந்தத்திலேமெய்மைபொய்மை ஏதுகாரியத்தோடர்பாற்றெளிகின்றனம். ஏதுவுங் காரியமுங் தனித்தனி பொய்மையேயாயினும் அவற்றால் வருஞ் சங்கேததாட்டாந்தம் மெய்மையாதலுமுண்டு; அவை தனித்தனி மெய்மையேயாயினும் அவற்றால்வருஞ் சங்கேததாட்டாந்தம் பொய்மையாதலுமுண்டு. ஆகலான், "மருவேதுமேல்விளகாரியம் மன்னுசம்பந்தமதில் ஒருவாதுமெய்போயொடுங்கிடும்" என்று செய்யுளிற்றந்துரைத்தாம். மேவல இதவண விளக்குவம்; கண்டுகொள்க.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.3000000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

சூத்ரமுரைக்குவம்--(தத்துவசூத்திரத்தான ன்றி வேறுசூத்திரங்களானும் சம்பாவித நை யாயிதங்களின்சித்தியை அளக்கும்படி) சூத் திரங்கள் மேலேச்சோல்வாம்.--என்றவாறு.

சங்கேததாட்டாந்தமேதனிலேயும் இரண்டு சுயம்பி ததாட்டாந்தங்கள் மாத்திரம் வந்து பயிலும்; உதாகரண மாய்,—

மழைபெய்யுமேல், நாடுசெழிக்கும்; இச்சங்கேததா ட்டாந்தத்துள், மழைபெய்யும்,–நாடுசெழிக்கும்,–என் னும் இரண்டு சுயம்பிததாட்டாந்தங்கள் வந்து நிற்கின் றமைகாண்க.

அவர் வருவரேல் உய்வேன்;—
அவர் வந்திலரேல் மாய்வேன்;—
கருமம் உண்டெனிற் கருத்தாஉண்டு;—
கருத்தாவின்றேற் கருமமின்று; இவ்வகையான

தாட்டாந்தங்களே சங்கேததாட்டாந்தங்களாம்; (ஏல் எனின் ஆல் முதலியன* சங்கேதத்தைக்குறிக்கும்மொ ழிகளாகும்.)

சங்கேததாட்டாந்தத்துள்வருஞ் சுயம்பிதமிரண்டனு ள், மற்றது விளைதற்கிடனாய் நிற்கும் ஒரு தாட்டாந்தத் தை ஏதுஎன்றும், ஏதில்விளைந்த தாட்டாந்தத்தைக் கா ரியம் என்றுஞ் சொல்லுக; உதாகரணமாய்,—

—ஏது—கருத்தாவின்றேல்,
—காரியம்—கருமமின்று.

---

* வருவரேல், வருவரெனின், உலகஞ்சோயம்பெனி ன், காரணமில்லாதிருந்தால், காரணமுண்டாயின், கட வுள் அரசுபுரியின். இதுபோன்னேல்,--இவ்வுதாகரண ங்களினிற்கும் ஏல் எனின்முதலியன சங்கேதமொழி களாதும். சங்கேதமானது முக்காலங்களையும் பற்றிப் பெயரினும், பெரும்பான்மையும் நிகழ்காலசம்பவத்தி ன் சங்கையையேனும் எதிர்காலசம்பவத்தின் சந்தே கத்தையேனும் பற்றியேவரும்; "இவரிடத்துச் செல்வ முண்டேல்" என்பது நிகழ்காலசம்பவத்தின் சங்கை யையுங் குறிக்கும்;—எதிர்கால சம்பவத்தின் சந்தேகத் தையுங் கருதும்; ஆகலான் இவ்விரண்டனையுந் தெளி ந்துமொழிவதே விழுமம்.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472 Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

ஏது—மழைபெய்யுமேல்,
காரியம்—நாடுசெழிக்கும்; இங்கேமழைபெய்தலி
லே நாடுசெழித்தல் சார்ந்துநிற்றலின், "மழைபெய்யு
மேல்" என்பது ஏதுவும், "நாடுசெழிக்கும்" என்பது
காரியமும், ஆயின.

சம்பாவிததாட்டாந்தத்துள் ஏது முன்னருங் காரியம்
பின்னரும்வருவதேநெறியாயினும், "ஏரினுழாஅர் உழ
வர் புயலென்னும் வாரிவளங் குன்றிக்கால்" எனவும்;
"சிறப்பொடுபூசனை செல்லாது வானம்வறக்குமேல்"
எனவும், ஏதுபின்னருங் காரியம் முன்னரும் வருதலும்
அமையும்.

"ஏது மேல் விளைகாரியம் மன்னுசம்பந்தமதினொருவா
துமெய்பொயொடுங்கிடும்" என்றதெப்படியெனின்,—

"கடவுள் விகாரமடைவரேல் அவர் பரிபூரணலட்ச
ணரன்று" என்னுமிடத்து, "கடவுள்விகாரமடைவர்"
என்னும் ஏதுவும் "அவர் பரிபூரணலட்சணரன்று" எ
ன்னுங் காரியமும் தனித்தனி பொய்மையாய் விளங்கி
யும்,—"கடவுள் விகாரமடைவரேல்" என்றொரு ஏது
வைவிபாவிக்கின்; 'அவர்பரிபூரணலட்சணரன்று" எ
ன்றொரு காரியம்முடியுமாதலான், அச்சங்கேததாட்டா
ந்தம் மெய்யாம். *

"பவணந்திசமணனேல்இலக்கணிதான் †" என்னு

---

* "மாந்தர் யுத்தி புத்தியினரன்றேல் அவர்தத்தம்செ
யற்கு உத்தரவாதிகளன்றும்" என்னுமிடத்து, "மாந்தர்
யுத்திபுத்தியினரன்று" என்னும் ஏதுவும், 'அவர்தத்தம்
செயற்கு உத்தரவாதிகளன்று" என்னுங் காரியமும், த
னித்தனியே பார்க்குங்காற் பொய்மையாய் நின்றும், அ
வ்விரண்டு தாட்டாந்தங்களையும் ஏதுகாரியங்களாகப்
புணர்க்குமிடத்து, "ஒன்றினமற்றதருமாறுலவருத்தாப
த்தியது" ஆகலான், அச்சங்கேததாட்டாந்தம்மெய்யாம்.

† பவணந்திசமணன் எனும் ஏதுவும் அவன் இலக்
கணிதான் என்பதுந் தனித்தனி மெய்மையாய் நின்று
ம், பவணந்தி இலக்கணியென்ற காரியம் அவன் சம
ணனுயிருக்கும் ஏதுவால் விளைதலின்றுதலின்; அந்த
முழுத் தாட்டாந்தமுமோ பொய்மையாம். ஆகலான்,
"மருவேதுமேல்விளைகாரியம்மன்னுசம்பந்தமதில் ஒரு
வாதுமெய்பொயொடுங்கிடும்."

Digitized by EMORY UNIVERSITY　Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472 / Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

மிடத்து, ஏதுவுங் காரியமுந் தனித்தனி மெய்மையாயிருந்தும் காரியம் ஏதுவில்விளையாமையால், முழுத்தாட்டாந்தமுமோ பொய்யாம்; ஆகலான், ஏது காரியங்களின்சம்பந்தத்தொடர்பிலேயே மெய்மை பொய்மைகள் ஒடுங்கி நிற்குமென்றுணர்க; ஆகவே, இன்ன நியாயஞ் சித்தியுடைத்து என்னுமிடத்து (சாதனந்தம்மைமாத்திரங் கருதுங்காற் பொய்யாயேனும் மெய்யாயேனுமிருந்தும்) சாதனங்களிற் சாத்தியம் அவாவிமுடிகின்றது என்னும் பொருட்படுதலால், சங்கேததாட்டாந்தமானது நியாயத்தின் சித்தியை வலியுறுத்தலாம் எனக்கொளினும் அமையும்; உதாரணமாய்—

ஏது,—விலங்குகள் யுத்தியில்லனவும் யாவண விலங்குமாயிருக்குமேல்;

காரியம்,—யாவணயுத்தியில்லது; இங்கே, சுயம்பிதநையாயிதமொன்றை, அதன் வலியுறுத்தும்படி, சங்கேததாட்டாந்தமாய் உரைத்திருக்கின்றது கண்டுகொள்க.

ருக. உரையேதினுக்குஉடம்படிற்காரியஞ்சாத்தியமாம்
வருகாரியத்தைமறுத்திடினேதும்மறுத்திடலாந்
தருகாரியத்திணையொப்பினுமேதைமறுத்திடினும்
மருவாதனுமிதமிப்பால்வகுப்பம்வியோகமதே.

இ—யுள், சங்கேத நையாயித சூத்திரங்கள் இவையென்றும், சங்கேநையாயிதம் அனுமானமாகா இடம் இவையென்றும், உணர்த்துகின்றது.

இ--ள். உரையேதினுக்கு உடம்படிற் காரியஞ் சாத்தியமாம்--சொல்லிய ஏதுமெய்மையென அங்கீகரித்தாற் காரியமும் மெய்மையென அனுமிதமாம்.

வருகாரியத்தை மறுத்திடினேதும் மறுத்திடலாம்—(ஏதின்பால்) வருகின்ற காரியம்மெய்மையன்றேன மறுத்தால் ஏதும்மெய்மையன்றேன மறுக்கலாம்.

தருகாரியத்தினையொப்பினுமேதை மறுத்திடினும் மருவாதனுமிதம்-- (அவ்வாறன்றி,) சொல்லியகாரியம் மெய்மையென்றுடம்படுவதினாலும் ஏதுமெய்மையன்றென்று மறுத்திடுவதினாலும் அனுமானமாகியசாத்தியம் முடிவதில்லை. *

இப்பால்வகுப்பம்வியோகமதே--இனி வியோகதாட்டாந்தத்தை மொழிகுவாம். எ--று.

சங்கேதநையாயிதசூத்திரங்கள்,—

க. "ஏதினுக்குஉடம்படிற்காரியஞ்சாத்தியமாம்."

இச்சூத்திரத்தான் முடியும் நையாயிதங்களனைத்தும் நிரனிலைச்சங்கேதமெனப்படும்.

உ. "காரியத்தை மறுத்திடினேதும்மறுத்திடலாம்."

இச்சூத்திரத்தான்முடியும் நையாயிதங்களனைத்தும்மறுதலைச்சங்கேதம் எனப்படும்.

சங்கேதநையாயித உதாகரணங்கள்.—

க. சாத்தன் சுரமுடையனேல் நோயுடையன்;
சாத்தன் சுரமுடையன்; ஆகவே
அவன் நோயுடையன். இது முதலாஞ்சூத்திரத்தான்முடிந்த நிரனிலைச்சங்கேத நையாயிதமென்றறிக.

---

* "வருமீர்சுயம்பிததாட்டாந்தரங்களுளொன்றின் மற்றதருமாறுலவருத்தாபத்தியது சங்கேதம்" ஆதலின், ஏதுமெய்மையென அங்கீகரித்தாற் காரியமும்மெய்மையென்று அனுமிக்கலாமேயன்றி, ஏதுமெய்மையன்றென மறுத்தாற் காரியமும் மெய்மையன்றென அனுமானமாகாது: காரியம் மெய்மையன்றென மறுத்தால் ஏதும்மெய்மையன்றென மறுக்கலாமேயன்றி, காரியம் மெய்மையென்றுடம்பட்டால் ஏதும் மெய்மையென்றுடம்படமுடியாது.

காரியமுண்டேற் காரணமுண்டு;
கடவுளின்சித்தம்போனடப்பரேற் கதியடைவர்;
கசமுடையனேற் பிணியுடையன்;
பிணியிலனேற் கசமிலன்;
காரணமின்றேற்காரியமின்று. இவற்றிற்காண்க.

௨. காரியமுண்டேனிற் காரணமுண்டு;
காரணமில்லை; ஆகவே
காரியமுமில்லை. இது இரண்டாஞ்சூத்திரத்தான் முடிந்த மறுதலைச்சங்கேதநையாயிதமென்றறிக.
௩. கருத்தாவின்றேற் காரியமில்லை,
கருத்தாவின்று; ஆகவே
காரியமில்லை. நிரனிலைச்சங்கேதநையாயிதம்*.
௪. கருத்தாவின்றேற் காரியமில்லை,
காரியமுண்டு; ஆகவே
கருத்தாவுமுண்டு. மறுதலைச்சங்கேதநையாயிதம்.

இவ்வுதாசரணங்களிலே முடித்துக்காட்டிய வாறன்றி, காரியத்திணையொப்பினும் ஏதை மறுத்திடினும் மருவாதநுமிதம் என்றறிக; உதாகரணமாய்,—

முதலாம் உதாகரணத்திலே முடித்தவாறன்றி, சாத்தன் நோயுடையன் எனக் காரியத்தை ஒப்பின், சாத்தன் சுரமுடையன் என்று ஏதுஅனுமானமாகாது; என்னையோவெனின், சாத்தன் சுரத்தாலன்றிக் கசம் குன்மம்முதலியபிறவாற்றாலும் நோயுடையனாயிருக்கலாம் ஆதலின்.

௯௨. தேறுஞ்சுயம்பிததாட்டாந்தரங்கள்பிரிநிலையில்
வேறென்றியதிறனயவற்றென்றெனுமெய்மையதாய்
ஏறும்வியோகநற்றுட்டாந்தமெய்துசுயம்பிதங்கள்
ஊறுஞ்சிலமறுத்தாலேஞ்சியவுடம்பட்டிடுமே.

---

* ஒழுங்கே ஏதுவுக்கு உடம்பட்டுப் பின்னர் காரியத்துக்கும் உடம்படலான், அன்னநையாயிதம் நிரனிலைச்சங்கேத நையாயிதம் எனும்பெயர்பெற்றது. காரியத்தை மறுத்துப்பின்னர் ஏதுவையும் மறுப்பின், அன்னநையாயிதம் மறுதலைச் சங்கேத நையாயிதம் எனும்பெயர்பெறும்.

அக்கினியுண்டேற் காந்தியுண்டு,
அக்கினியுண்டு; ஆகவே
காந்தியுண்டு. நிரனிலைச்சங்கேதநையாயிதம்.
அக்கினியுண்டேற் காந்தியுண்டு,
காந்தியில்லை; ஆகவே
அக்கினியில்லை. மறுதலைச்சங்கேதநையாயிதம்.

இ--யுள், வியோகதாட்டாந்தம் இன்னதே ன்றும், வியோக நையாயிதசூத்திரம் இதுவெ ன்றும், உணர்த்துகின்றது.

இ—ள். தேறுஞ்சுயம்பிததாட்டாந்தரங்கள் பிரிநிலையில் வேறென்றிய திறனுயவற்றேன் றேனு மெய்மையதாய் எறும்வியோகநற்றட் டாந்தம்--தெளிந்தபல சுயம்பித தாட்டாந்தங் கள் பிரிநிலைப்பொருளில் வேறுபட்டுப் புண ருந்திறத்தையுடையதாய், அச்சுயம்பிதங்களு ள்ஒன்றெனினும் மெய்மையுடையதாய், நட க்குந் தாட்டாந்தமே * வியோகதாட்டாந்தம் எனப்படும்.

எய்து சுயம்பிதங்களுளுஞ் சிலமறுத்தாலே ஞ்சியவுடம்பட்டிடும்- (வியோகதாட்டாந்தத் துள்) வருஞ் சுயம்பிதங்களிற் சிலவற்றைப் பொய்யென மறுத்தால், ஒழிந்தவைகள் (வி யோகமாய்)மெய்யெனஉடம்படலாம். எ-று.

வியோகதாட்டாந்தத்திலே இரண்டுமுதலிய பலசுய ம்பிதங்கள்வரும்; உதாகரணமாய்—

இது மாரிஅல்லது கோடை; இவ்வியோகதாட்டாந்த த்திலே; "இதுமாரி —இதுகோடை" என இரண்டுசுயம் பிததாட்டாந்தங்கள் பிரிநிலைப்பொருளில் வேறுபட்டு ப்புணர்ந்து நிற்கின்றன.

இப்பருவங் † கார் அல்லது கூதிர் அல்லது பனி அல்ல

---

* வியோகம் என்பது பிரிநிலை; அவன் இங்கே வந்த து பகல் அல்லது இரா—என்னுமிடத்து இரண்டுசுயம்பி த்தாட்டாந்தங்கள் வியோகமாய்ப் புணர்ந்து நிற்கின்ற ன. செயற்குரியகாலம் இறப்பு அல்லது நிகழ்வு அல் லது எதிர்வு—என்னுமிடத்து மூன்று சுயம்பிததாட்டா ந்தங்கள் வந்தன.

† பரவியகாரேகூதிர்முன்பினிற்பனிகளோடு
விரவியஇளையவேனில் விளைந்திடுமுதிர்ந்த வேனில்

துவேனில்; இவ்வியோக தாட்டாந்தத்திலே நான்குசுய ம்பிதங்கள் பிரிநிலையிற்புணர்ந்துநிற்கின்றன; அவை,-

இப்பருவங்கார்
இப்பருவங்கூதிர்
இப்பருவம்பனி
இப்பருவம் வேனில்.

வியோகதாட்டாந்தத்தில் வந்துபயிலும் பலசுயம்பிதங்களுள் ஒன்றேனும் மெய்மையாயிருக்கவேண்டியது; அன்றேல், வியோகதாட்டாந்தமானது பொய்மையென்றேமுடியும்; உதாகரணமாய்,—

கடவுள்விகாரி அல்லது மலசகிதன் என்னுமிடத்து "கடவுள் விகாரி, கடவுள் மலசகிதன்" எனும் இரண்டு சுயம்பிததாட்டாந்தங்களுள் ஒன்றேனும் மெய்மையன்றாதலின், அவ்வியோகதாட்டாந்தம் பொய்மையேயாம். *

வியோகநையாயித சூத்திரம்.

---

மருவும்ஆவணியேயாதிமற்றிரண்டிரண்டுமாதம்
பருவமூவிரண்டும்ஆய்ந்துபார்த்திடில்வாய்த்தபேரே-

எனுஞ்செய்யுட்படி, பருவம் ஆறேயெனினும், முன்பனி பின்பனி எனும் இருபருவமும் பனியிலும் இள்வேனில் முதுவேனில் இரண்டும் வேனிலிலும் அந்தர்ப்பவித்துப் பருவம் நான்காகவும் முடியும்.

* வியோகதாட்டாந்தமானது பெரும்பான்மையும்வந்துபயிலுமிடம் யாதெனின், ஒருபொருளை அல்லது பலபொருளைப்பற்றி உரைக்கக்கூடிய துணிபுகளுள் ஒன்றேனும் மெய்மையாய்முடிதல் இன்றி அமையாத இடமேயாம்; உதாகரணமாய்,

கடவுள் மலரகிதன் அல்லது மலசகிதன்;
இம்மகவு புதல்வன் அல்லது புதல்வி;
இப்பூதியம் பிருதுவி, அப்பு, தேயு, அல்லது வாயு;
மழை அல்லது பனிப்பெய்தது;
தந்தையேனும், மைந்தனேனும் வருவான்;
அவன் நாளை இங்கேவருவன், அல்லது இவன் அங்கே போவன்;
அறம்வளரும் அல்லது மறந்தளரும்;
அரசு வாழும் அல்லது பிரசை தாழும்.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472 Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

"எய்து சுயம்பிதங்களுறுஞ்சில்மறுத்தாலெஞ்சியவுட ம்பட்டிடும்."

வியோகநையாயித உதாகரணங்கள்.

பூர்வசாதனம்—இது மாரி அல்லது கோடை.
உத்தரசாதனம்—இதுமாரி அன்று; ஆகவே
சாத்தியம்—இதுகோடையாம்.

இந்நையாயிதத்தின் உத்தரசாதனத்திலே பூர்வசாதனமாய்நிற்கும் வியோகதாட்டாந்தத்துள்ள சுயம்பிதங்களிலொன்றை மறுத்ததனுல் அவ்வியோகசாதனத்தெஞ்சிநின்ற சுயம்பிதமே சாத்தியத்தில் மெய்யென அங்கீகரிக்கப்பட்டது.

பூர்வசாதனம். இப்பருவங் கார், கூதிர், பனி, அல்லது வேனில், (ஆகவே
உத்தரசாதனம். இப்பருவங்காருமன்றுகூதிருமன்று,
சாத்தியம். இது பனி அல்லது வேனிலாம்.

அரசன் மந்திரி அல்லது தானுதிபன்விவேகி,
மந்திரி விவேகி அன்று; ஆகவே,
அரசன் அல்லது தானுதிபன் விவேகி.

இங்ஙனம் உதாகரித்தனபோலும் பலநையாயிதங்களிலே வியோகசாதனத்துவருஞ் சுயம்பிததாட்டாந்தங்களுட் சிலமாத்திரமே மெய்யென்று முடிதலால், வியோகசாதனத்துவருஞ் சிலசுயம்பிதத்தை மெய்யென உடம்படின் ஒழிந்த சுயம்பிதத்தைப் பொய்யென மறுத்தலும் ஒருவாற்ருன் * அமையுமெனினும், இஃது வியோ

---

* "இப்பருவம் மாரி அல்லது கோடை" என்னுமிடத்தும், "உலகந்தானுய்த்தோன்றும் அல்லது பிறகாரணத்தாற்ருேன்றும்" என்னுமிடத்தும், ஒருதுணிபை மறுத்தால் எஞ்சிய துணிபை உடம்படுகின்றனமாதலின், முதலே ஒருதுணிபை உடம்பட்டுப் பின்னர் ஒழிந்ததுணிபை மறுக்கினும் அமையுமாயினும், வியோகதாட்டாந்தம் எங்கணும் இவ்விதி வழுவின்றிமுடியாது. "இவர் குரவராற் செல்வப்பொருளையேனுங் குருவினுற் கல்விப்பொருளையேனும் பெறுவர்" என்னுமிடத்து, குரவராற் செல்வப்பொருளைப்பெறுவர் என்று உடம்படின், குருவினுற் கல்விப்பொருளைப் பெருர் என எங்கணும் மறுத்தல்முடியாது; ஒன்றை மறுத்தால் மற்ற

கநையாயிதமனைத்துக்கும் ஒருசாமானியவிதியன்ரும் என உணர்க.

"சுசீலரானோர் மாந்தரிடத்துப் புகழையேனுங் கடவுளிடத்து அருளையேனும் அடைவார்" எனும்வியோகதாட்டாந்தத்துள்ள சுயம்பிதங்களிரண்டும் மெய்யேயாதலின், ஒருசுயம்பிதத்தை உடம்படலான் மற்றையதை மறுத்தலேலாது, ஆகலின்,

"எய்து சுயம்பிதங்களுறுஞ் சிலமறுத்தாலெஞ்சியவுடம்பட்டிடும்" என்று மேலையுரைத்திருக்குஞ் சூத்திரமே சாமானியவிதியென்றறிக.

௩௩. இடும்பூர்வசாதனத்தேபலவேதுவந்துத்தரமோ தொடர்ந்தேவியோகமதாய்வரிற் சங்கரசங்கேதமென் றிடும்பெயர்சங்கேதநையாயிதவிதிக்கேற்பவிங்கும் உடம்படலேது மறைகாரியஞ்சொல் வியோகத்திலே.

இ--யுள், சங்கரசங்கேதம் என்பது இன்னதென்றும், அதன்சூத்திரம் இதுவென்றும், உணர்த்துகின்றது.

இ--ள். இடும்பூர்வசாதனத்தே பலவேதுவந்துத்தரமோ தொடர்ந்தேவியோகமதாய் வரிற் சங்கர சங்கேதமென்றிடும்பெயர் -சொல்லிய பூர்வசாதனத்திலே பல ஏதுக்கள்வந்து, உத்தரசாதனமோ வியோகதாட்டாந்தமாய்த் தொடர்ந்துநின்று (ஒருநையாயிதம் முடியப்) பெறின், (அந்நையாயிதத்தின்) பெயர் சங்கர சங்கேதம் என்பர்.

சங்கேதநையாயிதவிதிக்கேற்பவிங்கும் உடம்படலேது மறைகாரியஞ்சோல்வியோகத்தில்- சங்கரசங்கேதத்திலேயுஞ் சங்கேதநை

---

தை உடம்படலாம்' அன்றி ஒன்றை உடம்பட்டு மற்றதை எங்கணும் மறுத்தல் ஏலாது.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

யாயிதவிதிக்கொப்ப (மேலேயுரைத்த) வியோகமுறையாய் ஏதை உடம்படுதலுங் காரியத்தை மறுத்தலுமாம்--என்றவாறு.

செய்யும் என்னும் வாய்பாட்டு "இடும்" எனும்முற்றுவிண இங்ஙனம் பல்லோர்படர்க்கையில் முடிந்து நின்றன; அப்படி அருகியும் இலக்கியங்களில்வந்துபயிலும் என்றறிக.

பூர்வசாதனத்திலே சங்கேதவலியும் வியோகநடையுமாய்வரும் பல ஏதுக்களுக்குங் காரியம் ஒன்றேமுடிந்துநிற்றலும், ஏது ஒவ்வொன்றற்குங்காரியம் ஒவ்வொன்று தனித்தனிமுடிந்துநிற்றலும் உண்டு; உதாகரணமாய்,—

மழையானது பிரளயமாய் விஞ்சப்பெய்யினேனும் சற்றும் பெய்யாதொழியினேனும் நாடு அழியும். இவ்வுதாகரணத்திலே, சங்கேதவலியும் வியோகநடையுமாய் "மழையானது பிரளயமாய் விஞ்சப்பெய்யினேனும் சற்றும் பெய்யாதொழியினேனும்" என்றிரண்டேதுக்கள்வந்து, அவ்விரண்டற்குங் காரியம் ஒன்றே விளைந்து முடிந்ததுகாண்க. "வென்றலுந்தோற்றலும்வசையே வெம்போர் வேதியரோடுடற்றல்" என்பதும், "சீரியர் இப்படிப் புகழினேனும் பூரியர் அப்படி இகழினேனுங் குற்றமேயாம்" என்பதும் "சகத்து அனுதி நித்தியசொயம்பானதெனினும் இடையே தானுய்த்தோன்றிற்றெனினும் வழுவேயாம்" என்பதும் அன்ன.

"ஒருவன் சிட்டரோடொழுகின் அறத்தையேனும், துட்டரோடொழுகின் மறத்தையேனும் பயில்வான்" என்னும் உதாகரணத்திலே சங்கேதவலியும் வியோகநடையுமாய் இரண்டு ஏதுக்களும் அவை ஒவ்வொன்றற்குந் தனித்தனி காரியம் ஒவ்வொன்றும் முடிந்துநிற்கின்றன.

(பூர்வசாதனத்துப் பல ஏதுக்கட்குங் காரியம் ஒன்றே முடிந்துநிற்க, உத்தரசாதனத்துக் காரியத்தை எதிர்மறுக்குமிடம் ஒன்றிலேமாத்திரமன்றி) மற்றைய இடமெல்லாம் உத்தரசாதனம் வியோகநடைபெற்றேவருமென்றறிந்துகொள்க.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

### சங்கரசங்கேத உதாகரணங்கள்.

க. மழை பிரளயமாய் விஞ்சப்பெய்யினேனும் பெய்யாதொழியினேனும் நாடு அழியும். (பூர்வசாதனம்.)

மழை பிரளயமாய் விஞ்சப்பெய்யும், அல்லது பெய்யாதொழியும்; (உத்தரசாதனம்) ஆகவே,

நாடு அழியும். (சாத்தியம்)

உ. சாத்தன் சிட்டரோடொழுகின் அறத்தையேனுந் துட்டரோடொழுகின் மறத்தையேனும் பயில்வான், அவன் சிட்டரோடொழுகுகின்றனன் அல்லது துட்டரோடொழுகுகின்றனன், ஆகவே

அவன் அறத்தை அல்லது மறத்தைப்பயில்வான்.

ங. சாத்தன் புலவரோடொழுகிற் புகழ்ச்சியேனும், அசடரோடொழுகின் இகழ்ச்சியேனும், அடைவான்; அவன் புகழ்ச்சியேனும் இகழ்ச்சியேனும் அடைகின்றிலன்; ஆகவே, அவன் புலவரோடொழுகுகின்றிலன் அல்லது அசடரோடொழுகுகின்றிலன்.

இவ்வுதாகரணம் மறுதலைச்சங்கரசங்கேதம் என்றுணர்க.

இங்ஙனம் எடுத்துமொழிந்த உதாகரணங்களைப்பிரித்து விரித்து உரைக்கினும் அமையும், வழுவின்ரும்; உதாகரணமாய்—

| | |
|---|---|
| பூர்வம் | சாத்தன் புலவரோடொழுகிற் புகழ்ச்சி அடைவான்;<br>அவன் அசடரோடொழுகின் இகழ்ச்சி அடைவான்; |
| உத்தரம் | சாத்தன் புகழ்ச்சி அடைகின்றிலன் அல்லது,<br>அவன் இகழ்ச்சி அடைகின்றிலன்; ஆகவே. |
| சாத்தியம் | சாத்தன் புலவரோடொழுகுகின்றிலன், அல்லது,<br>அவன் அசடரோடொழுகுகின்றிலன். |

இவ்வாறே சங்கரசங்கேதங்களைப்பிரித்து விரித்துரைத்தும் அவ்வாறு பிரித்துவிரித்தவைகளைச் சுருக்கியுரைத்தும் பழகுக.

சங்கரசங்கேதம் ஒவ்வொன்றையும் (ஏற்றவாறு) இரண்டு அல்லது பல சங்கேதனையாயிநங்களாக விரித்துணர்த்தலாம்; உதாகரணமாய்,

க சாத்தன் புலவரோடொழுகிற் புகழ்ச்சி அடைவான்,

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

அவன் புலவரோடொழுகுகின்றனன்; ஆகவே
அவன் புகழ்ச்சியடைவான்.
உ. சாத்தன் அசடரோடொழுகின் இகழ்ச்சியடைவான்,
அவன் அசடரோடொழுகுகின்றனன், ஆகவே
அவன் இகழ்ச்சியடைவான்.

மேலயுதாகரித்திருக்கும் மூன்றுவதான சங்கரசங்கேதத்தைவிரிக்கின், இங்ஙனங்காட்டிய இரண்டுசங்கேதநையாயிதங்களாய் வருமென்று கண்டுதெளிக.*

சங்கரசங்கேதமானது, நிரனிலயாய்வரின் ஏதுக்களில் யாதேனும் ஒன்றுமெய்யெனவும், மறுதலயாய்வரிற் காரியங்களுள் யாதேனும் ஒன்று பொய்யெனவுங்கருதப்படுவதாயும், ஆயினும் அவ்வாறுகருதுதற்கிடனுய்நிற்பது, எது என்றுவிளங்காததாயும் நிற்றலான், அவ்வகையான நியாயத்தையே சங்கரசங்கேதமாய் உரைப்பரென்றறிக. ஏதுக்களுட் பலவற்றை மெய்யென்றேனுங் காரியங்களுட் பலவற்றைப் பொய்யென்றேனும் அறிந்தவிடத்திற்றுனும் நியாயத்தைச் சங்கரசங்கேதமாய் உரைப்பதே வலியும் நலமுமென்றுணர்க.

கூச. வியோகநையாயிதஞ் சங்கரசங்கெதமாமிரண்டும்
நயமலிசங்கெதநையாயிதத்திற்கொணர்ந்துபின்னர்
உயர்தருதத்துவசூத்திரத்தேமுடித்தற்குளந்தச்
சொயமருசங்கெததாட்டாந்தமுங்கொள்சுயம்பிதமே.

இ--யுள், சம்பாவிதநையாயிதங்களாகிய சங்கேதநையாயிதம் வியோகநையாயிதம் சங்

---

* வென்றுலுங்தோற்றுலும் வசையயேவெம்போா வேதியரோடுடற்றல்; வென்றனம் அல்லது தோற்றனம், ஆகவே வசையயேவெம்போர் வேதியரோடுடற்றல்; என்னும் இச்சங்கரசங்கேதத்தை இரண்டு சங்கேதநையாயிதங்களாய் விரித்துமொழியலாம்; எப்படியெனில்,
க. வென்றுல்வசையயேவெம்போர்வேதியரோடுடற்றல்,
வென்றனம்; ஆகவே
வசையயேவெம்போர்வேதியரோடுடற்றல். (ல்,
உ. தோற்றுல்வசையயே வெம்போர் வேதியரோடுடற்ற
தோற்றனம்; ஆகவே
வசையயேவெம்போர்வேதியரோடுடற்றல்.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.3000000413472 / Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

கரசங்கேதம் என்பவற்றைச் சுயம்பிதநையாயி தத்திற்கோணர்ந்து, பின்னர் தத்துவசூத்திரத் தான்முடிக்குமாறு உணர்த்துகின்றது.

இ—ள். வியோகநையாயிதஞ் சங்கரசங்கேதமாமிரண்டும் நயமலிசங்கேத நையாயிதத்திற்கோணர்ந்து- (மேலைச்செய்யுட்களிலேயுரைத்த) வியோகநையாயிதஞ் சங்கரசங்கேதமென்னும் இரண்டனையுஞ் சங்கேதநையாயிதமாகப் பெயர்த்துக்கோணர்க.

பின்னர் உயர்தரு தத்துவசூத்திரத்தே முடித்தற்கு எந்தச்சோயமருசங்கேததாட்டாந்தமுங்கோள்சுயம்பிதம்-பின்பு (சங்கேதநையாயிதமேதனையும்) மகாதத்துவசூத்திரத்தான் முடிக்கும்படிக்கு, (அந்நையாயிதத்திலே நிற்கும் பூர்வசாதனமாகிய) சங்கேததாட்டாந்தமேதனையுஞ் (சாமானியான்வய) சுயம்பிததாட்டாந்தமாகக் கருதுக. எ--று.

நயமலியென்பது நயம்மிகும் எனும் பொருளடை.

சோயமரு என்பது தன்னிலைசாரும் எனும் பொருள் அடை.

கோணர்ந்து எனும் வினையெச்சம் வினைமுற்றுப் பொருட்களத்துநின்றமைதெளிக.

சம்பாவிதநையாயிதங்களை முடித்தற்கு உரைத்தவிதிகள்வழுவின்றியவெனினும், தெளிவும் வெளிப்படையுமான மகாதத்துவசூத்திரத்தான் அவற்றைமுடித்துக் காட்டின் நியாயத்தின் சித்தி நன்குதிகழுமென்க; ஆகலாற்முன், "உயர்தருதத்துவசூத்திரத்தே முடித்தற்கு" எனச்செய்யுளுட்டந்தனம்.

"உண்டேநியாயமனைத்துமித்தத்துவ சூத்திரத்தைக் கண்டேமுடிதல்" என்று முன்னர் செய்யுளில்விதித்ததின் தோனிப்பையுந் தாற்பரிப்பையும் இங்குங்காண்க.

"ஈ போதுப்பதமேலுடம்பட்டேனெதிர்மறுத்தென்கனியேவிசேடகித்திட்டதியாதுமவ்வாறதனில் இனிதே

யமையெதன்மேலும்விசேடகித்தேற்றலுண்டே'' என்பது மகாதத்துவசூத்திரம். சுத்தமுந்தன்மையுமாய்வருஞ் சுயம்பிதநையாயிதங்களும், சங்கேதமும் வியோகமுமாய்வருஞ் சம்பாவிதநையாயிதங்களும் ஆகிய இருவகையுள் எத்திறத்தனுமானமுமுன்னர்செய்யுளில் உரைத்தவாறுமுடிய, அவ்விருவகை நையாயிதங்களும்மகாதத்துவசூத்திரமொன்றில் ஒடுங்கி முடியுமென்றறிக.

''நியாயநடையினுக்காதரமாய் உலவுமிலக்கணமே தெளியுங்கவல'' என்றுரைத்ததின் தோனிப்பையுங் கண்டுகொள்க க-ம். செய்யுட்கீழ்க்காண்க.

க. வியோகநையாயிதத்தைச் சங்கேதநையாயிதமாய்ப்பெயர்த்துக்கொணரும் விதம்.

(ருஉ-ம். செய்யுளின்கீழ் எடுத்துரைத்திருக்கும் உதாகரணங்கவளப்பார்.)

பூர்வசாதனமாகிய வியோகசாதனத்தைச் சங்கேததாட்டாந்தமாக்கும் வகை.

வியோகம். இதுமாரிகாலம் அல்லது கோடைகாலம்.

சங்கேதம். இதுமாரிகாலமன்றேனிற் கோடைகாலமாம்.

இப்படி வியோகநையாயிதவிதியைச்சாரவுஞ் சங்கேதநையாயிதவிதிக்கேற்பவும் வியோகசாதனத்தைச் சங்கேதசாதனமாக்கினதன்மேல்,

''இது மாரிகாலமன்றேனிற் கோடைகாலமாம்.
இதுமாரிகாலமன்று ஆகவே.
இதுகோடைகாலமாம்'' என்று வியோகநையாயித்தைச் சங்கேதநையாயிதமாய் முடித்துக்கொள்க.

''எய்து சுயம்பிதங்களுறுஞ்சிலமறுத்தாலெஞ்சியவுடம்பட்டிடும்'' என்பது வியோகநையாயிதவிதி.

''உரையேதினுக்கு உடம்படிற்காரியஞ் சாத்தியமாம்'' என்பது நிரணிவலச்சங்கேதநையாயிதவிதி.

''வருகாரியத்தை மறுத்திடினேதும் மறுத்திடலாம்'' என்பது மறுதலச்சங்கேதநையாயிதவிதி.

இவ்விதிகள் இகந்துபடாமல் வியோக தாட்டாந்தத்தைச் சங்கேத தாட்டாந்தமாக்கிக்கொள்க.

உ. சங்கரசங்கேதத்தைச் சங்கேதநையாயிதமாய்ப்பெயர்த்துக்கொணரும்விதம்.

கூகூ-ம். செய்யுளின்கீழ் எடுத்துரைத்திருக்கும்உதாக

ரணங்களையும் "சங்கரசங்கேதமோவ்வொன்றையும் இரண்டு அல்லது பலசங்கேதநையாயிதங்களாக விரித்துணர்த்தலாம்" என்றதன்கீழ்க்காட்டிய உதாகரணங்களையும் வியாக்கியானத்தையுங்கண்டுகொள்க.

ரு. சங்கேதநையாயிதத்தைச் சுயம்பிதநையாயிதமாய்ப் பெயர்த்துக்கோணரும் விதம்.

சங்கேததாட்டாந்தமோவ்வொன்றவணயுஞ் சாமானியான்வயசுயம்பிததாட்டாந்தமாகப் பெயர்க்கும்படி சங்கேததாட்டாந்தத்துவருஞ் சுயம்பிததாட்டாந்தமிரண்டனுள் ஏதுவாய்நின்ற தாட்டாந்தத்தை விசேடியபாதமாயும், காரியமாய்நின்ற தாட்டாந்தத்தை விசேடகபாதமாயுங்கொள்க. உதாகரணமாய், மழைபெய்யுமேல் நாடுசெழிக்கும்" என்னுஞ் சங்கேததாட்டாந்தம் "மழைபெய்வதானது நாடுசெழிப்பதானது என்னுஞ்சுயம்பிததாட்டாந்தத்திற்கு ஒக்கும். இனி சங்கேதநையாயிதத்தின் உத்தரசாதனமாய் மழைபெய்யும் எனவரின், அது தற்காரியம் மழைபெய்வதானது" என்பதற்கொக்கும். பின்வண, சாத்தியம் "தற்காரியம் நாடுசெழிப்பதானது" எனக் காராடா என்னுந்துறையான்முடியும்.

சாத்தன் சுரமாயிருக்கின், நோயுடையன்;
சாத்தன் சுரமாயிருக்கின்றனன்; ஆகவே
சாத்தன் நோயுடையன் என்னும் நிரனிஷலச்சங்கேதநையாயிதம்,—

சாத்தன் சுரமாயிருப்பதானது, அவன் நோயுடையனனது; தற்காரியம் சாத்தன் சுரமாயிருப்பதானது; ஆகவே
தற்காரியஞ்சாத்தன் நோயுடையனனது" என்னுஞ் சுயம்பிதநையாயிதத்துக்கொக்கும்.

மறுதலைச்சங்கேதநையாயிதத்தையும், இவ்வாறே விதிவழுவாது சுயம்பிதமாக்கிக்கொள்க; உதாகரணமாய்;
இது மாரிகாலமன்றெனிற் கோடைகாலமாம்;
இதுகோடைகாலமல்ல, ஆகவே;
இதுமாரிகாலமன்றல்ல" என்னும் மறுதலைச்சங்கேதநையாயிதம்,—
இதுமாரிகாலமன்றுவது கோடைகாலமாவது,
தற்காரியம் இதுகோடைகாலமல்லவானது; ஆகவே

தற்காரியம் இதுமாரிகாலமன்றல்லவாவது'' என்னுஞ்சுயம்பிதநையாயிதத்துக்கோக்கும்,

நியாயிக்குமிடத்து, இங்ஙனங்காட்டியவாறு சம்பாவிதநையாயிதங்களைச் சுயம்பிதநையாயிதங்களாக்கியே சாதனைசெய்யவேண்டியது, என்றோநியதியல்ல, அது விழுமமுமல்ல. எத்துறையான்வரும் நியாயங்களையும் மகாதத்துவசூத்திரத்தால் முடிக்கவும் பயின்றிருக்கவேண்டியது என்பதாம்.

இதுகாறும், மானதக்காட்சியெனுங் கரணத்தையும் அதன்சார்பில்வரும் பதங்களையும், யூகமெனுங்கரணத்தையும் அதன்சார்பில்வருந் தாட்டாந்தங்களாகிய சாமானியான்வயம், சாமானியவியதிரேகம், விசேடான்வயம், விசேடவியதிரேகம் என்பவற்றையும், யுத்தியெனுங்கரணத்தையும் அதன்சார்பில்விளங்கும் நியாயநைபாயிதங்களாகிய சுத்தசுயம்பிதம், தன்மைச்சுயம்பிதம், சங்கேதம், வியோகம், சங்கரசங்கேதம் என்பவற்றையும் அவற்றின் இலக்கணங்களையும், எடுத்து இயன்றவாறுவிளக்கினம்.

இம்முப்பத்துநான்கு செய்யுட்களிலும் உரைத்திருக்கும் இலக்கணங்களே நியாய இலக்கணமெனக்கொள்க.

௩௫. மேவிருசாதனத்தொன்றுதொக்கொன்றுவிரிந்
துநிற்க
வாவினற்சாத்தியநையாயிதத்தொகையான்மருவும்
ஓவலில்லாதுதொகுசாதனத்தையவாவினன்றித்
தாவலின்றுகுநியாயத்தின்சித்திதகைபெறவே.

இ--யுள், மேலையுரைத்த இலக்கணவிதிகளுக்கமைந்துவரும்நையாயிதவிரிமுறையாய் உலகிலே மாந்தர் வாதிப்பதும் புகல்வதும் அருகிவருமாதலாலும், பெரும்பான்மைபற்றி மாந்தர்நையாயிதங்களை இயற்கையாய்ச்சுருக்கியுந் தொகுத்தும் பேசுகின்றனராதலாலும், அந்நையாயிதச்சுருக்கங்களை முறையேஎடுத்து (நையாயிதவிதிகளால் அளந்துணர்த்துவான், றேடங்கி) நையாயிதத்தொகைஇன்னதென்

றும் அதன்வலி இத்திறத்தது என்றும், உணர்த்துகின்றது.

இ-ள். மேவிருசாதனத்து-(நியாயவலிக்கு) உரிய இரண்டு சாதனங்களுள்; ஒன்றுதோக்கோன்றுவிரிந்துநிற்க வாவினற்சாத்தியம்-ஒரு சாதனந்தோக்கும் ஒருசாதனம்விரிந்தும் நிற்கச் சாத்தியம் பெயர்ந்தால்; நையாயிதத்தோகையான் மருவும்-(அந்நியாயம்) நையாயிதத்தோகை எனும்பெயராற்றேன்றும்; நியாயத்தின் சித்தி--(ஆயினும்) நியாயவலியானது; ஒவலில்லாது தொகுசாதனத்தையவாவினன்றித்தாவலின்றுகுந்தகைபெற-தோக்குநின்றசாதனத்தை ஒழியாது அவாவினுல் முடியுமேயன்றி மற்றைப்படி இலக்கணம் மருவிமுடியாது. என்றவாறு.

உலகிலே மாந்தர் பெரும்பான்மையும் நையாயிதத்தொகையாகவே நியாயிக்கின்றனர். பூர்வசாதனத்தையுஞ் சாத்தியத்தையும் உரைத்து உத்தரசாதனத்தையுரையாது விடுவதும் உண்டு; உதாகரணமாய்—

க. நல்லோரேவருஞ் சாந்தத்தை நயக்கின்றனர்,

ஆதலால், இம்மந்திரி சாந்தத்தைநயக்கின்றனன்.

உத்தரசாதனத்தையுஞ் சாத்தியத்தையும் உரைத்துப் பூர்வசாதனத்தை உரையாதுவிடுவதும் உண்டு; உதாகரணமாய்,—

உ. இம்மந்திரி ஒருநல்லவன்; ஆதலால்,

இம்மந்திரி சாந்தத்தை நயக்கின்றனன்; (அல்லது) இம்மந்திரி ஒருநல்லவனுனபடியாற் சாந்தத்தைநயக்கின்றனன்.

சாத்தியத்தைப் பட்சமாய்நிறுத்திப் பூர்வசாதனத்தைத்திட்டாந்தமாய்ப் பின்னிறுத்துவதுமுண்டு;

உதாகரணமாய்,—

ங. இம்மந்திரி சாந்தத்தை நயக்கின்றனன்,

என்னையெனின் நல்லோரேவருஞ் சாந்தத்தைநயக்

கின்றனர். சாத்தியத்தைப் பட்சமாய்நிறுத்தி உத்தர சாதனத்தை ஏதுவாய்ப் பின்னிறுத்துவதுமுண்டு;

உதாகரணமாய்,—

ச. இம்மந்திரி சாந்தத்தை நயக்கின்றனன்;
என்னையெனின், இவனொரு நல்லவன்.

இவ்வாறு மாந்தர் நியாயிக்கினும், தொக்கு நின்றசா தனத்தை அவாவியல்லாமல் அவர் சொன்னநியாயம் சித்திகொள்ளாது; உதாகரணமாய்,—

நல்லோரேவருஞ் சாந்தத்தைநயக்கின்றனர்;ஆதலால் "இம்மந்திரிசாந்தத்தைநயக்கின்றனன்" என்று நீா முடித்த நியாயம் எவ்வாறென்று பிரதிவாதி வினவிய இடத்து, "இம்மந்திரி ஒருநல்லவன்" எனத் தொக்குநி ன்ற சாதனத்தை விரித்து.

நல்லோரேவருஞ் சாந்தத்தை நயக்கின்றனர்;
இம்மந்திரி ஒருநல்லவன்; ஆதலால்

இம்மந்திரி சாந்தத்தைநயக்கின்றனன்; என்று நை யாயிதமாக்கி முடித்தே நியாயவலியைக் காட்டவேண் டியது; ஆதலாற்றான் "ஒவலில்லாது தொகுசாதனத் தையவாவினன்றித் தாவலின்றுகு நியாத்தின் சித்தித கைபெறவே" எனக்கூறியது.

நையாயிதத்தொகைகள் சுயம்பிதமாயன்றிச் சம்பா விதமாயும் விரிக்கப்படும்; உதாகரணமாய்,—

"மழைபெய்கின்றது; ஆதலால் நாடுசெழிக்கும்,"

இஃநையாயிதத்தொகையின் பூர்வசாதனம் "மழை பெய்யுமேல் நாடுசெழிக்கும்" என்பதாம்; அதனைப் பூ ர்வசாதனமாய் வைத்துச் சம்பாவிதநையாயிதம்பால் வருஞ் சங்கேதநையாயிதத்தை முடித்துக்கொள்க. சம் பாவிதநையாயிதங்களையெல்லாஞ் சுயம்பிதநையாயி தங்களாகப் பெயர்க்கலாமேயெனினும், வேண்டியவி டத்துக் காரியத்துக்கேற்ப நியாயவிதிகளை முரணமல் நையாயிதத்தொகைகளைச் சுயம்பிதமாயுஞ் சம்பாவி தமாயும் விரித்துக்கொள்க.

௬௬. பெற்றேமுதலாநிலையினிலையாயிதங்கடொடை
உற்றேறுரேவொன்றதன்சாத்தியமற்றதன்சாதனமாய்
அற்றேமுடியினந்தத்தினிற்சாத்தியமன்னதனைச்
சுற்றுநேறிசுருக்கித்தொடையப்பெயர்சொல்லுகவே.

இ--யுள், நையாயிதச்சுருக்கங்களுள் ஒன்ருய தோடையம் என்பதின்னதென்று விளக்குகின்றது.

இ—ள். பெற்றேமுதலாநிலையினினையாயி தங்கடோடை-முதலாம் நிலையிலுள்ளபலநையாயிதங்கள் ஒன்றன்பின்ஞென்று தோடையாகநின்று; உற்றேறேவொன்றதன் சாத்தியம்மற்றதன் சாதனமாய்—பற்றியேறும்ஒவ்வொரு நையாயிதத்தினதும் சாத்தியம் அதன்கீழயல் நையாயிதத்தின் சாதனமாகி; அற்றேமுடியினந்தத்தினிற்சாத்தியம்--கடையான (முக்கிய) சாத்தியம் அறுதியுற்றுமுடியுமேயேனின்; அன்னதனை--அந்தநையாயிதத்தோடையை; சுற்றுநேறிசுருக்கி-சுற்றிவிரியாதபடிசுருக்கி;தோடைப்பெயர் சோல்லுக—(அந்த நையாயிதத்தோடைக்கு) தோடையம் என்னும்பெயர் தருக. என்றவாறு

இங்ஙனம் உரைத்தவாறு முதலாம் நிலையிலுள்ள நையாயிதங்கள் திரண்டு தோடையமாகச் சிறுபான்மை வழங்குவனவுமுண்டு.

க. நையாயிதத்தொடைக்கு உதாகரணம்—

புட்கள் சிறையுடையன;
பருந்துகள் புட்கள்; ஆகவே
பருந்துகள் சிறையுடையன.

உ சிறையுடையன ஆகாயத்தியங்கும்;
பருந்துகள் சிறையுடையன; ஆகவே
பருந்துகள் ஆகாயத்தியங்கும்.

இவ்வாறு இரண்டன்றி, மூன்றும் பலவுந் தொடர்ந்துவருதலுமாம். இவ்வாறுவரும் நையாயிதத்தொடைகளைச் சுருக்கித் தொடையமாக்கும் விதத்தை மேலைச்சேய்யுளிற்கூறுதும்; கண்டுகோள்க. இங்ஙனம் எடுத்துரைத்த உதாகரணத்தில் முதலாம் நையாயிதத்தின் சாத்தியமான "பருந்துகள்சிறையுடையன" என்பது

இரண்டாம் நையாயிகத்தின் உத்தரசாதனமாய் வரப் பின்னர் "பருந்துகள்ஆகாயத்தியங்கும்" என்று அந்தத் தினிற் சாத்தியம்முடிந்தமை கண்டுகொள்க.

கூஎ. சொல்லுமுற்றுட்டாந்தரத்தினின்மேவுவிசேட கங்கீழ்ச்
செல்லுநற்றுட்டாந்தரத்தின்விசேடியமாகியிவ்வா
றெல்லுங்கடையயற்சாதனத்துற்றவிசேடகம்பின்
வெல்லுங்கடைச்சாத்தியத்துவிசேடியமேனிற்பதே.

இ—யள், தோடையம் என்பது வருமாறு விளக்குகின்றது.

இ--ள். சொல்லுமுற்றுட்டாந்தரத்தினின் மேவுவிசேடகம்--சொல்லியமுதற்றுட்டாந்த த்தினிற்கும் விசேடகமானது; கீழ்ச்செல்லு ந ற்றுட்டாந்தரத்தின் விசேடியமாகி—(அதன்) கீழயலில் வருந்தாட்டாந்தத்தினது விசேடிய மாகி; இவ்வாறெல்லுங்கடையயற் சாதனத் துற்றவிசேடகம்-இப்படி இதரேதரமாய் மரு விவருகின்ற ஈற்றயற்சாதனத்தின் விசேடக மானதோ; பின்-திரும்ப; வெல்லுங்கடைச்சா த்தியத்து விசேடியமேனிற்பது-- (முதற்றுட் டாந்தத்தின் விசேடியத்தைத் தனக்குவிசேடி யமாய்) கருஷித்துக்கொண்ட கடைச்சாத்திய த்தினது விசேடியத்துடன் முடிந்து நிற்கும்; (எனவே, முதலாஞ்சாதனத்தின்விசேடியமே கடைச்சாத்தியத்தினதும்விசேடியமென்றுமு டிந்தது;) என்றவாறு.

தோடையமானது சுயம்பிததோடையம், சம்பாவி ததோடையம், என்றிருவகையான் வருதலுமாம்.

சுயம்பிததோடையத்திற்கு உதாகரணம்,—

பருந்துகள் புட்கள்;
புட்கள் சிறையுடையன;
சிறையுடையன ஆகாயத்தியங்கும்; ஆகவே

பருந்துகள் ஆகாயத்தியங்கும்; (௬௯-ம். செய்யுளின்கீழ் நையாயிதத் தொடைக்கு உரைத்த உதாகரணத் திற்பார்.)

ஒருதொடையத்திலே முதல் கடையொழிய நின்ற இடைச்சாதனங்கள் எத்தனையோ அத்தனை மத்திய பதங்கள் அத்தொடையத்திலே உண்டென்றும்; ஆகவே, அத்தொடையத்தை அத்தனை நையாயிதங்களாக விரிக்கலாம் என்றும்; அவ்வாறு விரித்துரைக்கும் நையாயிதங்களின் முதல் நையாயிதத்தின் பூர்வசாதனமானது தொடையத்தின் இரண்டாம்சாதனம் என்றும்; உத்தரசாதனமானது தொடையத்தின் முதலாஞ் சாதனம் என்றும்; தொடையத்தை நையாயிதங்களாய் விரிக்குங்கால் (௬௯-ம். செய்யுளில்உரைத்தவாறே) ஒவ்வொன்றதன் சாத்தியமற்றதன் உத்தரசாதனமாய் வரும் என்றும்; மேலே எடுத்துரைத்த உதாகரணத்திலும் அன்னபிற உதாகரணங்களிலுங் கண்டுகொள்க; முதலாம்நிலையில் வரும் உத்தமதுறை நான்கினுக்குமுரிய இலக்கணவிதிகளையும் அமைத்தளந்துகொள்க.

சம்பாவிததொடையத்துக்கு உதாசரணம்,—

மழைபெய்யுமேல் நாடுசெழிக்கும்;
நாடுசெழித்தால் தானியனமுதலியனமலியும்;
தானியனமுதலியனமலிந்தால், எவர்க்கும் உண்டிகிடைக்கும்;
மழையோபெய்கின்றது; ஆகவே
எவர்க்கும் உண்டிகிடைக்கும்; இதுநிரனிலைச்சம்பாவிததொடையம்;
மழைபெய்யுமெனில் நாடுசெழிக்கும்;
நாடுசெழிக்குமெனின்அகமுதலியமலியும்;
அகமுதலியமலிந்தால் எவர்க்குமுண்டிகிடைக்கவாம்;
ஆனால், எவர்க்கும்உண்டிகிடைக்கவாகின்றிலது;
ஆகவே, மழைபெய்திலது; இதுமறுதலைச்சம்பாவிததொடையம்; சங்கேதநையாயிதத் தொடைமாத்திரமே சம்பாவிததொடையமாய்வரும் என்றறிந்துகொள்க. மேலேஉதாகரித்திருக்கும் நிரனிலைச்சம்பாவிததொடையத்தைச் சங்கேதநையாயிதங்களாய் விரித்துரைக்கின்,—

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

"மழைபெய்யுமேல் நாடுசெழிக்கும்;
மழைபெய்கின்றது; ஆகவே
நாடுசெழிக்கும்.
நாடுசெழித்தால் தானியமுதலியனமலியும்;
நாடுசெழிக்கின்றது; ஆகவே
தானியமுதலியன மலியும்.
தானியமுதலியனமலிந்தால் எவர்க்கும் உண்டிகிடைக்கவாம்;
தானியமுதலியன மலியும்; ஆகவே
எவர்க்கும் உண்டிகிடைக்கவாம்"—இவ்வாறேமறுதலைச்சம்பாவித தொடையத்தையும் விரித்தளந்துகொள்க.

௩அ. தேர்கின்றபடசமதன்பான்மருவுகதம்விடயம்
சேரும்பொருள்களொன்றன்பினொன்றாய்ந்து தெளிந்து
பின்னர்
சாருமினஞ்சாதிகட்கவற்றன்முறையேஅனுமை
நேரினியாயமனுபவவேதனநீர்மைகொள்ளே.

இ-யுள், வேதனம் இன்னதென்றும், வேதனுமானம் இன்னதென்றும், விளக்குகின்றது.

இ-ள். தேர்கின்ற பட்சமதன்பால்மருவு--நாம் எடுத்துத்தேரும்பட்சத்துடனே மருவிநிற்கின்ற; கதம்விடயஞ்சேரும்பொருள்கள்--கதம்விடயம் எனவரும்பொருள்களை; ஒன்றன்பின்னொன்றாய்ந்து—ஒன்றின் பின்னொன்றாய் வேண்டியளவு ஆராய்ந்து; தெளிந்து-அப்பொருள்கட்கும் எடுத்துக்கொண்ட பட்சத்துக்குமுள்ள சம்பந்தசார்புகளை ஐயந்திரிபறத்தெளிதலாகிய வேதனஞ்செய்து; பின்னர்--அப்படியதார்த்தவேதனஞ் செய்தபின்பு; சாருமினஞ்சாதிகட்கு-அவ்வேதனஞ் செய்யப்பட்டபொருள்கள் சார்ந்துநிற்கும் இனத்தையுஞ் சாதி

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

ஞல் வடிவேசுருக்கி வழங்கலுமாகும்—வேறே பலதிறத்திஞலும் நியாயத்தை வடிவிலே சுருக்கி வழங்குவதுமுண்டு; வகுத்தவற்றின டையால் வகுத்துரையாதவும் உய்த்துணர்நாவரவே—(இன்னதின்னுழி இன்னணமருவுமெனச்சிறப்பித்தும் விதந்தும் உரைக்கப்புகின் முடிவிலவாதவின் ஒருவாறு போதுவிதிகளுள் அமைத்துமுடிக்கப்பெற்றுக்கிடந்தவைகளையெல்லாம்) உரைத்த இலக்கணங்கள்வழியாய்நாவிற்புலப்பட உய்த்துணர்ந்துகோள், (அவைகளையெல்லாம் நூலுள்விரிக்கப்புகின் வரம்பின்றிப்பெருகும்; "நியாயநடையினுக்காதரமாய் உலவுமிலக்கணமேதெளியுங்கலைவித்தையென்ப தலமின்றுபுந்தியனுமிக்கவே விதியாய்ந்திடும்" என்றதன் தோனிப்பையுந் தெளிந்தறிக.) என்றவாறு.

சாதனங்களைச் சித்தாந்தஞ் செய்து பின்சாத்தியத்தையனுமித்தற்கு உதாகரணம்.—

மனேசாந்தியும் புனிதமுமில்லார் நல்லொழுக்கத்தை நயவார்; ஆகவே.

மதுவருந்துவோர் மனேசாந்தியும் புனிதமுமில்லார்;

பூர்வ.—மதுவருந்துவோர் நல்லொழுக்கத்தைநயவார்.–

மதுவெறிமயக்கிலழுந்துவோர் மதுவருந்துவோர்;

கொற்றன் மதுவெறிமயக்கிலழுந்துவோன்; ஆகவே

உத்தர.—கொற்றன் மதுவருந்துவோன்; ஆகவே

சாத்தியம்.—கொற்றன் நல்லொழுக்கத்தை நயவான்.

இந்நியாயத்தை மேலுஞ்சுருக்கி,—

கொற்றன்மதுவெறிமயக்கில் அழுந்துவோனும்; ஆகவே மதுவருந்துவோனும்; ஆகவே மனேசாந்தியும் புனிதமுமில்லாதோனுமாதலால், அவன் நல்லொழுக்கத்தைநயவான்; என்றுரைப்பதுமுண்டு.

"சோற்றவற்றியலான் மற்றையபிறவுந் தெற்றெனவுணர்தறெள்ளியோர்கடனே."

தந்தையொடுதாயர்தம்மைந்தரினருமை
சிந்தையுணர்குவராற்சின்மழலை—தந்த
பொருள்குறியாரேனுநனிபோற்றிக்கலவி
அருள்புரிவாரின்புலவராம்.

# விதர்க்கண சாதவனமுறை.

நியாயஇலக்கணம்என்றநூலிலே பலபரியாயச்சொற்களுஞ் சிலவிதிகளுஞ் சூத்திரமும் வெளிப்படையான சில நையாயித உதாகரணங்களுமேயன்றித் தர்க்கமுறையாதொன்றுமில்லையேயென்று சிலர் குற்றங் கூறுவர்போலெனினும், தர்க்கமுறைக்கும் இந்நூலுட் சொல்லிய விதிகளேயமையும், என்றறிக. எத்திறஞானநியாயமும் அவ்விதிகளிலேயே ஒடுங்கிமுடியும். சொல்லிலக்கண விதிகளை ஒருவன் நன்குகற்றும் இலக்கியசாதனை செய்கின்றிலனேல்; அவ்விதிகள் பெரும்பயன் படாவாறுபோல; நியாயஇலக்கணவிதிகளையும் ஒருவன் கற்றுணர்ந்தும் சுவார்த்தானுமானம் பரார்த்தானுமானம் தர்க்கம் எனு முத்துறைகளாய்ப் பிரியும் நியாயசாதனை செய்கின்றிலனேல் இவ்விதிகளும் பெரும்பயன்படாவாம். ஆகையால், நியாயசாதனையே முக்கியமென்றறிக. சிலசிலநியாயத்தொடைகளைஎடுத்துஅன்னுவயஞ் செய்து அவைகளை நியாயஇலக்கணவிதிகளையொட்டி நையாயிதங்களாகப் பெயர்த்துச் சாதனைசெய்யவேண்டியது. தமிழிலே நியாயநடை சிறந்த நூல்கள் சிவஞானசித்தி சுபட்சபரபட்சங்கள், சிவஞானபோதம் சிவப்பிரகாசம் தத்துவப்பிரகாசம் முதலியன; நீலகேசி குண்டலகேசி சூத்திரபிடகம் சித்தாந்தத்தொகை முதலியநூல்களும் நியாயஞ்செறிந்த நூல்களென்பர். வித்தையின்றியகலை பெரும்பயன்படாதாம்; கலையின்றியவித்தையோ வழுவுச்கிடனுந்தெளிவின்றியதுமாம். ஆதலால், கலையோடு நிகழ்ந்து வரும் வித்தை சாதனையே பெரும்பயனுடையது. நியாயங்களானவை பலவடிவாய்ச் சுருங்கிநிற்குமிடத்து, நியாய இலக்கணத்தெடுத்து மொழிந்த சூத்திரவிதிகளைச் சுலபமாய் அந்நியாயங்களிலமைத்துமுடித்தலேலாது. இப்பொழுது எந்தவகையான நியாயத்தையும் அன்னுவ

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

யஞ்செய்து பின்னர் நியாயவிதிகளான் முடித்தற்குப யோகமான ஒரு பொதுவிதி சொல்லுதும்.

க. நியாயமெவ்வளவு பெரிய தொடையாயிருக்கினும், அந்நியாயத்தின் முடிபிற் சாதித்த கடைச்சாத்தியம் இஃதென்று தெளிந்துகொள்.

உ. அச்சாத்தியத்தை முடித்துநின்ற சாதனங்களிவையெனக் கண்டு, சாதனசாத்தியங்களால் அங்ஙனம் முடியும் நையாயிதத்தை நியாய இலக்கணவிதிகளாற் பரீட்சித்து வழுவுண்டோ அன்றோவெனப்பார்.

ங. மேலக்கண்ட சாதனங்கள் சித்தாந்தம்வேண்டியவைகளோ அல்லது தெள்ளிய சாதனங்களோ எனத்தெளிந்து, தத்துவசாதனமல்லவேல் அவை ஒவ்வொன்றையுஞ் சாத்தியமாய்க்கருதி, அச்சாத்தியத்தை முடித்துநின்ற சாதனங்களைக்கண்டு, அங்ஙனம் முடியும் நையாயிதத்தையும் முன்னர்போற் பரீட்சித்து, இவ்வாறே நியாயத்தொடையை விரித்து அன்னுவயஞ்செய்து, நியாயத்தொடைமுற்றும் ஈற்றிலே தத்துவசாதனத்திலே ஆதாரமாய் நிற்கின்றதோ அன்றோஎன்றறிக.

நியாயத்தை அன்னுவயஞ்செய்தற்கு உதாகரணம்;-

பிரபஞ்ச நடையைப் பார்க்குமிடத்து, அதிலுள்ள பொருள்களனைத்துந் தோன்றி நின்று அழிகின்றன; இப்படி, காலாந்தரத்திலே விகாரமுற்று வருவதியாதுங்காரியமெனப்படும்; பிரபஞ்சமானது தோற்றம் நிற்றல் ஈறு இவை இசைதலாலே நலங்கிளர் தோற்றநாசந்தனக்கிலாநாதன்வேண்டும்,-என்னும் இந்நியாயத் தொடையை அன்னுவயஞ் செயின்,—

பிரபஞ்சமென்பது தோற்றம் நாசந் தனக்கிலாநாதன்வேண்டும் என்பதே கடைச்சாத்தியம். இதனைச் சாதித்த சாதனங்களேவையெனின்,—

தோற்றம் நிற்றல் ஈறுடைய பிரபஞ்சம் தோற்றம் நாசந் தனக்கிலாநாதன்வேண்டும், [வாம்.

பிரபஞ்சமானதுதோற்றம்நிற்றல்ஈறுடைய்து, என்ப

இனி, பூர்வசாதனத்தை ஒருசாத்தியமாய்க் கொண்டு அதனைச் சாதித்தசாதனங்களேவையெனின்;

அனந்தசூட்சகாரியமெதுவுந் தோற்றம்நாசம் தனக்கிலாநாதன்வேண்டும்.

தோற்றம்நிற்றல ஈறுடையபிரபஞ்சம் அனந்தசூட்சுகாரியம்; என்பவாம்.

இனி, முன்னர்வருவித்த சாதனங்களுள் உத்தரசாதனத்தையோ, வேதனத்தினுலே "பிரபஞ்சமானதுதோற்றம்நிற்றல் ஈறுடையது" என்று அறுதியிடலாம்; இங்ஙனமே, பின்னர்வருவித்தசாதனங்களுட் பூர்வசாதனத்தையும் அறுதியிடலாம்;—

இப்படி நியாயான்னுவயஞ்செய்யுங்கால் "சங்கற்பமுத்திரைதன்னிலே விளங்குங்காரியமெதுவுஞ் சைதன்னிய காரணத்தைதவேண்டும்" என்றும், "காரியங்கள் தமக்கியைந்த காரணப்பிரமாணமாய் நிற்கும்" என்றும் தத்துவசாதனங்கள் வருவிக்கலாம் ஒருநியாயத்தொடையையே பலவாறும் அன்னுவயசாதனைசெய்யலாம்.

இரேகாகணிதம் பாடீகணிதம் வீசகணிதம் முதலிய நூல்களிலேவரும் நியாயத்தொடைகளையெடுத்து அன்னுவயஞ்செய்தும், மேலும் நியாயங்களை நையாயிதங்களாக்கி நையாயிதங்களை இலக்கணமமையத்தாட்டாந்தங்களாக்கியும், தாட்டாந்தங்களைப்பதங்களாக்கியும், அன்னுவயஞ்செய்தும்பயிலுக.

சுருதியாகிய இலக்கணங்களையுணர்ந்தும், யுத்தி அனுபவ உத்தேசபரிட்சைகள் இன்றிப் பெரும்பயன் பிறவாது.

---

## ஆபாசவிளக்கம்.

க. வருமேநியாயத்திலாபாசமானதனுல்வலியே
தருமாறுநையாயிதம்பலபோலிதமைத்தெளிந்து
மருவாதொழித்தறதுநேர்விதிகள்வளந்தரவே
உரையாடுதன்முடியாதெனும்வல்லனவுய்த்துணரே.

இச்செய்யுளின்பொருள். வருமேநியாயத்திலாபாசம்-நியாயங்களிலே போலியாகிய ஆபாசம் வருதலுண்டு. ஆனதனுல் வலியேதரு

மாறு ஞையாயிதம்பலபோலிதமைத்தேளிந்து மருவாதோழித்தறகும்-ஆனபடியால், ஞையாயிதங்கள் சித்திதரும்படி, பலவயையானஆபாசங்களையுந்தேளிந்து (அவைஞையாயிதங்களிலே) மருவாதபடி நீக்குதல் தகுமாம். நேர்விதிகள் வளந்தரவே யுரையாடுதன் முடியாதேனும் வல்லனவுய்த்துணர் — உரிய விதிகளைப் போருட்சேழுமைபிறக்க விளம்புதல் முடியாதாயினும், வல்லவிதிகளை யுத்தியைச்சேலுத்தி அறிந்துகோள் எ—று.

*உ. உணர்த்துபபோலிகோள்பட்சத்தறுதியுடையதுநம்*
*புணர்ப்புக்கிசைவதும்போற்புறந்தோன்றிப்பொருளள*
*வில்*
*இணக்கில்அசித்திநியாயமுன்சாத்தியப்போலியன்றித்*
*தணப்பிலசாதனப்போலிசம்பந்தமுற்போலியதே.*

இ--ள். உணர்த்துபபோலிகோள் பட்சத்தறுதியுடையது நம்புணர்ப்புக்கிசைவதும்போற்புறந்தோன்றிப் போருளளவில்இணக்கில்அசித்திநியாயம்-எடுத்துக்கோண்ட பட்சத்துக்கு அறுதியானதும்நமதுபுந்தியின்புணர்ப்புக்கு இனிதானதும் போலே வேளிக்குத் தோன்றி காரியத்தளவிலேயோ ஒவ்வாதசித்தியில்லாத நியாயத்தைப் போலியாகிய ஆபாசம் என்று சோல்வர். சாத்தியப்போலியன்றித் தணப்பில சாதனப்போலி சம்பந்தமுற்போலியது--ஆபாசமானது சாத்தியாபாசம் சாதனுபாசம் சம்பந்தாபாசம் எனவருவதாம். எ— று.

*முன், தணப்பில என்பன செய்யுளோக்கிய அடைகள்.*

கூ. போலியிற்சாத்யநியாயித்தற்சூத்ரவிதிகண்முரணுலுறுசாத்தியஞ்சாதனந்தம்மில்விளைவதின்றாய்
ஏலுநியாயித்தலிலேயுறையும்வழுவதென்ப
மேலுரைசாத்தியப்போலிவிரவிடும்பலவகையே.

இ—ள். போலியிற்சாத்ய நியாயித்தற்சூத்ர விதிகண்முரணுலுறு சாத்தியஞ் சாதனந்தம்மில்விளைவதின்றாயேலுநியாயித்தலிலேயுறையும்வழுவதென்ப-சாத்தியாபாசம் என்பது நியாயித்தற்கு உரைத்திருக்கும் விதிகளை முரணுவதாய் சாத்தியமானது சாதனங்களிலே விளைதலில்லதாய், நியாயித்தல்மாத்திரத்திலே உறையும்வழு என்பர். மேலுரைசாத்தியப்போலி விரவிடும் பலவகையே-இங்ஙனம் உரைத்த சாத்தியாபாசம் பலவகைசார்ந்துவரும். எ-று.

ச. வகையீந்திடாமத்தியபதங்கள்ளநடையிரண்டு
பகையீர்வெதிரெகசாதனமுப்பதமேற்பதங்கள்
தகைதீர்வெதிரெகசாதனத்தன்வயசாத்யமற்றும்
அகைவார்சிலேடைமத்யம்பிறசாத்தியவாபாசமே.

இ-ள். சாத்தியாபாசவகையாவன-ஈந்திடாமத்தியபதம்வரல், பூர்வபதக்கள்ளநடை, உத்தரபதக்களநடை, இரண்டுவியதிரேகசாதனம்வரல், முப்பதமேற்பதம்வரல், வியதிரேகசாதனங்கொண்டு அன்னுவயசாத்தியம்முடித்தல், சிலேடைமத்தியபதம்வரல்; பிறவுமாம். எ--று.

செய்யுளைப்படித்து உரையை ஒட்டிக்கொள்க.

ரு. ஆபாசஞ்சாதனமுத்தரசாதனவேதெனினுந்
தாபூர்வசாதனதிட்டாந்தமேனுமிரண்டெனினும்
மேவாவரக்கொளவேலாதபோலிசொல்சாதனத்த
வாவாமெய்ச்சாத்யம்பெயரினும்போலிவழிப்படுமே;—

Digitized by EMORY UNIVERSITY    Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

இ—ள். சிலேடைமத்தியபோலியாவன,- ஒரேதாதிலேயிருந்துபிறக்கும் பெயர்க்கும் வினைக்கும் பண்புக்கும் அர்த்தம் ஒரு நிகர்தானென வைத்துக்கொண்டு சாதனத்திலே பிரயோகஞ்செய்தல்; பதத்தை உலகவழக்கிற் பயிலும் இயற்பொருளிலே ஒருமுறையுஞ்சத்தார்த்தமாத்திரையிலே ஒருமுறையும்பிரயோகித்தல்; (தொடர்பு மேலைச்செய்யுட்களிலும் வரும்.) எ--று.

க0. நடைசாதனங்களிலொன்றைப் பலபொருளே விளக்கும் {ப்பால்
புடைபாய்வினுவிற்புகறன்மொழி தொடையின்புணர்
அடைவேபொருணிலைமாறல் பதங்களியற்பொருளும்
இடைசார்சிறப்புப்பொருளுந்தருதலிவைகருதே.

இ—ள். சாதனமிரண்டிலொன்றைப் பலபொருடரத்தோனிக்கும் ஒருவினுவாகமொழிதல்; ஒருபதமானது தான் நிற்குந்தொடையின்புணர்ச்சிக்கேற்ப முறையே பொருளினது நிலைமாறுதல்; பதங்களானவை இயற்பொருளையுஞ் சிறப்புப்பொருளையுந்தந்துநிற்றல்; இவற்றைக்கருதிக்கொள். எ--று.

கக. கருதுஞ்சமானமுந் துல்லியமுந்தரு காட்சிபற்றி
வரல்செம்பொருளினெடாக்கப்பொருள்வசனத்தொட
ர்பால்
அருதும்பலபொருளன்றிப்பிரிவுகலவையுடன்
மருவுந்துணைப்பொருள் சத்துப்பொருளில்வழங்கிடலே.

இ--ள். சமானம் துல்லியம் என்பவைகளைப்பற்றிச் செம்பொருளும் ஆக்கப் பொருளும் வந்துபயிலுதல்; வசனத்தொடர்பினுலே பத

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472 Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

த்திற்குப்பலபொருள் அருகிப்பயிலுதல்; பதங்கள் பிரிவுப்பொருளிலுங் கலவைப்பொருளிலும் வழங்கிவருதல்; பதம் குணப்பொருளிலேயுஞ் சத்துப்பொருளிலேயும் வழங்கிவருதல். எ—று.

கஉ வழங்குஞ்சிலேடை மத்யப்போலியென்றிவை
சாதனத்தில்
எழும்போலிபேதுதிட்டாந்தமருவியிருவகையில்
விழுந்தேபிரதிஞைவேண்டல்விகாரணமேற்றலென
அழிந்தேயியலுமிங்கேசக்கிரகமமைந்துறுமே.

இ--ள். மேலேயுரைத்தவைகளே, சிலேடைமத்தியப்போலியெனவழங்கும். சாதனப்போலியானது, ஏதுவாபாசம், திட்டாந்தாபாசம் எனச்சார்ந்து உத்தரசாதனத்திலும் பூர்வசாதனத்திலும் வழுவி, பிரதிஞைவேண்டல் விசாரணமேற்றல் எனநடக்கும். பிரதிஞைவேண்டல் என்பதிலே சக்கிரகம்எனும் போலி அமைந்துநடக்கும். எ--று.

கரு. உறுசாதனமது சாத்தியம்போலவுரைதரினும்
நிறுசாத்தியமதிற்சித்தாந்தமாயினுஞ்சாத்தியத்தால்
முறையேசித்தாந்தமுடிதரக்கூடியதாயினுமங்
கறையேபிரதிஞைவேண்டலென்போலியஃதெனவே.

இ—ள். சாதனமானது சாத்தியம்போலே உரைபெற்றுவரினும், சாதனமானது சாத்தியத்தாற்சித்தாந்தம் பெறினும், சாதனமானது சாத்தியத்தினற் சித்தாந்தம் முடிக்கக்கூடியதாயிருப்பினும், அதுவே பிரதிஞைவேண்டலெனும் போலியென்று சொல்லுக. எ--று.

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

கச. வேற்றுவிகாரணமேற்றலென் போலி விரிந்து தொக்கு
ஆற்றிடுசாதனம்பொய்மையதாயெனுமெய்மைபெனு
மாற்றநிலக்குவழுவியதாயெனும்வர்திடல்பின்
போற்றியசக்கிரகஞ்சுழன்றெய்துமபுரிமுதலே.

இ—ள். விகாரணமேற்றலெனும் போலியானது விரிந்தேனினுந்தொக்கேனினும்நிற்குஞ் சாதனமானது பொய்மையாயேனும், மெய்மைநிலைக்கு வழுவாயேனும் வருதல். முன்னருரைத்தசக்கிரகமானது வளைந்து தான்தோன்றற்காதாரமாய்நின்ற முதலையேமருவும். எ—று.

கரு. முதலேயுரைத்தனம்போலிசம்பந்தந்துணிபொருளா
னதையேநிறுத்தலரிதெனக்கண்டறியாவகையோர்
மதமேலொழுக்கலெதிர்வாதிசாதனமாறிநிலை
இதமேகெடன்மறுத்தாட்செபங்கூறியிழித்திடலே.

இ--ள். சம்பந்தாபாசம் இன்னதென்று முன்னமேயுரைத்தோம்;- துணிபொருளாகியபட்சத்தைச்சாதிப்பது அரிதெனக்கண்டு, பிறர் அறியாதபடி பிறிதோருபட்சத்தின்மேல் நியாயத்தைநடத்துதல். பிரதிவாதியானவன் சாதனத்தினது நிலையைமாற்றி அதன் செம்பொருளைமழுக்கியேனும், ஆட்சேபஞ் சொல்லியேனும் அதனையிழிவுபண்ணுதல். எ—று.

கசு. இழித்துநியாயமிவ்வாறுபுரட்டலெலாமுரைதத்
பழித்தலம்போலியின்பாற்படுமேபலவாறுபொய்மை
அழுத்தி மெய்போலக் கிளத்திடும்போலி யணைத்திவணையும்
வழுத்திநியாயஇலக்கணமேற்றிவரைந்தறியே.

இ—ள். மேலேயுரைத்தவாறு இழித்து நியாயத்தைப்புரட்டலெல்லாம முன்னருரைத்

தசமபந்தாபாசத்துள் அடங்கும். பலவிதமாகப்பொய்யை மெய்போற் சாதித்துப்பேசும் ஆபாசமனைத்தையும் நியாய இலக்கணங்களானுரைத்து ஒட்டி அளந்து அறிக. எ—று.

மேலை எடுத்துரைத்தபோலிகளைவிளக்கும் உதாகரணங்களைப் பின்னர் எழுதுவமெனக்கருதி இப்பொழுது எழுதாதொழிந்தனம்.

ஆபாசம் என்பது பொய்நியாயமானது மெய்நியாயமாய்த்தோன்றும்போலி; அது மூவகையாம்; சாத்தியாபாசம், சாதனபாசம், சம்பந்தாபாசம். நையாயிதம் ஒன்றிலே ஆபாசமெய்திடின், அஃது சாத்தியத்திலெனிலும், சாதனங்களிலெனிலும், சாதனசாத்தியங்கட்குள்ள சம்பந்தத்திலெனிலுமே தாவிவரும்; ஆதலால் சாதனசாத்திய சம்பந்தமூன்றனுள் எதிலெனிலும் ஆபாசம் மருவிநிற்கின்றதோ எனப் பார்த்துக் களைந்துகொள்க. ஆரிய நூல்களின்படி, பட்சாபாசம், ஏதுவாபாசம், திருட்டாந்தாபாசம், எனமூன்றும்,—தமிழ்நூல்களின்படி, பக்கப்போலி, ஏதுப்போலி, உவமைப்போலி, எனமூன்றும், ஆபாசம் பிரிந்துவரும்.

---

# அநுபந்தம்.

## அனுபவானுமானம்.

அனுபவானுமானம் என்பது உலகிலே இயல்பாய் நிகழுஞ் சம்பவங்களைப்பற்றி நம்மில் வந்த அனுபவமே ஆதாரமாய்நடக்கும் அனுமானமாம். அது வேதனுமானம், துல்லியானுமானம், கதார்த்தானுமானம் எனும் முப்பகுப்பிணையுடையது.

### க. வேதனுனுமானம்.

வேதனுனுமானம் என்பது விசேடவிடய கதங்களினாற் சாமானிய பிரமேயத்தை அளக்கும் நியாயம், அல்லது வேதனஞ்செய்யப்பட்ட பொருள்களைக்கொண்டு அவைசார்ந்துநிற்கும் இனத்தையுஞ் சாதியையும்பற்றிச்சாதிக்கும் அனுமானமாம். (வேதனம் என்பது

நாம் எடுத்துத்தேரும் பட்சத்துடனே மருவிநிற்கின்ற
கதம் விடயம் எனும்பொருள்களை ஒன்றின்பின்னொ
ன்ருய் வேண்டிய அளவு ஆராய்ந்து அவற்றினுக்கும் ப
ட்சத்தினுக்குமுள்ள சம்பந்தசார்புகளை ஐயந்திரிபறத்
தெளிந்துதரல் ஆம்.) உலகிலே சடசித்துக்களின்நானு
விரிவானபொருள்களனைத்தையும் நிலையான சம்பங்
தசார்புகளை ஒன்றற்கொன்றுடையதாய் கடவுள் தி
தித்தேயிருக்கின்றனர் என்றும் இறந்தகாலத்துப்போல
வே வருகாலத்தும் பொருள்களும் பொருட்சம்பந்தமும்
இயலுமென்றும் மாந்தரின் புந்தியிலே இயற்கையுஞ் ச
கசமுமாய் உறையும் பிரஞ்ஞையே வேதனுநுமானத்
திற்கு ஆதாரமாம். சடசித்துப்பொருள்கள் ஒன்றற்கொ
ன்றுள்ள சம்பந்தசார்புகளை அனுபவத்தாற்றேளிந்த
றிகின்றனம். இவ்வனுபவமுமோ சம்பவநிகழ்ச்சியள
வில் ஒன்றற்கொன்று சார்பாய்த்தொடர்ந்துவருஞ் சி
ற்சில பொருள்களைப்பற்றியேநிற்கும். சிலவிடத்து இ
ந்த அனுபவமானது, ஐயைந்து இருபத்தைந்து எனுஞ்
சித்தாந்தம்போலே தெள்ளிதாயிருக்கும். ஒரே இனத்
துக்குரிய பலபொருள்களிலே ஒரு இலட்சணம்விளங்
கி, அவ்வினத்து எப்பொருளைக்காணுங்காற்பரீட்சிக்கி
னும் எதிர் இலட்சணமின்றி அவ்விலட்சணமேதோன்
றின், அவ்வினம் முற்றுக்கும் அந்த இலட்சணம் அவி
னுபாவமாய் உரியது எனத்துணிகின்றனம்

உதாகரணமாய், ஒருகாந்தச்சலாகையின் சந்நிதி
யிலே பற்பல இரும்புச்சின்னங்கள் ஈர்க்கப்படுமேல்
காந்தபைசாங்கட்குள்ள நிருவிகற்பமான ஒற்றுமை
பற்றி, இரும்பெல்லாங் காந்தத்தாற் கருஷிக்கப்படும் எ
னத்துணிகின்றனம். நாம் ஆராய்ந்துபரீட்சித்தது உலகி
லுள்ள இரும்புட்சிலவற்றையேயாயினும், இரும்பனை
த்துங் காந்தத்தால் வலிக்கப்படுமென்று சாதாரணமா
ய்ச்சாதித்தது வேதனுநுமானம்.

மேலும், இன்னபிரமாணமாத்திரைக்கு மேலாய்ச் சூடு
அதிகரித்தாற் சலங்கொதிக்கின்றதெனவும்சூடுஇல்லா
மற்போனுற் சலம் உறைகின்றதெனவுங் கண்டறிந்து
இன்னின்ன உட்டணசைத்திய மாத்திரையிலே சல
மானது எவ்விடத்துங்கொதிப்பதும், உறைவதும், அத

ற்கியற்கையெனத்துணிகின்றனம். இப்படிச் சாதித்ததும் வேதனுமானமேயாம்.

இவ்விதமாய், ஒரேயினமான பலபொருள்களைத்தனித்தனி ஆராய்ந்து பரிட்சிப்பதினாலே அவற்றின் ஒற்றுமைவேற்றுமைநயங்களைத்தெளித்து சடப்பொருள்களின் இலட்சணங்களையுஞ் சம்பந்தசார்புகளையும் பற்றிய சாமானியவிதிகளையும் அறிகின்றனம்.

இவ்வேதனுமானத்தினாற்றானே மனோகரணங்கள் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்தசார்புகளையுந் தெளிகின்றனம்; உதாகரணமாய், புந்தியிலே பலகாலும் இரண்டுகருத்துகள் ஒன்றையொன்று தொடர்ந்து நிகழுமேல், பின்னர் ஒன்றுநிகழ்ந்தக்கால் மற்றையதைப் பிறப்பிக்கும் ஓரியல்பு அவற்றிலேமருவுகின்றது. என்றும், சென்றசம்பவங்களைப்பற்றிப் புந்தியிலுள்ள ஞாபகமானது, அந்நேரம் அங்ஙனஞ்செலுத்திய கமனத்துக்குத்தக்கதாயிருக்கின்றது என்றும், அனுபவத்திலே கண்டுபரிட்சித்து–"கருத்துப்புணர்ப்புக்குக் காலவணிமை இடவணிமைவேண்டிய" எனவும் "ஞாபகத்துக்குக் கமனம்வேண்டியது" எனவுஞ் சாமானியசாத்தியத்தைச்சாதிக்கின்றனம்.

மேலும் வேதனஞ்செய்யப்பட்ட பொருள்களைக்கொண்டு அவைசார்ந்துநிற்கும் இனத்தைப்பற்றிச்சாதித்தவாறே, வேதனஞ்செய்யப்பட்ட இனங்களைக்கொண்டு அவைசார்ந்துநிற்குஞ் சாதியையும்பற்றிச் சாதிக்கலாம். உதாகரணமாய், பல இனங்களிலுமுள்ள பல மிருகங்களின் பாலும் வெண்மையாயிருப்பதுபற்றிஎவ்வினத்துமிருகத்தினது பாலும் வெண்மையெனச் சாதிக்கின்றனம்.

பொன் வெள்ளி இரும்பு ஈயம் முதலான லோகங்கள் நெருப்புக்கு உருகுதல்பற்றி எவ்வகைலோகமும் நெருப்புக்கு உருகுமென்று அனுமிக்கின்றனம்.

மாடு ஆடு மான்முதலியகொம்புள்ள மிருகங்கள் இரைமீட்டல்பற்றி கொம்புள்ள மிருகமனைத்தும் இரைமீட்கும் எனமுடிக்கின்றனம்.

மக்கள் யானை குதிரை முயல்வௌவால் சுறவுமுதலிய சராயுசங்கட்குத் தோற்காதிருத்தல்பற்றி, சராயுசமனைத்துந்தோற்காதுடையனவென்றுசாதிக்கின்றனம்.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

பருந்து கழுகு பாம்பு முதலை ஓந்தி புறவு முதலிய அண்டசங்கட்குத் துளைக்காதிருத்தல்பற்றி அண்டசமனைத்துந் துளைக்காதின என்று அனுமிக்கின்றனம்.

கதம் விடயம் எனும் பொருள்களை வேண்டியளவு ஆராய்ந்து பரீட்சைசெய்யாமல் அப்பொருள்கள் சார்ந்த இனத்தைப்பற்றி அனுமானஞ்செய்யின் அவ்வேதனானுமானம் வழுவாம். பிறகாரணங்கள் இடையிலே தலைப்பெய்தில எனுநிச்சயமுண்டேல், ஆராய்ந்துபரீட்சிக்கவேண்டியபொருள் சொற்பமாயும்,–அன்றேல் ஆராய்ந்து பரீட்சிக்கவேண்டியபொருள்கள் மிகுதியாயும் இருக்கவேண்டும். ஒரு தாமிரத்துண்டமானது தனது சன்னிதியில் அகப்பட்ட இரசத்தை (இதரம்) உறிஞ்சக்கண்டபோதே தாமிரமனைத்தும் இரசத்தை உறிஞ்சுமென்று சாமானியசாத்தியத்தைச் சாதிக்கலாம். ஒரு மருந்து ஒருவனுக்குவந்த ஓர்பிணியை மாற்றினதுகண்டு அம்மருந்து--எவர்க்குவந்த இடத்தும் அப்பிணியை மாற்றுமென்று சாதிப்பது வழுவாம்.

பொருள்களை ஆராய்ந்து பரீட்சிப்பதினால்வரும் அனுபவமானது நிருவிகற்பமாயும், அப்படி ஆராய்ந்து பரீட்சித்தபொருள்கள் வேண்டியளவு பலவாயும் இருக்குமேல், வேதனானுமானம் மெய்மையாம்; அன்றேல் பொய்யும்விளையும்.

ஒருவன் ஒருநூல் வாசிக்குமிடத்துத் தனக்குத்தெரியாத ஒருசொல் அந்நூலுள்வந்து பயிலக்கண்டால், அச்சொல்லின் அர்த்தம் இன்னதென்று அந்நூலுளும் பிறநூலுளும் அதுவந்துபயிலுந் தொடர்பைக்கண்டுகண்டு தெளிந்துகொள்வதும் வேதனானுமானத்தினாலேதான். காலம் தூரம் காரணம் காரியம் முதலியகருத்துப் பொருள்களை இன்னின்னவெனப் பிள்ளைகள்விளங்கவருவதும் இவ்வாறேயாம்.

கரும்பு இனிக்கும், வேம்புகைக்கும், மதுமயக்கும், குயில்பாடும், மயில்ஆடும், என்னும் இவைபோலும் அளவிறந்த சாமானியசாத்தியங்களை யாங்கண்டு பரீட்சித்தசிலபொருள்களைக்கொண்டு சாதிப்பதும் வேதனானுமானமே.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

## உ. துல்லியானுமானம்.

துல்லியம் என்பது சம்பந்தத்தினது சமானம் அல்லது ஒப்பு. உதாகரணமாய்; நீர்மேற்செல்லும் மரக்கலத்துக்கும், நிலமீதூரும் இரதத்திற்கும் உள்ளசம்பந்தசமானமும்; வாயுவில் இயங்குதற்குத்தகும் பட்சிச் சிறைக்கும், நீரிலே உலவுதற்குத்தகும் மீன்செட்டைக்குமுள்ளசமானமும்; ஒருதுயிற்கும் பின்னொருதுயிற்கும் உள்ள ஒப்புமையும்; ஒருகிரகத்திற்தும் வேறொருகிரகத்திற்குமுள்ள சாதுர்சியமும் இன்னபிறவுந் துல்லியம் எனக் கருதவும்படும்.

யாம் ஆய்ந்தறிந்த ஒருபொருளின் இலட்சணம் அப்பொருட்குத் துல்லியமான பிறிதொருபொருட்கும் உண்டென்றுசாதிப்பமேல் அந்நியாயம் துல்லியானுமானம் எனப்படும்.

துல்லியானுமானமும் ஒருவாறு வேதஞனுமானத்தை நிகர்க்கின்றது.

பொருள்களின் இலட்சணகிருத்தியசம்பந்தசார்புகள் எக்காலத்தும் நிருவிகற்பமாயேயிருக்குமெனவும், நிகரானகாரணங்களால் நிகரானகாரியங்கள் பிறக்கும் எனவும், மாந்தரின்புந்தியிலே சகசமாயுறையும் பிரஞ்ஞையே (முன்னர் உரைத்தவாறு) வேதஞனுமானதுல்லியானுமானங்கட்கு ஆதாரமாம். இருபொருள்கட்குள்ளதுல்லியமானது திண்மையாய் அல்லது நொய்மையாய் இருக்கும்பிரகாரமே, அவற்றுள் ஒன்றால்மற்றதைச்சாதித்த அனுமானமுந் திண்மையாய் அல்லது நொய்மையாயிருக்கும்.

வேதஞனுமானமுந் துல்லியானுமானமும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாயிருந்தும், அவையொவ்வொன்றையும் வேற்றுமைப்படுத்தியறியுஞ் சிறப்பிலட்சணங்களும் உண்டு. வேதஞனுமான நடையனைத்துந்துல்லியானுமான நடையினின்றே பிறக்கும். அவ்விருவகையனுமானங்கட்குமுள்ள வியத்தியாசம் எவையெனின்,—

க. வேதஞனுமானமானது ஒருஇனத்துக்குரிய தனிப்பொருள் பலவற்றைக்கொண்டு அவற்றின் இனத்தைப்பற்றிச்சாதித்தலாம், ஆகவே வந்தசாத்தியமுஞ் சாமானியானுமானமாம். மேலும் ஒருசாதிக்குரிய இனங்

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

கள்பலவற்றைக்கொண்டு அவற்றின் சாதியைப்பற்றிச்சாதித்தலாம்; இங்ஙனமும்வருஞ்சாத்தியம் சாமானியானுமானமேயாம் துல்லியானுமானமோ, ஒரு இனத்துக்குரிய தனிப்பொருள் ஒன்றைக்கொண்டு அவ்வினத்துக்குரிய பிறிதொருபொருளையேனும் ஒருசாதிக்குரிய இனமொன்றைக்கொண்டு அச்சாதிக்குரிய பிறிதொரு இனத்தையேனும் அனுமித்தலாம்.

௨. ஒருபொருளிலே இருகுணங்கள் சகிதமாயிருத்தல்பற்றி அப்பொருளை நிசர்க்கும் பின்னொருபொருளிலும் அவ்விருகுணங்கள் சகிதமாயேயிருக்கவேண்டியதென நேர்முகமாய் அறுதியிடற்குறுதியின்மையின், துல்லியானுமானத்தில் வருஞ்சாட்சி நேர்முகமின்றியதாம். வேதனானுமானத்திலோ ஒரு இனத்தைப்பற்றிச்சாதித்த ஒருகுணம் அல்லது இலட்சணம் அவ்வினத்திற்குரிய பலபொருளிலுமுண்டென நேர்முகமான சாட்சியுண்டு. ஆனாலும் ஒரு இனத்துக்குரிய பொருள்களனைத்தையும் ஆராய்ந்துபரீட்சிப்பது ஏலாமையின், ஆராய்ந்து பரீட்சித்தமட்டுக்கு நேர்முகச்சாட்சியும் ஒழிந்தவற்றிற்கோ துல்லியானுமானப்பிரமாணமுமாம்.

துல்லியானுமானத்தினால்வருஞ்சாத்தியஞ் சந்தேகத்துக்குமிடனானது. இரண்டுபொருள்கள் பலஇலட்சணங்களிலே சமானமாய்த்தோன்றுங்கால் உள்ளதற்குமேலேயும் அச்சமானத்தைஏற்றிக்கொள்ளுகிறோம். மிருகங்களுக்கும் மனுஷருக்குமுள்ள உடற்கூறுகளிற் பல ஒன்றற்கொன்று சமானமாயிருத்தல்பற்றி, மிருகங்களின் உடற்கூறுகள்போலேதான் மனுஷரின் உடற்கூறுகளுமென்று சாதிக்கின் வழுவாம். அப்படிவழுவென்பது மனுஷரின் உடற்கூறுகளைத் தற்காலத்துப்பரீட்சைசெய்ததினால் விளங்குகின்றது. நாம் வாசஞ்செய்யும்பூமிக்கும் மற்றுங்கிரகங்களுக்கும் பலசமான இலட்சணங்களுண்டு. அவ்விலட்சணங்களாவன; சூரியனைப்பரிவர்த்தனஞ்செயல், தத்தம் அச்சிலேசுழலல்; கருஷணைவிதிக்கமைதல், வாயு சஞ்சரித்தல்;– இச்சமான இலட்சணங்களைக்கொண்டு கிரகங்களும் இபபூமியேபோற் சீவபிராணிகளின் உறைவிடமெனச் சாதிப்பதுந் துல்லியானுமானம். இவ்வண்ணமே நட்சத்திரங்களுங் கிரகங்களேபோற் சீவபிரா

ணிகளின் உறையிடமெனச்சாதிப்பதுந் துல்லியானுமானமேயாம் துல்லியானுமானத்தினாலன்றிப் பிற அனுமானங்களாற் சாதிக்கவராத பொருள்களுமுண்டு சத்தசாத்திரியானவன் இலக்கணநூலிற்சொல்லியவிதிகளைக்கொண்டு சொல்லாதவற்றிற்கும் இலக்கணம்முடிப்பதும், மன்றிலேவாதிக்கின்ற நியாயதுரந்தரனானவன் தர்ம்மசாத்திரம்முதலியவற்றிற் சொல்லியிருக்கும் விதிவிலக்குகளைக்கொண்டு சொல்லாதவற்றிற்கும் விதிவிலக்குகள் அமைப்பதும், வைத்தியனானவன் வாகடநூலிற்சொல்லிய முறைகளைக்கொண்டு சொல்லாதவற்றுக்கும் முறையுரைப்பதும், இன்னபிறவுந்துல்லியானுமானமேயாம். இவ்வகையான துல்லியானுமானஞ் செய்யுமிடத்து, சுருதியுத்தி அனுபவங்களிலே திட்பநுட்பமும் விவேகமும்வேண்டும்; இன்றேல்பொய்படும். மன்றிலே நியாயதுரந்தரர் வியத்தியசமான துல்லியங்களை எடுத்துக்காட்டி விவகரிப்பதினாற்றான் விவகாரவாதம்பெருகுவதும், காலம்பாணிப்பதும் நீதியெப்படிமுடியுமோ எனமன்னனசங்கையுறுவதும்பிறவும். வியத்தியசமான துல்லியங்களை ஒன்றோடொன்று புணர்த்தி நீதி இங்ஙனம் இப்படிமுடியுமெனத் தெரித்துரைப்பதிலேயே மந்திரியின் மந்திரவலிமைவிளங்குவது.

சிலேடையான உபயார்த்தத்தின் சந்தேகந்தெளியவுந் துல்லியானுமானம் மிகவுதவும்.

## ௫. கதார்த்தானுமானம்.

கதம் என்பது இயற்கையாயேனுஞ் செயற்கையாயேனும நிகழ்ந்தசம்பவமாம். கதார்த்தானுமானம் என்பதுகதத்தைஅளத்தற்பொருட்டுச் செய்யும்அனுமானமாம். கதங்கள் மெய்மையோ பொய்மையோவென அளக்கும்படி அக்கதங்களை அல்லது அவற்றுடனியைந்த சிலஎளிவலக் கண்டவர்களின் சாட்சிவேண்டியது. இச்சாட்சி மூவகைப்படும், அவை உரைச்சாட்சி அயற்சார்புச்சாட்சி, உரையயற்சாட்சி. நமதுகாட்சி அனுபவங்கட்கு வராதகதங்களைப் பிறருடைய உரைச்சாட்சிமூலமாயே நம்புகிறோம்; உதாகரணமாய்,

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.31000000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

ன்றனம் அல்லம். முன்னருரைத்த சுலட்சணங்களே
இலிபிதவுரையிலுந்தோன்றவேண்டிய. மேலும் மெய்
மையை மொழிவதினும் சொற்பொருளலங்காரங்க
ளையே முக்கிய இடமாய்க்கருதி இயற்றப்பட்ட செய்யுள்
களின்சாட்சியைத் திட்பநுட்பவிசாரணையின்றி அங்
கீகரிததல் யோக்கியமும் விவேகமுமல்ல.

வாக்குரைகளெனினும் இலிபிதவுரைகளெனினும்
ஒன்றொடொன்று ஒற்றுமையாய்ப்பிரதான காரியங்க
ளனைத்திலும்இணங்கிமற்றவைகளிலேசொற்பவியத்
தியசந்தோற்றுவிக்குமேல், அவ்வியத்தியசம் ஒருசம்ப
வத்தின்பேரிற் பலருஞ்சாட்சிபகருமிடத்து இயற்கையி
லேவரவேண்டியதேஆதலின். அந்தவியத்தியசமே அச்
சம்பவம் பொய்மையென உறுதிப்படுத்தற்கிடனுனது.

உ. அயற்சார்புச்சாட்சி அயற்சார்பு என்பது ஒருச
ம்பவத்தோடடுத்த துணைக்காரியமேயாம். சிலசம்பவ
ங்கள் யாதொருவனுங்காணுதனவாயும் நிகழ்ந்திருக்கு
ம்; அங்ஙனமேல் அயற்சார்புச்சாட்சியாலே அச்சம்
பவத்தைப்பற்றிச் சாதிக்கலாம். அயற்சார்புச்சாட்சி
யானது மேலையுரைத்தவாக்குச்சாட்சியினும் அதிக உ
றுதியானதாகவும்வரும். என்னையோவெனின், அயற்
சார்பானகாரியங்களிலே மெய்மையைமாற்ற அல்ல
து மறைக்கக்கூடிய இயல்பில்லை. சொல்லிய கதம்நி
கழ்ந்தாலன்றித் தோன்றுமெனநம்ப இடமில்லாத சில
காரியங்களைக்கண்டனமேல், அக்கதம்அவ்வயற்சார்
புச்சாட்சியால் மெய்மையென்றே முடியும். இதுவே
கதார்த்தானுமானம்.

அயற்சார்புச்சாட்சியால்வரும் உறுதியைத் துணிபு
என்னலாம். சொல்லியகதம் நிகழ்ந்தாலன்றி அயற்
காரியங்கள்தோன்ருவேல் இத்துணிபு திண்மையாயும்
நிகழாமலுந்தோன்றுமேல் இத்துணிபு நொய்மையாயு
ம்நிற்கும். ஒருவனத்திலே மாடமொன்று தோன்றின்
அவ்வனத்திலேசிலர் முன்னேவாசஞ்செய்தாரென்று
துணிதற்கிடனும்; வாசஞ்செய்திலரேல் மாடந்தோன்
ருது, வாசஞ்செய்தனரெனிற்ருன் மாடந்தோன்றும்.
ஆகலான் இங்ஙனந்துணிபு திண்மையாம். ஒருசீட்டி
லெழுதிய எழுத்தின்சாங்கத்தைக்கண்டு அவ்வெழுத்து
இன்னுனுடைய எழுத்தைப்போன்றிருத்தலின் அவனே

Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd
Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY

அதை எழுதினானெனத்துணியின் அத்துணிபு நொய்மையாம், பிறரும் அவனுடைய எழுத்துப்போல எழுதக்கூடும், ஆகலில் துணிபுக்கு ஆதாரமான அயற்காரியங்களை முதலே நன்றாய்த்தேர்ந்துதெளியவேண்டியது.

௫. உரையயற்சாட்சி. உரைச்சாட்சியும் அயற்சார்புச்சாட்சியும ஒருகதத்தின்பேரில்வருமெனின் அவ்விருசாட்சியும் ஒன்றற்கொன்று அணையாய் ஒன்றை ஒன்றுவலியுறுத்தும். புதிதாய்நிகழ்ந்த ஒருகதத்துக்கும் அநுபவத்திலே முன்னர் நாங்கண்டறிந்த பின்னொருகதத்துக்குமுள்ள ஒற்றுமையையே அயற்சார்புச்சாட்சி என இங்ஙனங்கருதியது.

இருப்பநெய் தேங்காய்நெய் முதலியன பனிக்காலத்திலே உறைவது மிகவழக்கமேயாதலின், போன தை மாதம் ஒருதடந்தேங்காய்நெய் உறைந்திருக்கக்கண்டேன் என்று ஒருவன்சொன்னால் அவ்வுரையை நம்பாமல்விடோம். போனவருஷம் ஆனிமாதம் மதுரைநாட்டிலே பெருவெள்ளம் போட்டது என்றொருவன் சொன்னால், அவ்வுரையை விரைவிலே நம்போம்.

---

# சிவஞானசித்தி அளவை.

## பிரமேயசித்தி பிரமாணமின்றி இல்லையாதலின், பிரமாணங் கூறுகின்றது.

௧. அளவைகாண்டல்கருதலுரையபாவம்பொருளொ
ப்பாறென்பர் [ணநான்
அளவைமேலுமொழிவுண்மையைதீகத்தொடியல்பெ
களவைகாண்பரவையிற்றின் மேலுமறைவரவையெ
ல்லாம் [கிடுமே.
அளவைகாண்டல் கருதலுரையென்றிம்மூன்றினடங்

இச்செய்யுளினது தாற்பரியம். பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், அபாவம், அருத்தாபத்தி, உபமானம் என அளவைப்பிரமாணம் ஆறென்று பாட்டனும் வேதாந்தியும்

மொழிவார்; இப்பிரமாணமாறனுள் அபாவப் பிரமாணமொன்றையுந் தள்ளி, பிரமாணம் ஐந்தென்று அருகனும் பிரபாகரனும் உரைப் பார்; இவ்வைந்தனுள், அருத்தாபத்தியொன் றையுந்தள்ளி, பிரமாணம் நான்கென்று நை யாயிகன் செப்புவன்; இந்நான்கனுள் உப மானமொன்றையுந்தள்ளி, பிரமாணம் மூன் றென்று சாங்கியனுஞ்சைவசித்தாந்தியுஞ்சொ ல்வார்; இம்மூன்றனுள், ஆகமமொன்றையு ந்தள்ளி, பிரமாணம் இரண்டென்று பௌத் தனும் வைசேடிகனுங் கூறுவர்; இவ்விரண் டனுள் அனுமானமொன்றையுந்தள்ளி, பிர மாணமொன்றென்று லோகாயதன் நிகழ்த்து வன். மேலையுரைத்த ஆறு பிரமாணங்களுட னே பாரிசேடம், சம்பவம், ஐதீகம், சுபாவ ம் எனு நான்குபிரமாணங்களைக் கூட்டியுஞ் சொல்வார்; இவற்றின்மேலுஞ்சொல்வார்.

இப்பிரமாணங்களுட் பிரத்தியட்சம், அனுமானம், ஆ கமம் எனுமூன்றும் மேலைச்செய்யுட்களிலே வகுத்து விரிக்கப்படும் ஆதலின், ஒழிந்த பிரமாணங்களை இ ங்ஙனம் உதாகரணங்களால் முறையே விளக்குவாம்.

அபாவம்.—முயற்கோடில்லையென்றவழி இல்லையெ ன்றுகோடல்.

பிராகபாவம், பிரத்தோங்சாபாவம், அன்னியோன் னியாபாவம், அத்தியந்தாபாவம், என்று அபாவம்நான் கெனக்கூறினருமுளர்.

அருத்தாபத்தி.—கட்டில் கூப்பிட்டதென்புழி, முக்கிய ப்பொருளுரைக்கிற் பொருள்பகைக்குமாதலின், ஆதார லக்கணையினாற் கட்டிலிலிருக்கும் புருடன்கூப்பிட்டா ன் என்றுகேவுணப்பொருளுரைத்தல்.

உபமானம்.—மரைபசுப்போலெனக் கேட்டவன், க ண்டுழி, உபமானத்தாற் புணர்த்தியறிதல்.

பாரிசேடம்.—சாத்தன் அல்லது கொற்றன் கள்ளன்

என்புழி, சாத்தன் கள்ளனல்லனெனின் கொற்றனே கள்ளனென்னல்.

சம்பவம்.-ஒருகல் இரும்பைக்கருஷிக்குமெனின், அக்கல்லுக்காந்தமென்றறிதல்.

ஐதீகம்.—இம்மரத்திற் பேயுண்டெனக்கேட்டவன், தானும் அவ்வாறுகோடல்.

சுவாபம்.—சிங்கந்தானே அரசன் என்புழி சாமர்த்தியசாதுர்சியலக்கவணயினுற் சிங்கநிகர்க்குஞ் சாமர்த்தியவான் எனப்பொருள்கோடல்.

"உற்றெதிரேகாண்டல் பிரத்திட்சமனுமானமோங்குபுகைகண்டு நெருப்புண்டெனவேயுணர்தல்—மற்றுவமை மரைபசுப்போலென்றல் சத்தம் பெரியோர்வாய்மொழியர்த்தாபத்திமதர்த்தவுடலதனுல்—அற்றை யுபவாசியோளித்துண்பானென்றுணர்தல் அபாவமுன்பினிடையொருகாலத்துமிலையென்றல்—நற்றியவிம்மரத்தினிற் பேயுண்டெனல் ஐதீகம் நாட்டுதலே சம்பவம்ப்ரமாணமெட்டாய்நவிலும்." எனக்கூறினுருமுளர்.

உ. மாசறுகாட்சியையந்திரிபின்றிவிகற்பமுன்னு
ஆசறவறிவதாகுமனுமானமவினுபாவம்
பேசுறுமேதுக்கொண்டுமறைபொருள்பெறுவதாகுங்
காசறுமுரையிம்மானத்தடங்கிடாப்பொருளக்காட்டும்.

இச்–யம். பொறிபுணர்ந்தசிற்சத்திக்குறிப்பிரத்தியட்சமாவது சந்தேகவிபரீதங்களின்றி நிருவிகற்பசவிகற்பமாய்க்காண்பது. சாதனம் புணர்ந்த சிற்சத்திக்குறி அனுமானமாவது நீக்கமின்றியுள்ளசாதனங்கோண்டு பிரத்தியட்சத்துக்குமறைந்த வஸ்துவை அறிவது. அர்த்தவாக்கியம் புணர்ந்தசிற்சத்திக்குறி ஆகமமாவது பிரத்தியட்சானுமானங்கட்கு அதீதமாகிய வஸ்துவைக்காட்டுவது.

௩ கண்டபொருளையிரட்டுறவேகருதலையந்திரியவே
கொண்டறிரிவாம்பெயர்சாதிகுணமேகன்மம்பொருளே

துண்டவிகற்பவுணர்வினுக்குப்பொருளினுண்மைமாத்
திரத்தின்
விண்டவில்லாவறிவாகும் விகற்பமில்லாக்காட்சியே.

இச்-யம். சந்தேகப்பிரத்தியட்சமாவது போதுவிலக்கணமாய்ப்பார்த்த ஒருபொருளைக் கானலோ சலமோ என்றுகருதுவது. விபரீதப்பிரத்தியட்சமாவது, போதுவிலக்கணமாய்ப்பார்த்தகானலைச் சலமென்றுகொள்வது. சவிகற்பக்காட்சியாவது தாண்டவன் எனப்பெயரும் பிராமணன் எனச்சாதியும், சிவப்பன் எனக்குணமும், தேவபூசகன்எனக்கன்மமும், இவன் எனப்பொருளும் பெறவரும் பதார்த்த விகற்பங்கள் ஐந்தையுந்தெளிவது. நிருவிகற்பக்காட்சியாவது பெயர் சாதி குணம் கன்மம் எனும் பதார்த்தவிகற்ப நான்கினையும் ஒட்டி வசனித்தலேலாது பொருளின் உண்மையை மாத்திரஞ்சார்ந்துநிற்கும் அறிவு.

ச. காண்டல்வாயின்மனந்தன்வேதனையோடியோ
கக்காட்சியென
ஈண்டுநான்காமனுமானந்தனக்கும்பிறர்க்குமென்றிரண்
டாம் [ன்றும்
மாண்டவுரைதந்த்ரமந்திரத்தோடுபதேசச்சொலெனமூ
பூண்டவளவைக்கெதிரபுலன்றன்னியல்பு பொதுவே
ன்றிரண்டாமே

இச்-யம். பிரத்தியட்சமானது இந்திரியப்பிரத்தியட்சம், மானதப்பிரத்தியட்சம், சுவேதனைப்பிரத்தியட்சம், யோகப்பிரத்தியட்சம், என நால்வகையாம். அனுமானமானது, சுவார்த்தானுமானம், பரார்த்தானுமானம், என இருவகை. ஆகமமானது தந்திரகலை மந்திரகலை உபதேசகலை எனமூவகை. பிரமாணத்துக்கு எதிரிடுவது பிரமேயம். பிரமேய

மானது, தன்னியல்புப்பிரமேயம் போதுவியல்புப்பிரமேயம் என இருவகை. தன்னியல்புப்பிரமேயம், அசாதாரண இலக்கணமுடையது. போதுவியல்புப்பிரமேயம், சாதாரண இலக்கணமுடையது. தன்னியல்புப்பிரமேயத்தைச் சிறப்புப்பிரமேயம் என்றும், போதுவியல்புப்பிரமேயத்தைப் போதுப் பிரமேயம் என்றுங்கூறுவர்.

*ரு. அன்னியசாதியுந்தன்சாதியுமகன்றுநிற்ற*
*றன்னியல்பன்னியத்தைத்தவிர்ந்துதன்சாதிக்கோத்த*
*றுன்னியபோதுவியற்கை சோன்னவிவ்விரண்டினுள்ளே*
*மன்னியபோருளியாவுமடங்கிடுமானமுற்றுல்.*

இச்-யம். ஒருபோருள் அன்னியசாதியையுந் தன்சாதியையும் நீங்கியிருத்தலே தன்னியல்பு; அருச்சுனன் என்பதுபோல. ஒருபோருள் அன்னியசாதியைநீங்கித் தன்சாதிக்குச்சமமாயிருத்தலே போதுவியல்பு; மனுஷன் என்பதுபோல. போருள்களனைத்தும் போதுப்பிரமேயஞ் சிறப்புப்பிரமேயம் எனும் இருவகையுளேயே அளக்கப்படும்.

*கூ. உயிரினேடுணர்வு வாயிலொளியுருவாதிபற்றிச்*
*சேயிர்சவிகற்பமின்றித்தேரிவதிந்திரியக்காட்சி*
*அயர்விலிந்திரியஞானமைம்புலன்சார்ந்துயிர்க்கண்*
*மயர்வறவந்தஞானமானதக்காண்டலாமே.*

இச்-யம். இந்திரியப்பிரத்தியட்சம் என்பது ஆன்மாவுடனே அறிவானது இந்திரியத் துவாரங்களினுல் ஒளிமுதலியகோண்டு ரூபசத்தபரிசரசகந்தங்களைப்போருந்தி, சந்தேகவிபரீதசவிகற்பமின்றி நிருவிகற்பமாய்க் காண்பது. மானதப்பிரத்தியட்சமேன்பதுநிருவிகற்ப

Digitized by EMORY UNIVERSITY Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd

மான இந்திரியப்பிரத்தியட்சமானது பஞ்சப் புலங்களையுஞ்சார்தலான், ஆன்மாவினிடத்துச்சந்தேகவிபரீதமற விளங்குஞ்சவிகற்பஞானம்.-எனவே, நாமசாதிகுணகிரியாபேதந்தெளியாமல்வஸ்துவின்சத்துவமாத்திரத்தையே காண்டல் இந்திரியப்பிரத்தியட்சம். நாம சாதி குணகிரியாவஸ்துபேதந் தெளியக் காண்டல், மானதப்பிரத்தியட்சம்.

எ. அருந்தின்பதுன்பமுள்ளத்தறிவினுக்கராகமாதி[டிப்
தருந்தன்வேதனையாங்காட்சிசமாதியான்மலங்கள்வாட்
பொருந்தியதேசகாலவியல்பகல்பொருள்களெல்லாம்
இருந்துணர்கின்றஞானம்யோகநற்காண்டலாமே.

இச்-யம். சுவேதனைப்பிரத்தியட்சம் என்பது, இராகங்கலை நியதிமுதலிய தத்துவங்களானவை சுவயோன்முகியாகிய ஆன்மாவினது பரோன்முகியாகிய அறிவுக்கு;-போக்கியமாகிய சுகதுக்கபோகங்களை விளைவிக்க;-அதுபற்றிப்பரோன்முகிக்கு நிரன்னியமும் ஆதாரமுமாய சுவயோன்முகியடையுமனுபவமாம். யோகப்பிரத்தியட்சமென்பதுசிவயோகத்தினலே மும்மலங்களையும் வாட்டி சிவயோகத்திலிருந்தே தேசகாலவியற்கைகளையும் பொருள்களனைத்தையுங்காணுஞ் சாட்சாற்காரமாம்.

அ. பக்கமூன்றின்மூன்றேதுவுடையபொருளைப்பார்
த்துணரத் [மானக்
தக்கஞானந்தன்பொருட்டாம் பிறர்தம்பொருட்டாமனு
தோக்கவிவற்றுற்பிறர்தெளியச்சொல்லலாதுமச்சொல்
லு [ண்டாம்.
மிக்கவன்னுவயத்திைெடு வெதிரேகச்சொ லெனவிர

இச்-யம். பட்சம்மூன்றிற் சாதிக்கப்படும் பிரமேயங்களை யூகித்தறிய மூவேதுக்களினது தகைமை பொருந்தியஞானஞ் சுவார்த்தானு

மானம். மறைபொருள்களைப் பிறர்தெளியப் பட்சவேதுக்களாற்சொல்வது பரார்த்தானுமானம். இங்ஙனங்கருதிய சொல்லானது அன்னுவயச்சொல் வியதிரேகச்சொல் என்றிருவகை. அன்னுவயச்சொல் என்பது சாதனசாத்தியங்களின் மெய்மையாகிய உள்ளமையைச்செப்புதல். வியதிரேகச்சொல் என்பது மாறிச்,சாதனசாத்தியங்களின் இல்லாமையைச் செப்புதல்.

பக்கங்களையும் ஏதுக்களையுஞ் சொற்களையும் மேலைமுறையேவிரிக்கின்றார்

கூ. மூன்றுபக்கம்பக்கநிகர் பக்கநிகரில்பக்கமெனத்
தோன்றும்பக்கந் துணிபொருளுக்கிடமாமுவமைநிகர்ப
க்கம் [ல்
ஆன்றபொருள்சென்றடையாதவிடமாநிகரில்பக்கமுத
ஏன்றவிரண்டும்பொருளுண்மைக்கிடமாமொன்றுபொ
ருளின்றாம்,

இ-ள். பட்சம்மூன்றுவன, பட்சம் சபட்சம் விபட்சம். சாதிக்கப்படுவனவாயவன்னி கர்த்தா முதலிய பொருள்கட் கிடமாகிய மலை உலகுமுதலியபொருள் பட்சம். திட்டாந்தத்தானமாகிய அடுக்களை குடம்முதலிய இடம்சபட்சம். சாதானசாத்தியங்களாகிய, தூமம் அக்கினிமுதலிய பதார்த்தங்கள் பொருந்திமுடியாத மடுமுதலியதானம் விபட்சம். சபட்சம்பட்சம் எனுமிரண்டும் சாதனசாத்தியங்களினது உள்ளமைக்குத்தானம். விபட்சமோசாதனசாத்தியங்களினது இல்லாமைக்குத் தானம்.

ய. ஏதுமூன்றாமியல்புகாரியத்தோடனுபலத்தியிவை
ஓதினியல்புமாமரத்தைக்காட்டலூறுகாரியம்புகைதன்
ஆதியானஅனல்காட்டலாகுமனுபலத்தியது [னே.
சீதமின்மைபனியின்மை காட்டல்போலுஞ்செப்பிடி

இச்-யம். ஏதுமூன்றுவன-இயல்பேது காரியவேது அனுபலத்தியேது. இயல்பேதுஎன்பது இயற்கைச்சார்பானஏது. உ-ம். மா என்று ஒரு மரத்தின் பெயராதலின், மா என்ற இடத்தே அதுமரத்தைக்குறித்து நிற்பது. காரியஏதுஎன்பது செயற்கையாகிய காரியத்தாற் காரணத்தைத் தெளியுமேது; உ--ம், -புகையாகிய காரியந் தனக்குக்காரணமாகிய அக்கினியைக் காண்பிப்பது. அனுபலத்தியேது என்பது ஒன்றைப்பற்றிய ஞாநுபாவத்தால் அதனை விளைவிக்கும்பொருள் அபாவத்தையறிவது; உ-ம்.-குளிரைப்பற்றிய ஞாநுபாவமானது பனியின் அபாவத்தைப்பற்றிய ஞானத்தைப் புந்தியிலே தோற்றுவிப்பது.

கக. புகையாலனலுண்டடுடுக்களைபோலென்னப் புகறலன்னுவயம்
வகையாமனலிலாவிடத்துப்புகையின்றுகுமலரினெடு
முகையார்நீரிற்போலென்றுமொழிதல்வெதிரேகச்சொலிவை [ர்துணிந்தே.
தொகையாருறுப்பைந்தொடுங்கூடச்சொல்லுவாருமுள

இச்--யம். இந்தமலையில் அனலுண்டு,-புகையுடைத்தாதலால்,—எங்கெங்கே புகையுண்டு,-அங்கங்கே யனலுண்டு,-எப்படி,-அடுக்களைபோல-என்று நிச்சயம்பண்ணுவது அன்னுவயம். இந்தமலையில் அனலுண்டு,-புகையுடைத்தாதலால்,-எங்கெங்கேயன்லில்லை,--அங்கங்கேபுகையில்லை,-எப்படி,-நீர்நிலைபோல்,-என்று நிச்சயம்பண்ணுவது வியதிரேகம். இங்ஙனம் உதாகரித்தவாறு,-பட்சம் ஏது திட்டாந்தம் எனுந் திரியாங்கங்களினலன்றி,-பட்சம் ஏது திட்டாந்தம் உபநயம் நிகமனம்

எனும் பஞ்சாங்கங்களினாலும் நிச்சயம்பண்ணுவாரும் உளர்.

உதாகரணம்.

க. உலகுஒருகர்த்தாவையுடைத்து பட்சம்,
காரியத்தன்மையால் ஏது,
யாதொன்றுகாரியம், அதுகர்த்தாவையுடைத்து-
எப்படி; கடம், திட்டாந்தம்.
அப்படிஉலகிதுகாரியம் உபநயம்
ஆகையால், அப்படி உலகிதுகர்த்தாவையுடைத்து நிகமனம்.

உ உலகு ஒருகர்த்தாவையுடைத்து பட்சம்
காரியத்தன்மையால் ஏது
யாதொன்றுகர்த்தாஇல்லது, அதுகாரியமன்று, எப்படி, அழனம்—திட்டாந்தம்.
அல்ல அப்படி இது உபநயம்.
ஆகையால் அல்ல அப்படி இது நிகமனம்.

பிரத்தியட்சானுமானமும் அனுமானானுமானமும் ஆகமானுமானமும் கிரமத்திலே உதாகரித்துணர்த்துகின்றார்.

கஉ. போதுநாற்றத்தாலறிதல்பூர்வக்காட்சியனுமானம்
ஓதுமுறையாலறிவினளவுணர்தல்கருதலனுமானம்
நீதியான்முற்கன்மபலநிகழ்வவிப்போதிச்செய்தி
ஆதியாகவரும்பயனென்றறிதலுரையாலனுமானம்.

இ-ள். பூர்வங்கண்டு மோந்த தாழம்பூ மணத்துக்கோத்தமணம் வீசலால், இவ்விடத்திலே தாழம்பூ உண்டென்று, வாசத்தினாலே புட்பத்தை அறிவது பூர்வப்பிரத்தியட்சானுமானமாம்;-முன்னர் சட்சிந்திரியப்பிரத்தியட்சமாகி நின்று, ஆக்கிராணேந்திரியப்பிரத்தியட்சமாய்க் கிருகித்தற்கிடனாய் நின்ற விடயமாகிய தாழம்பூவையே, பின்னரும் ஆக்கிராணேந்திரியப் பிரத்தியட்சமான கந்தத்தால் அனுமித்தலின், பூர்வப்பிரத்தியட்சானுமானமா

யிற்று. ஒரு ஆசிரியன் சாத்திரப் பொருளைப் போதிக்கின்ற முதிர்ந்த வார்த்தையானது மானதப்பிரத்தியட்சத்திற் றோற்றும் முதிர்ந்த புத்திபூர்வமாய் வருதல் கண்டு,- "இவன்முதிர்ந்த புத்திமான்-சாத்திரப்பொருள் போதிக்கும் முதிர்ந்த வார்த்தையைவசனித்தலால்" என்று (வார்த்தை புத்திபூர்வமாய் வருமென்றனுமித்து-வார்த்தையினுயர்ச்சியாற் புத்தியினுயர்ச்சியை அனுமிப்பது) "ஒதுமுறையாலறிவினளவுணர்தல்" அனுமானானுமானமாம்;— வார்த்தையாகிய ஏதுக்கொண்டு மறைபொருளாகிய புத்தியை அனுமித்து, வார்த்தைமுதிர்ச்சியாகிய ஏதுக்கொண்டு மறைபொருளாகிய புத்தி உயர்ச்சியை அனுமித்தலின், அனுமானானுமானமாயிற்று. "பேறிழவின்பமோடுபிணிமூப்புச்சாக்காடென்னும்--ஆறுமுன்கருவுட்பட்டதவ்விதியனுபவத்தால--ஏறிடு முன்புசெய்த கன்மமிங்கிதனுக்கேது--தேறுநீயினிச்செய்கன்மமேலுடற்சேருமென்றே." என்பது ஆகமவாக்காதலின்;--இம்மையிலே நிகழ்கின்ற சுகதுக்கபோகங்கள் முறைமையிலே முந்திய சென்மங்களிற்செய்த ஆகாமியங்களிற்றிரண்ட சஞ்சிதத்திற் பொசிப்பான பிராரத்வபலமாம்; ஆனபடியால்,-இம்மையிலே இயற்றும் ஆகாமியகன்மங் காரணமாய் மறுமையிலே சுகதுக்கபோகங்கள் வந்துபொருந்தும்; என்றனுமிப்பது ஆகமானுமானமென்பர்.

ஆகமம் இன்னதென்றும் அதன் பகுப்பிலக்கணமிவ்வாறென்றும் உணர்த்துகின்றார்.

கச. அனாதியேயமலனாயவறிவனூலாகமந்தான்
பினாதிமாறின்றிப்பேணறந்திரமந்திரந்தான்
மனாதிகளடக்கித்தெய்வம்வழிபடும்வாய்மையாகுந்
தனாதியீறிலாதான்றன்மையுணர்த்துவதுபதேசந்தான்.

இச்-யம். ஆகமம் என்பது அனாதிமூலமுத்தனாகிய சருவஞ்ஞனது சாத்திரமாம்; அவ்வாகமம், தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை, எனமூன்றாம்; அவற்றுள், தந்திரகலையாவது சரிதாகிரியாபாதப்பகுப்பாதலால், பின்னோடுமுன்மலைவின்றிச் சரிதாகிரியாகிருத்தியம்போதிப்பதாம். மந்திரகலையாவது, யோகபாதப்பகுப்பாதலால், சித்தேந்திரியங்களை அடக்கிக் கடவுளைச்சேபதியானாதிகளால் வழிபடும்முறையைப்போதிப்பதாம். உபதேசகலையாவது உற்பத்திநாசமின்றிச் சுயம்பரமாயிருக்கின்ற கடவுளின் இலட்சணத்தைப்போதிப்பதாம்.

கரு. ஈண்டுபக்கப்போலிநான்கேதுப்போலியோருமூன்றா[பான்
வேண்டுமேழுமூன்றாகவிளங்குவமைப்போலி யீரோன்
காண்டுந்தோல்வித்தானமிரண்டிருபத்திரண்டாங்கருதிலிவை[கும்.
ஆண்டுமொழிவரிவையெல்லாமளக்கிலறுபத்தைந்தா

இச்-யம். அனுமானப்பிரயோகஞ் செய்யுமிடத்து பட்சாபாசம்நான்குவரும்; ஏதுவாபாசம்மூன்றாயும் இம்மூன்றே இருபத்தோன்றாயும்வரும்; திருட்டாந்தாபாசம் பதினேட்டுவரும். நிக்கிரகத்தானம் இரண்டாயும் இந்த இரண்டே இருபத்திரண்டாயும் வரும்; இவ்வாபாசங்களின் தொகை அறுபத்தைந்து.

முற்றிற்று.

Digitized by EMORY UNIVERSITY
Original from EMORY UNIVERSITY
Generated on 2020-06-13 03:33 GMT / https://hdl.handle.net/2027/emu.300000413472
Public Domain / http://www.hathitrust.org/access_use#pd